# கூட்டுப் பண்ணை

இடசேரி கோவிந்தன் நாயர்

கித்திய அக்காதெமி

T
891.481 22
N 143 K
2
N 143 K





# கூட்டுப்பண்ணை

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனனுக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச் சிற்பம்—கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூஸியம். புது தில்லி.)

இடசேரி கோவிந்தன் நாயர்

# கூட்டுப்பண்ணை

*மலையாள நாடகம்*

*தமிழாக்கம்:*

ரா. சௌரிராஜன் (சௌரி)

சாகித்திய அக்காதெமி

*Kootuppannai* (Malayalam play) by Etasseri Govindan Nair with a special introduction by K. P. S. Menon. Translated into Tamil by R. Sourirajan. Sahitya Akademi, New Delhi. Reprint (1987)

**SAHITYA AKADEMI**
**REVISED PRICE Rs. 15-00**

T
891.481 22
N 143 K

© சாகித்திய அக்காதெமி

முதற் பதிப்பு: 1964
இரண்டாம் பதிப்பு: 1987

Library IIAS, Shimla
T 891.481 22 N 143 K
00117382

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்:

ரவீந்திரபவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி 110 001

கிளை அலுவலகங்கள்:

29, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018

பிளாக் V–B, ரவீந்திர சரோபர் ஸ்டேடியம், கல்கத்தா 700 029

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் 400 014

**SAHITYA AKADEMI**
**REVISED PRICE Rs. 15-00**

117382
14/12/04
SHIMLA

அச்சிட்டோர்: டையோசிசன் அச்சகம், சென்னை 600 007

# அறிமுகம்

கலைஞர் ஸ்வாட்ஸ்கி மாஸ்கோ கலை அரங்கத்தின் (ஆர்ட் தியேட்டர்) இயக்குநர். அவர் நான்கு—ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, கலாசாரக் குழுவில் ஒருவராக அமெரிக்கா சென்றார். அங்கு கலையன்பர்களின் கூட்டமொன்றில் கலைஞர் ஸ்வாட்ஸ்கி பேசினார். அப்போது, அவர் செகாவ் இயற்றிய 'செர்ரி ஆர்ச்சர்ட்' என்ற நாடகத்தின் முதல் பதினாறு வார்த்தைகள் எவ்வளவு நாடக முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது குறித்துத் தொண்ணூறு நிமிடங்கள் பேசினார். அந்தப் பதினாறு வார்த்தை களின் மொழிபெயர்ப்பு இது:

**லோபாகின்:** ரெயில் வந்துவிட்டது; கடவுளுக்கு நன்றி. மணி என்ன?

**தன்யாஷா:** விரைவில் இரண்டு மணி ஆகிவிடும். (மெழுகு வர்த்தியை ஊதி அணைத்துவிட்டு) அதற்குள் வெளிச்ச மாகிவிட்டது.

இதை வைத்துக்கொண்டுதான் ஸ்வாட்ஸ்கி அவ்வளவு நேரம் சுவைபடச் சொற்பொழிவாற்றியிருக்கிறார். அவரது பேச்சை பத்திரிகை ஆசிரியர்களும், எழுத்தாளரும், முக்கியமாக நாட காசிரியர்களும் நிறைந்த அந்தச் சபையினர் மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

அதேபோன்று, இந்தக் கூட்டுக் கிருஷி நாடகத்தின் முதல் ஆறு வார்த்தைகளைப்பற்றி ஓர் உணர்ச்சிமிக்க விமரிசகனால் பக்கம் பக்கமாக எழுதமுடியும். அந்த ஆறு வார்த்தைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதென்றால் ஆறு வார்த்தைகள் போதா; பதினாறு வார்த்தைகளாவது தேவைப்படும். வேலு எனும் கீழ்ச் சாதிக் குடியானவன், வடக்கு மலபாரைச் சேர்ந்த ஒரு பணக்காரக் கூட்டுக் குடும்பத்தினர் வசிக்கும் பெரிய வீட்டின் முன் தாழ்வாரத்தில் நின்றுகொண்டு, இருமிச் செருமி, பலவாறாக முயன்று, உள்ளே இருப்பவரின் கவனத்தை ஈர்க்க முயலுகிறான். ஒருவரும் வெளியே வராததைக் கண்டதும், ''இந்தப் பெரிய இடங்களிலேயே இதுதான் சங்கடம். ஒரு பிள்ளையாவது வெளியே தென்பட வேணுமே? ஊஹூம்'' என்று முணுமுணுக்கிறான்.

நம் நாட்டுப் பழைய பண்ணை வீடுகளில் காணும் அச்சுறுத்தும் ஜபர்தஸ்து, அது விளைவிக்கும் மனச்சோர்வு, அங்குள்ள சலிப்பு தரும் தனிமை, அந்த வீட்டாரின் ஒதுங்கி வாழும் மனப்பான்மை, அந்தஸ்துப் பாராட்டும் பெரியதனம்—இவற்றையெல்லாம் அந்த ஆரம்ப வரிகள் குறிப்பாக எடுத்துக்காட்டுகின்றன.

நாடகத்தின் முதல் வரிகள் எப்படிக் கருத்துச் செறிவுடையன வாக உள்ளனவோ, அதே போலவே கடைசி வரிகளும் அமைந் துள்ளன. அபூபக்கர் என்ெருரு வயோதிக முஸ்லிம் விவசாயி; அவர் ஒரு ஹிந்து நிலச்சுவான்தாரரிடம் குத்தகைக்காரராக இருந்து வந்தார்; பிறகு, அநுபவ உரிமை உள்ள அந்தக் குத்தகை நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார். கோர்ட்டு வழக்கும் மனத்தாங்கலும் நீடிக்கின்றன. இளம் சந்ததியாரிடம் குடும்பப் பொறுப்பு வந்ததும், அவர்கள் அபூபக்கரைச் சக விவசாயியாகச் சேர்த்துக்கொண்டு, கூட்டுப் பண்ணைச் சாகுபடி செய்கிருர்கள். மனத்தாங்கலுக்கும் சந்தேகத்திற்கும் இடையே ஒற்றுமை ஊடுருவி வருகிறது. பண்ணைக்காரரும் பண்ணையாளும் கூடிப் பாடு படும் புதுமை பலருக்கும் அதிசயமாகத்தான் இருக்கிறது. மேலும், சின்ன முதலாளியான சுகுமாரனும், தம் ஒரே மகள் ஆயிஷாவும் காதல் வசப்பட்டு இணைய விரும்புவதைக் கிழவர் அபூபக்கர் அறிகிருர். அந்த இளம் ஜோடியைப் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு, உணர்ச்சி மேலிடக் கூறுகிருர் கிழவர்.

''ஆண்டவனே! இனிமேலே இதற்கு என்ன வழி?''—இத்துடன் நாடகம் முடிவடைகிறது.

தொடக்கத்திலும் முடிவிலும் உள்ள இந்தக் கருத்துச் செறிந்த வரிகளுக்கிடையே ஆவலைத் தூண்டும் மனித இயல்புகளையும் ஆசாபாசங்களையும்கொண்ட நாடகம் நடைபெறுகிறது! பொதுவுடைமைத் தத்துவ வாதிகளின் கருத்துப்படி ''வர்க்கப் போராட்டம்''தான் நாடகத்தின் சாரம் (கதைக்கரு). இது இல்லாவிட்டால் நாடகமே இல்லைதான்.

ஒரு சில எழுத்தாளர்கள் ''போராட்டம் கூடாது'' என்கிற கொள்கையை இலக்கியத் தத்துவத்திற்கும் தரத்திற்கும் குறை பாடாகவே கருதி, அடிக்கடி அதைத் தாக்கியும் வருகிருர்கள். இந்தக் ''கூட்டுக் கிருஷி'' நாடகத்தில் ''போராட்ட''த்திற்குக் குறைவே இல்லை. நாடகம் முழுவதிலும் அது தலைதூக்கி நிற்கிறது. பண்ணையாருக்கும் விவசாயிக்கும், இந்துவிற்கும் முஸ்லீமிற்கும், பணக்காரனுக்கும் ஏழைக்கும், முன்னேற்றத்திற்கும் பிற்போக்குக் கும்—இப்படியாக எல்லா வகைப் போராட்டங்களும் இந்நாடகத் தில் இடம்பெறுகின்றன. இப்போராட்டங்களில் ஏதேனும்

ஒன்றே நாடகத்துக்குப் போதுமானது. ஆனால், இடசேரி கோவிந்தன் நாயர் இவை அனைத்தையும் ஒன்றுசேர்த்து, மிக உயர்ந்த அலங்காரச் சிலையாக இந்நூலைப் பின்னியிருக்கிறார். இதே கருத்துக்கள் திறமைக் குறைவான ஒருவரால் கையாளப்படும் போது, சிக்கலும், குழப்பமும், அசுவாரசியமும் நிறைந்ததாகி விடும். இந்த ஆசிரியரின் கையில் இந்நாடகம் சிறந்து, எளிமையுடன் வசீகரமாக அமைந்துவிட்டது.

இத்தகைய நிலைகளை ஆசிரியரால் எவ்வாறு உருவாக்க முடிகிறது? அவர் உண்மையை ஒட்டிப்போவதால்தான் அது சாத்தியமாகியிருக்கிறது. இந்தியக் கிராமங்களில் பொதுவாக மக்கள் வாழ்க்கை தொல்லைகள் மிகுந்ததாக இருந்தாலும், சிக்கல் நிரம்பியதல்ல; அவர்கள் வாழ்க்கையின் அடிப்படியே எளிமை நிறைந்தது.

அபூபக்கரின் மகன் பாப்பு உத்வேகம் நிறைந்த வாலிபன். வேலை தேடிப் பம்பாய் சென்றபோது, அங்கு நடந்த வகுப்புக் கலவரத்தால் மனம் பேதலித்தபோதிலும், அடிப்படைக் குணமான எளிமை அவனிடம் இருக்கவே செய்கிறது. அவன் தன்னை—வகுப்புவெறிகொண்ட தனது இடைக்காலத்து இயல்பை—சீர்திருத்திக்கொள்ளும் திறமைசாலியாகத் தான் சித்திரிக்கப்பட்டிருக்கிறான். தம் தொழில் முறையில் வெற்றிபெறவேண்டி, பண்ணையார், குடியானவர், முதலாளி, தொழிலாளி அனைவரையும் ஊன்றுகோல்களாகப் பயன்படுத்தி வாழும் "நாகரிக மனிதர்" வழக்கறிஞர் நம்பியார்தான் அடிப்படைக் குணநலம் இல்லாதவராக இருக்கிறார்; வெறுக்கத்தக்கவராகவும் ஆகிறார். நம்பியாரை நம்பியே வழக்கை நடத்தி வருகிறார் அபூபக்கர்; வறுமைக் கொடுமையையும் பொருட்படுத்தாமல் அவருக்குப் பணம் கொடுத்து வருகிறார். அப்படியும் அபூபக்கரைக் கடைசியில் கைவிட்டு விடுகிறார். நம்பியார் அந்த நிலைமையில் அபூபக்கரின் மகள் ஆயிஷா, "இனியும் ஏன் அந்த மனிதனை நம்பிக்கொண்டிருக்கிறீர்கள்? நம்பிக்கை வைத்து ஏமாந்தது போதாதா?" என்று கேட்கிறாள் தந்தையிடம். அப்போது, அபூபக்கர் சாந்தமாகப் பதில் சொல்லுகிறார்: "நம்பிக்கை வைக்காமல் வேறு என்ன மகளே செய்வது? நாம் மனிதர்களை நம்பித்தானம்மா வாழவேண்டும். கண்ணுக்கு எதிரே இருக்கிற மனிதனை நம்பாதவன், கண்ணுக்குப் புலப்படாத ஆண்டவனிடம் நம்பிக்கை வைக்கமுடியுமா?"

நெஞ்சைத் தொடும் இதேபோன்ற வாக்கியங்கள் பலப்பல. ஆசிரியர் கையாண்டுள்ள உரைநடை எளிமையும் ஜீவனும்

நிரம்பியது. நிச்சயம் அது ஆசிரியரின் சொந்தச் சரக்கு அல்ல; புனை மொழியுமல்ல. கிராமத்தாரின் எளிய—இயல்பான பேச்சுக்களே இடம்பெற்றுள்ளன. கிராமத்தில் வாழும் பலதரப்பட்ட மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் நடைமுறைப் பழகுமொழிதான் அது. பல இடங்களில் வாக்கிய அமைப்பு குறையுள்ளதாக இருக்கிறது. உச்சரிப்புக்கு ஏற்றவாறு அமைத்துள்ள சொற்களும் கொச்சையாகவும், சில புரியாதவையாகவும் உள்ளன. ஆனாலும், அவை சுவையாகவும், சோகமும் உணர்ச்சியும் மிக்கவையாகவும் உள்ளன. அவைகளை வேறு மொழிகளில் அதே தரத்தில் பெயர்த்துக்காட்டுவது மிகக் கடினம். புத்தகத்தின் (நாடகத்தின்) முதல் வரியைக்கூட ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. மொழி பெயர்ப்பாளர் எவ்வளவுதான் கெட்டிக்காரராக இருந்தாலும், இந்நாடகத்தின் விறுவிறுப்பான நடையைப் பூரணமாக எடுத்துக் காட்டுவது சிரம சாத்தியமான செயல்தான்.

வர்க்கப் போராட்டத்தைச் சித்திரிப்பதால் இந்நாடகம் மார்க்சீய விமரிசகர்களை மகிழ்விக்கலாம். ஆனால், இதில் போராட்டங்களை விவரிக்கக் கையாளப்பட்டுள்ள முறை மார்க்சீயத்திலிருந்து மிகவும் வேறுபட்டது. தீவிர மார்க்சீய வாதிகள் இந்த நாடகத்தை ஒப்புக்கொள்ளக்கூட மாட்டார்கள். காரணம், இப்போராட்டங்கள் முடிவில் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து, சமாதானமாகி இணைவதாகவே சித்திரிக்கப் பட்டுள்ளன. கேரளத்தின் இன்றையச் சூழ்நிலைக்கு இந்த முடிவு அவ்வளவு ஏற்புடையதாகத் தோன்றுது. காந்திஜிக்கு மிகவும் பிடித்தமான வார்த்தைகளால் எடுத்துக்கூறுவதானுல், முக்கிய கதாபாத்திரங்களான—பண்ணையார், குடியானவர், இந்து, முஸ்லீம்கள் ஆகிய யாவரும் ''மனமாற்றம்'' அடைகிருர்கள். இந்து நிலச்சுவான்தாரரால் (நாடகத் தொடக்கத்திற்கு முன்பே இவர் காலமாகிவிடுகிருர்) நிலத்திலிருந்து சாகுபடி உரிமையின்றி வெளியேற்றப்படுவதற்காக வழக்குத் தொடரப்பட்டதோடு, திடீர் பணக்காரனுன மற்றொரு முஸ்லீமால் குடியிருப்பு இடத்தையும்விட்டு அகற்றப்பட்ட முஸ்லீம் விவசாயியாகச் சித்திரிக்கப்படுகிருர் அபூபக்கர். அந்த இக்கட்டான நிலையில், நிலச்சுவான்தாரரின் இளம் சந்ததிகள் ஆதரவு தருகிருர்கள். முற்போக்கு எண்ணத்துடன் தம் இல்லத்திலேயே அந்த முஸ்லீம் குடும்பத்தினரைக் குடியேற்றுகிருர்கள். இந்துக்களைக் ''காபிர் கள்'' என வெறுக்கும் பாப்புகூட (அபூபக்கரின் மகன்) ஆரம்பத்தில் ஆத்திரப்பட்டாலும், கடைசியில் தன் முரண்பாட்டுக்காகப் பச்சாத்தாபப்படுகிருன். இரக்கம் உள்ளவனுகவும் மாறுகிருன். இந்தச் சந்தர்ப்பத்தில் அபூபக்கர் கூறுகிருர்: ''யார் முஸ்லீம்?

யார் காபிர்? அது ஆண்டவன் தீர்ப்பளிக்கும் கடைசி நாளன்று தான் தெரியவரும்.''

பண்ணையாரும் குடியானவரும் ஒன்றுகூடிக் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்து, வழக்கத்தைவிட அதிகமாகவே லாபம் பெறுகிறார்கள். ஆயிஷாவும் சுகுமாரனும் தம் வாழ்வுப் பாதைகளை மனமொப்பி இணைத்துக்கொண்டு சாதி, மதம், நிலை ஆகிய வேலிகளைக் கடந்து ஒரு புதிய பரம்பரைக்கு வழி வகுக்கிறார்கள். அவர்கள் வெற்றிபெற்றார்களா, இல்லையா? அவர்களது முயற்சியின் முடிவு சுபமா, சோகமா—இவை நம் சிந்தனைத் தொடருக்காக விட்டுவைக்கப்பட்ட விஷயங்கள். ஒருகால், இந்நாடகத்தின் ஆசிரியரே, இதன் தொடர்ச்சியாக வேறொரு நாடகத்தை எழுதி அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாட்டுவார் என்றும் எதிர்பார்க்கலாம்.

ஸ்டாலின் காலமாவதற்குப் பதினைந்து நாட்களுக்குமுன்பு, 1952ஆம் வருஷம், பிப்ரவரி மாதம், 18ஆம் தேதி அவரை நான் சந்தித்தபோது, அவர் குறிப்பிட்டுச் சொன்னது, இந்நாடகத்தைப் படிக்கும்போது என் நினைவுக்கு வருகிறது. அவர் சொன்னார்: ''எங்கள் நாட்டு விவசாயி எளிமையானவன்; ஆனால் புத்திசாலி. ஓனாயைப் பார்க்கும்போது அதை அவன் சுட்டு வீழ்த்திவிடுகிறான். ஓனாய்க்கு அவன் நன்னெறியைப் போதிக்க முனைவதில்லை. சுட்டுவிடுகிறான். ஓனாய்க்கும் அது தெரியும். எனவே அதற்கேற்ப அது நடந்துகொள்ளுகிறது.'' இந்த நாடகத்திலும் சில ஓனாய்கள் உண்டு. ஆனால், யாரும் அவைகளைச் சுடுவதில்லை. மாசற்றவர்களும், தவறுபுரிபவர்களும், தொல்லைகொடுப்பவர்களுமாகப் பலதரப்பட்ட மனிதர்கள். இவர்களில் மாசற்றவர்களே பெரும்பாலானவர்கள். இவர்கள் அனைவருக்கும் பின்னே ஒரு தனி மனிதரின் நிழல் உயர்ந்து நிற்கிறது. அன்னாரைப்பற்றி அவர்கள் பெருமையுடன் தங்கள் எளிய—இனிய மொழியில் பாடுகிறார்கள்:

'' . . . நமக்கு வேண்டியே காந்தி பிறந்தார்,
நமக்காகவே அவர் வாழ்ந்து, இறந்தார்;
அவர் பொன்மேனியின் தூய சாம்பலையே
ஆற்று நீரெல்லாம் ஏந்திச் செல்வனவே!
காந்திமகான் பொன்னடிச் சுவடுகளை
நாம் எக்காலும் தொடர்ந்தேகுவமே;
நாமெல்லாம் மகாத்மாவின் சந்ததிகள்,
நாமெல்லாம் அவர் தொண்டர்கள்;
நாம் யாவரும் அவர் நல் மக்கள்தாமே!''

ஒட்டப்பாலம்
2—2—'63

கே. பி. எஸ். மேனோன்

# கூட்டுப்பண்ணை

# களம்: 1

## காட்சி 1

*[ஸ்ரீதரன் நாயருடைய வீட்டின் வெளித் தாழ்வாரம். காலை நேரம்.*

*திரையை உயர்த்தியதும் வேலு—ஐம்பது வயதான குடியானவன்—தாழ்வாரத்தில் உலாத்திக்கொண்டிருக்கின்றான். அங்கே வேறு யாருமில்லை. வேலு இருமிக் கனைத்து, சந்தடி செய்து தான் வந்திருப்பதை அறிவிக்கிறான். இடையே உரக்க, ''எசமான் இருக்காங்களா?'' என்று கேட்கிறான். கடைசியில் சலித்துப் போய்த் தனக்குள் முணுமுணுக்கிறான்.]*

வேலு: இந்தப் பெரிய இடங்களிலேயே இதுதான் சங்கடம். ஒரு பிள்ளையாவது வெளியே தென்பட வேணுமே? ஊஹூம் . . . (ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொள்கிறான்.) நல்ல மெனக்கெடு! சரி, வீட்டைவிட்டுக் கிளம்பறபோது எதன் முகத்தில் விழித்தேனோ? (எழுந்து நின்று மேலும் உரக்க—) எசமான் உள்ளே இருக்காங்களா? . . .

*[வீட்டினுள் இருந்து ஓர் அம்மாள் வெளியே வருகிறாள், சுமார் ஐம்பது வயது இருக்கும். தோற்றத்தில், வீட்டு எஜமானியம்மாளுக்குள்ள அந்தஸ்து புலப்படுகிறது.]*

லக்ஷ்மி அம்மாள்: யாரது? . . . வேலுவாடா? வா! (உள்ளே போய், ஒரு புல்லுப் பாயைக் கொண்டு வந்து மூலையில் விரித்து) வேலு, அப்படி உட்கார்! இப்போதெல்லாம் தீண்டாதவர்களாக இருந்தாலும், இங்கே வெளித் தாழ்வாரத்திலேயே உட்காரணும். நிற்க வைத்துப் பேசினால், என் மகன் ஸ்ரீதரனுக்குப் பிடிக்காது. நீ குந்தியிரு வேலு!

வேலு: அது சரி! ஸ்ரீதரன் எசமான் அப்படித்தானுங்க. (நின்று கொண்டே காலால் தாளமிட்டுக்கொண்டும் தலையைச் சொரிந்துகொண்டும்) எசமானி அம்மா! நீங்க இதையெல்லாம் எப்படிப் பொறுத்துக்கிட்டுப் போறீங்க?

லக்ஷ்மி: பொறுக்கறதாவது, போகிறதாவது? அதெல்லாம் ஒண்ணுமில்லை, வேலு! இதெல்லாம் காலம் செய்கிற கோலம்,

எங்கள் அண்ணன்காலத்தோடே அந்தச் சட்டதிட்டமான பழக்க வழக்கமெல்லாம் மலையேறிப் போய்விட்டதே. இப்போதைய பெரியவங்களுக்கு இதெல்லாம் பிடித்துப் போய் விட்டது. (எதிரே நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, புல்லுப் பாயைச் சுட்டிக் காண்பித்து) நீ சும்மா குந்துடா, வேலு!

வேலு: (நின்றபடியே) ஏனம்மா! உனிச்சுண்டன் எசமான் காலமாகி, இப்போது ஒரு வருசம் ஆயிடிச்சில்லே?

லக்ஷ்மி: இல்லையே. ஆனி வந்தாலல்ல ஒரு வருசம் முடியுது. ம்ஹும்! அப்போதைக்கு இப்போது எவ்வளவு மாறிப்போச்சு! அட கடவுளே! ஒரு 'தாலிப்பொலி' பூசை கிடையாது; புவனேசுவரி விரதம் போச்சு. கருமாதிச் சடங்கெல்லாம் கூடச் செய்யாட்டி ஒரு பிசகும் இல்லேங்கற வரைக்கும் காலம் வந்திடிச்சே! ஈசுவரா! இதுக்கும் நீதானே துணை நிற்கிறாய்?

வேலு: அதொரு இயக்க வேலையால்ல போயிடிச்சு அம்மா! பெரியவங்க மனசிலே இடம் பெறக்கூட இந்தச் சைத்தானுக தயவும் சிபாரிசும் வேண்டியிருக்குதே! அவங்க அவங்க வேலையை அவங்க அவங்க பார்த்துக்கிட்டுப் போகிறதை விட்டுப்பிட்டு, ஸ்ரீதரன் எசமானுக்கு ஏனுங்க இந்தத் தொந்தரவெல்லாம்?

லக்ஷ்மி: (சலிப்புடன்) ஆமாம் வேலு! அதெல்லாம் நீ ஏன் சொல்லுறே? சைத்தானுக செய்கிறதில்லை இதெல்லாம். இந்தக் குடியை நிலைநிறுத்துகிற கடவுள்களாக்கும் அவங்க எல்லோரும்.

வேலு: இந்தக் குடியை நிலைநாட்டி வைச்சதுதான், பெரியவங்க நமக்குச் சம்பாறிச்சு வைத்துப் போயிருக்கிற முதலு.

[ஸ்ரீதரன் இதைக் கேட்டுக்கொண்டே வருகிறான். வயது இருபத்தைந்து. லக்ஷ்மி அம்மாளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து, வேலுவை நோக்கி—]

ஸ்ரீதரன்: அந்தப் பெரியவர்கள் சம்பாதித்ததெல்லாம் அவர்களோடேயே போய்ச் சேர்ந்துவிட்டது வேலு! இனி நம் குடிப் பெருமை நிலைத்து நிற்கவேணுமானால் மனிதன் முயன்று பாடுபடவேண்டும்; முன்னேற வேண்டும்.

வேலு: (புல்லுப் பாயில் உட்கார்ந்துகொண்டு) அந்த முயற்சியிலேயெல்லாம் பிரயோசனம் எதுவும் கிடையாதுங்க, எசமான்!

லக்ஷ்மி: முயற்சி முன்னேற்றமெல்லாம் யார் செய்வது? (ஸ்ரீதரனைப் பார்த்து) சுகுமாரனை இப்படி விட்டேற்றியாய்த்

திரியவிடுவது, சரியா? நீதானே நடைமுறைகளையெல்லாம் கவனித்துக் கொள்ளணும்? அவனை ஏதாவதொரு வேலைக்கு அனுப்பிவையேன்.

வேலு: அதுதானுங்க எசமான், சரியான வழி. சுகுமாரன் ஐயாவுக்கு நல்ல சம்பளம் கொண்ட ஜோலி கிடைக்குமில்லே.

ஸ்ரீதரன்: வேலை எதுவும் கிடைக்காது. அதுக்கெல்லாம் இப்போது பெரிய இடத்துச் சிபாரிசும் தயவும் வேணும்.

லக்ஷ்மி: இப்படிச் சொல்லிவிட்டால் இங்கே எப்படிக் காலம் தள்ளமுடியும்? வருமானம் ஏதும் இல்லாதுபோனால் குடும்பம் எப்படியப்பா நடக்கும்? குத்தகைக்காரனோ ஒரு மணி நெல் தரமாட்டேனென்கிறான்.

ஸ்ரீதரன்: இனிமேல் நாம்தான் சாகுபடி செய்துகொள்ள வேண்டும், அம்மா!

வேலு: யோசனைப் பண்ணிப் பார்த்தால் அதுதானுங்க சரியாய்ப் படுது. உத்தியோகம் செய்து சம்பாதிக்கறது உத்தியோகத்துக்கே செலவாகிப் போகுமே. நிலத்திலே வெள்ளாமை செய்து, ஏதாவது விளைச்சலைக் கண்டால்தானுங்க, குடும்பத்துக்குச் சவுகரியம்.

லக்ஷ்மி: சௌகரியம்தான். அதுக்கு நிலம் நீச்சு வேணுமே. நிலமெல்லாம்தான் குடியானவங்க கையிலே சிக்கியிருக்கே. அப்பனே! அந்த அபூபக்கரோடே கூட்டும் வேண்டாம்; வம்புக்கும் வழக்குக்கும் அலைந்துகொண்டு நிற்கவும் வேண்டாம். எல்லாவற்றையும் தீர்த்துக் கட்டிவிட்டுப் பெரியவங்களும் போய்ச் சேர்ந்துவிட்டாங்க. ம்ஹ்ம்! . . .

வேலு: அந்த அபூபக்கரை அப்போதே சரிக்கட்டி வளைச்சுப் போடாமே போனீங்களே. அம்மா, அந்த ஆளுக்கும் கஷ்டந்தானுங்களே!

ஸ்ரீதரன்: (சிந்தித்தபடியே) சரி, நிலம் கைக்கு வந்துவிட்டால் மட்டும் என்ன? நம் சுகுமாரன் போய் நிலத்திலே இறங்கிப் பாடுபடப் போகிறானா? விதை இறைக்கவேண்டிய நேரத்திலே கவிதை எழுதுகிறேனென்று உட்கார்ந்துவிடுவான். அப்புறம் சாகுபடி சாகு—படிதான்!

[சுகுமாரன் பக்கத்து அறையிலிருந்து வருகிறான். வயது இருபது. எளிய உடை. கையில் புத்தகம் இருக்கிறது.]

சுகுமாரன்: நான் கவிதை எழுதுவதனாலே சாகுபடி வேலை நடக்காமல் நிற்கவேண்டாம். நான் வேளாண்மை செய்யத்

தயார். என்னை உத்தியோகத்திற்கு மட்டும் அனுப்பாதிருந்தால் சரி.

லக்ஷ்மி: ஏண்டா சுகுமாரா! உனக்கும் உத்தியோகம் கசப்பாயிருக்குதா?

வேலு: கசந்துபோகாமே இருக்குமா, எஜமானியம்மா? கையை வீசிக்கிட்டுத் தன்பாட்டிலே போகிற காலத்திலே போய், கண்டவங்க காலைப் பிடிச்சுக்கிட்டுச் சேவுகம் செய்யறதுன்னா, பிடிக்குதுங்களா?

சுகுமாரன்: (ஸ்ரீதரனை நிமிர்ந்து பார்த்துவிட்டு, பிறகு தாயிடம்) நான் கவிதை எழுதுவதாலேதான் வேலையெல்லாம் தடைப்படுகிறதா? கவிதை எழுதாமல் இருந்துவிட்டால் மட்டும், ஆகாசத்திலே உழுது விதைத்துவிட முடியாது, தெரிந்து கொள்ளுங்க!

[எல்லாரும் சிரிக்கிறார்கள். சுகுமாரன், தாயின் பின் பக்கம் வந்து, நாற்காலியைப் பிடித்துக்கொண்டு நிற்கிறான்.]

ஸ்ரீதரன்: விதை இறைக்கிறதெல்லாம் நம் பொறுப்பிலேதான்...

சுகுமாரன்: அதுக்காக? நாம் கையைக் கடித்துக்கொள்ள வேண்டுமா? குடியானவனுக்கு நீடித்த உரிமையையும் கொடுத்துவிட்டு, பண்ணையார் விதைக் கோட்டையையும் எடுத்துப் போனால், கேட்கவே வேண்டாம். குத்தகைக் காரன் வரப்பிலே விதைத்துவிட்டுப் போய்ச் சேருவான். (மீண்டும் எல்லோரும் சிரிக்கிறார்கள்).

வேலு: என்னதான் இருந்தாலும், வெள்ளாமை செய்யறவங்களுக்கு நிறைய வசதிகள் உண்டாயிடிச்சில்லியா?

சுகுமாரன்: உண்டாகட்டுமே! வசதிகள் கிடைக்கவேண்டியது தானே. அதை எல்லாம் ஏற்படுத்திக் கொடுத்தது யார்? குத்தகைக்காரர்களும் நிலத்துக்காரர்களுமா? இல்லை. சீர் திருத்தமென்று சொல்லிக்கொண்டு கிளர்ச்சி செய்கிறார்களே சாதாரணப் பொதுமக்கள்—அவர்கள்தான். அவர்களும்தான் இப்போது . . .

ஸ்ரீதரன்: என்ன இப்போது?

சுகுமாரன்: என்னவா? நம் போன்ற நடுத்தரமான மக்களுக்குத் தான் வந்திருக்கிறதெல்லாம். கூட்டு—கட்டெல்லாம் தகர்ந்துபோய்விட்டது. வெல வெலத்துப் போயிட்டாங்களே! பெரிய பண்ணையார்களை அசைக்கமுடியாது.

குத்தகைக்காரக் குடியானவர்களும் இப்போது கண்டிப்பும் சண்டிப்பும் கற்றுக்கொண்டுவிட்டார்கள்!

வேலு: கண்டிப்பு ஒண்ணுமில்லேங்க, எசமானே! இப்பவும் சரி, எப்பவும் சரி, குத்தகையை அளந்து கொடுத்துத்தானுங்களே ஆகணும்?

லக்ஷ்மி: அதுகூடக் கொடுக்கவேண்டியதில்லே என்றுதானே இப்போது சொல்லத் தலைப்பட்டுவிட்டாங்க!

ஸ்ரீதரன்: அதேதான், அந்தப் போராட்டந்தான் தொடங்கியிருக்கிறது. (சுகுமாரனைப் பார்த்து) ஆனால், அந்தப் போராட்டத்தை நடுத்தர மக்கள் நடத்தவில்லை. குடியானவ ஜனங்களே தலைமை தாங்கி நடத்தி வருகிறார்கள்.

சுகுமாரன்: ஆனால், இதுவரைக்கும் அந்தச் சீர்திருத்தவாதிகளால் கூட இந்தப் போராட்டத்தை எதிர்க்க முடியவில்லையே?

ஸ்ரீதரன்: இல்லை; எதிர்க்கவில்லை. நாமும் அவர்கள் பக்கத்திலே நிற்கிறவர்கள். நாம் துணையாக நிற்கத்தான்வேண்டும்; எதிர்க்கக்கூடாது.

சுகுமாரன்: அதற்காக நாமும் பாடுபடாமல் இருக்கவேண்டுமா? நமக்கு நெல் வந்து சேரவேண்டாம்?

ஸ்ரீதரன்: நாமும் அவர்கள் கூட்டத்திலே சேர்ந்துகொள்ளுவோம். சீர்திருத்தம் மாறுதலெல்லாம் அந்த வழியில்தான் ஏற்படவேண்டும்.

சுகுமாரன்: (யோசனை செய்து) அது நம்முடைய வீண் ஆசை, பிரமை. குடியானவர்கள் இந்துக்களாயிருந்தால் நாம் கூட்டுச் சேரலாம். சிந்தனையும் செயல் வழியும் ஒன்றாக இருந்தால் தான் கூட்டுச் சேரமுடியும். நம் காரியத்தை நாம் முதலிலே பார்த்துக்கொள்ளவேண்டும். மேலும், குடியானவர்கள் பெரும்பாலும் மாப்பிளா முஸல்மான்கள் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

வேலு: அதனாலே என்னங்க எசமான்? மாப்பிளமாருடைய களைக் கொட்டு மாப்பிளமார்கிட்டே இருக்கும். நம்முடைய களைக் கொட்டு நம் கையிலே இருக்கும். அதாவது, அவங்க அவங்க உரிமை அவங்க அவங்க கையிலே.

சுகுமாரன்: அப்படி இல்லே, வேலு! நம் கையிலே களைக்கொட்டும், மாப்பிளமார்கள் கையிலே நிலமும் போய்ச் சேர்ந்திருக்கிறதே? நிலைமை தலைகீழாகவல்லவா மாறிப்போயிருக்கிறது. அவர்களும் நாமும் கூட்டுச் சேர்வது நடவாத செயல். ஒரு காலும் சேரமுடியாது.

ஸ்ரீதரன்: நீ என்னப்பா, ஆர். எஸ். எஸ்.* ஆசாமியா?

[பார்வதி வருகிறாள். பதினைந்து வயது. எளிய ஆடை. கையில் இரண்டு கோப்பைகளும் தேனீர் நிறைந்த கெட்டிலும் இருக்கின்றன.]

பார்வதி: சுகுமாரன் அண்ணன் ஆர்.எஸ்.எஸ்.தான். இங்கே இரக்கிறவர்களை அடிக்கிறதும் வம்பு செய்கிறதும்தானே அண்ணனுக்கு வேலை.

[எல்லாரும் சிரிக்கிறார்கள். சுகுமாரன் பார்வதியை முறைத்துப் பார்க்கிறான். பார்வதி ஸ்ரீதரனுக்கும் வேலுக்கும் தேனீர் கொடுக்கிறாள்.]

சுகுமாரன்: ஆமாம். அது சொல்லுகிறவர்களைப் பொறுத்திருக்கிறது. இப்போதுதான் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் சொல்லுவது சரியா, இல்லையா என்பதைக் கவனிக்க ஆள் இல்லையே?

ஸ்ரீதரன்: சுகுமாரா! நீ சொல்வது சரியில்லை. குடியானவர்கள் முஸ்லீம்களாக இருந்தாலும், அவர்கள் உழைத்துப் பாடுபட்டுத்தானே இத்தனை காலமும் இந்துக்களைப் பராமரித்து வந்திருக்கிறார்கள்.

[வேலு தேனீர் குடிக்கிறான். பார்வதி மேலும் ஊற்றிக் கொடுக்கிறாள்.]

லக்ஷ்மி: அது சரிதான். இவ்வளவு காலமும் இங்கே உள்ளவங்க ஒரு வேலையும் செய்யாமலே இருந்துவிட்டாங்க. நம் வெள்ளாமைக்காரன் அபூபக்கர், குத்தகை நெல்லைக் கொண்டுவந்து அளந்து கொடுக்கறதனாலேதானே நம் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது.

சுகுமாரன்: அவன் நமக்குத் தானமாகவா கொடுக்கிறான்?

ஸ்ரீதரன்: வேறு என்ன? நாம் கட்டாயப்படுத்தி வாங்கிக் கொள்ளுகிற தானம்தானே அது.

வேலு: எசமான்! அபூபக்கரு மாப்பிளாக்காரராயிருந்தாலும் நல்லவருங்க. நான் இப்பத்தான் அவரைக் கண்டுக்கிட்டு வறேனுங்க. உங்களுக்கும் அவருக்கும் இந்த வழக்கு-வம்பெல்லாம் ஆயிட்டாலும், அவருக்கு அந்தப் பழைய நினைப்பும் விசுவாசமும் இப்பவும் இருக்குதுங்க.

லக்ஷ்மி: என்ன சொல்லி அனுப்பினான் அவன்? வழக்குத் தீர வழி இருக்குதாமா, இல்லையா?

* 'ராஷ்டிரிய சுயம் சேவக்' சங்கத்தைச் சேர்ந்த மதவாதி.

வேலு: அதொண்ணும் சொல்லாதீங்க அம்மணி! நாம் முன்னே நின்னு பேசினுல் தீரும்னுதான் எனக்குத் தோணுதுங்க.

ஶ்ரீதரன்: அதை நீ கேட்கவில்லையா? என்ன வேலு நீ! போய் என்ன பேசி வந்திருக்கிறே? இந்தக் குழப்பத்திலே அதைக் கேட்க மறந்துட்டியே!

வேலு: ஆமாங்க. என் வயலிலேயிருந்து தண்ணி வடியல்லீங்க. வெட்டிப் பிரிச்சு, இரண்டு மடைவாய் திறந்துவிட்டால், 'திருவாதிரை நாத்து' நடவுக்குள்ளாறே எல்லாம் வடிஞ்சு போகும். போன புரட்டாசி மாசமும் அதுக்கும் முந்தின புரட்டாசிக்கும் நாத்தெல்லாம் நாசமாய்ப் போயிறிச்சே. தண்ணி வடியத்தான் ஒருவகையும் காணும்!

சுகுமாரன்: ஏன்? அபூபக்கர் சம்மதிக்கவில்லே. இல்லையா? அவர் நிலத்திலேயிருந்துகூடத்தானே தண்ணீர் வடிந்தாகணும்.

வேலு: சம்மதிக்காமல் ஒண்ணுமில்லேங்க. ஆனுல், வெறுமனே மடைவெட்டி தண்ணியை வடியவிட்டால் போருதுங்க. அதன் பக்கத்திலே சின்ன வாய்க்காலாய் வெட்டியாகணும். அதுக்குத்தானே எவ்வளவோ முண்டிப் பார்க்கிருரு அபூபக்கரு.

ஶ்ரீதரன்: அதுக்கு நீ சம்மதிச்சுட்டியா?

வேலு: சம்மதம் நீங்கல்ல தரணும்னு சொல்லுருரு. வழக்கும் வம்புமாய் இருக்கிறப்போ, என்ன செய்யறதுன்னு சொல்லச் சொன்னுரு.

ஶ்ரீதரன்: (சுகுமாரனைப் பார்த்து) பார்த்துக்கொள்! முஸல்மான் என்பதோ இந்து என்பதோ இங்கே பிரச்சினே இல்லே. குடியானவனும் குடியானவனும் என்றைக்கும் கூட்டாளிகள் தான். இன்று இல்லாவிட்டாலும் நாளைக்குச் சேர்ந்து கொண்டுவிடுவார்கள். எதிர்க்கட்சி என்றைக்கும் முதலாளி தான்.

பார்வதி: அண்ணு! சாயா குடிங்களேன். ஆறிப்போகும்.
[ஶ்ரீதரன் தேனீர் குடிக்கிருன்.]

ஶ்ரீதரன்: சுகுமாரன் குடித்தாகிவிட்டதா?

பார்வதி: ஓ! இரண்டுவாட்டி குடித்தாயிடுச்சு.

சுகுமாரன்: (அறையில் நடந்துகொண்டு) ஆமாம். நல்லாத் தின்னுல்தானே வேலே செய்யமுடியும்!

[ஶ்ரீதரனின் பின்பக்கமாக வந்து, கையிலுள்ள புத்தகத்தால் பார்வதியின் தலேயில் தட்டுகிருன்.]

பார்வதி: அம்மா! இங்கே பாரேன்!

[சுகுமாரன் விரலை உதட்டில் வைத்து 'பேசக்கூடாது' என்று குறிப்பாக அறிவிக்கிறுன்.]

லக்ஷ்மி: (சுகுமாரனிடம்) நான்தான் சொன்னேனே; உனக்கு வேலை வெட்டி எதுவும் இல்லாதபோளுல், இங்கே வீட்டிலே உள்ளவங்களுக்குச் சங்கடந்தான். நிம்மதி கிடையாது.

ஸ்ரீதரன்: (வேலுவிடம்) ஆகட்டும். நானும் வருகிறேன். அபூபக்ரைப் போய்ப் பார்க்கலாம். இன்னும் சில சங்கதிகளும் பேசணும், அபூபக்கரிடத்திலே. (திரும்பிப் பார்த்து, வாசல் படியியில் நிற்கும் சுகுமாரனிடம்) சரி, அபூபக்கரும் நாமும் உடன்பாட்டுக்கு வந்துவிட்டால் நீ வேளாண்மைக்குப் போகவேண்டும், தெரிந்ததா?

சுகுமாரன்: (திரும்பிப் பார்த்து) அந்த மாப்பிளாக்காரன் மரியாதை—அவமதிப்புக்கெல்லாம் பார்த்தால் இங்கே நடக்காது. ஆம்மாம்! நான் போய் எவன் காலையும் பிடிக்கமுடியாது.

ஸ்ரீதரன்: (சிரித்துக்கொண்டே தாயிடம்) அம்மா! உங்கள் மகன் இப்போதும் அந்தப் பழைய கெடுபிடிப் பண்ணையாராகத்தான் விளங்குகிறுன், பார்த்தீர்களா?

(எல்லாரும் சிரிக்கிருர்கள்)

## காட்சி 2

[அபூபக்கருடைய வீடு. வெளித் தாழ்வாரம். நடுப்பகல் வேளை. தாழ்வாரத்தில் சாகுபடிச் சாதனங்கள் சில கிடக்கின்றன. தண்ணீர் இறைக்கும் மரப் பட்டைக் கூடை, கைக்கொட்டு, ஒரு கட்டில், இரு நாற்காலிகள், ஒரு பெஞ்சு.

அபூபக்கர் கட்டிலில் உட்கார்ந்திருக்கிருர். அறுபது வயது. நாட்டுப்புறத்து மாப்பிளா (முஸல்மான்) உடுத்தும் சிவப்புத் துணியை முண்டாக அணிந்திருக்கிருர். கீழே தாம்பூல உமிழைத் துப்பும் கோளாம்பிப் பாத்திரம் இருக்கிறது. ஸ்ரீதரன் நாயரும் வேலுவும் வருகிருர்கள்.]

அபூபக்கர்: உட்காருங்கள். இரண்டு பேரும் வந்து உட்காருங்கள்.

[ஸ்ரீதரன் நாற்காலியில் உட்காருகிறான்.]

வேலு: (சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு, வெளித் தோட்டத்தைக் காண்பித்து) பெரியவரே! அங்கே ஏன் தண்ணீரையே காணோம்? பூக்களெல்லாம் வாடி உதிர ஆரம்பிச்சிடிச்சே. மழை இல்லாட்டி பாக்கு மரமெல்லாம் நிலைக்குமா?

அபூபக்கர்: ஆண்டவன் மனசு வெச்சதெல்லாம் நிலைச்சுத்தான் இருக்கும், வேலு!

ஸ்ரீதரன்: பூங்கொத்து வாசனை கம்மென்று மணக்குதே! பாக்குப் பூ வாசனையே தனி.

அபூபக்கர்: ஸ்ரீதரன் நாயரே! அப்போது முதல் உங்களுடைய மாமாக்காரருதான் எங்களை இந்தப் பேஜார் நிலைமையிலே கொண்டு வந்து வெச்சிருக்காக.

ஸ்ரீதரன்: அதைப்பற்றிப் பேசி, ஒரு சமாதானத்துக்கு வரத்தான் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம் (வேலுவைப் பார்க்கிறான்).

வேலு: ஆமாம். குடியானவன்—மிராசுதார் தவுசல் பாருங்க இது? நேரிடையாகவே பார்த்துப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டியதுதான் முறை.

அபூபக்கர்: ஒண்ணும் சொல்லிக்கவேண்டாம். நம்பளுக்கு இப்போ எத்தினி பேஜார்—கஷ்டம் தெரியுமா? நம்பளுக்கு ஒரு மகன் இருந்தான், தெரியுமில்லே?

ஸ்ரீதரன்: யார்? பாப்புதானே? என்ன நடந்தது?

அபூபக்கர்: அவன் ஓடியில்லே போயிட்டான்.

வேலு: கஷ்ட காலம்! ஏன் அவனுக்கு அப்படித் தோணிச்சு?

அபூபக்கர்: ஏனோ? இவுகளைத்தான் கேளேன். (ஸ்ரீதரனைச் சுட்டிக் காண்பிக்கிறார்.)

ஸ்ரீதரன்: (வியப்புடன்) எனக்கு ஏதும் தெரியாதே.

அபூபக்கர்: நீங்க தெரிஞ்சு வச்சுக்கணும்! உங்களது மாடுகள்தானே வயலிலே பாடுபட்டு, நெல் விளைச்சுத் தருகிறது. அதுகளிலே ஒரு மாடு ஓடிப்போய்விட்டால், அதுபத்தி உங்களுக்குத் தெரியாம இருக்கலாமா? நீங்களே பாருங்க. மழைக் காலத்திலே மழை பெய்திருக்கு. வயலிலே பரம்படிப்பு முடிஞ்சிருக்கா? நிலமெல்லாம் மல்லாந்து கிடக்கிற மாதிரியல்ல இருக்குது!

வேலு: மாப்பிளே! அதுக்கு ஸ்ரீ தரன் எசமான் என்ன செய்வாரு? இவரு பேரிலே என்னங்க பிசகு?

அபூபக்கர்: வேலு! நீயா இப்படிக் கேட்கிறே? நீயும் ஒரு குடியானவன்தானே? என்னை இந்த நிலத்திலேயிருந்து ஒழித்துக் கட்ட, இவுகளுடைய மாமா பிராது கொடுத்தாக. இப்போதைக்குக் குடிசையையும் சேர்த்து ஜப்தி செய்வாக. உள்ளதையெல்லாம் விற்று, பொறுக்கி எடுத்து, கோர்ட்டுச் செலவை நடத்திக்கிட்டு வர்றேன். உழைக்கிறவனுக்கு வவுத்திலே அடி; பட்டினி போதாதின்னுட்டு, அவமானம் வேறே... (ஆத்திரத்தில் வார்த்தை கிடைக்காமல் நிறுத்திக்கொள்ளுகிருர்).

ஸ்ரீதரன்: ஏனே மாமா அப்படிச் செய்துவிட்டார். எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. அதைப்பற்றிப் பேசி ஒரு உடன்பாட்டுக்கு வரத்தான் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்.

அபூபக்கர்: நிமிரு ஒண்ணும் சொல்லவேண்டாம். எனிக்குன்னு வந்தாச்சின்னு யாருமே ஆதரவுக்கு இருக்கமாட்டாக. ஏத்தம் வேண்டாம்; இறைப்பு வேண்டாம்; உழவு—சாகுபடி எதுவும் வேண்டாம்! ஆமாம், நம்பளுடைய சாகுபடியே வேண்டாமெண்டு நிமிரு மாமாக்காரரு பண்ணிவிட்டாக. எவ்வளவு 'தக்கிலீபு' (சங்கடம்) தெரியுமா எனக்கு? பேஜாரெல்லாம் கொடுத்திட்ட பிறகு, இப்போது வந்து ஆலோசிக்கலாம்னு நிமிரு ஏதுக்காக இங்கிட்டு வரணும்? (எழுந்திருந்து அங்குமிங்கும் நடக்கிருர்.)

வேலு: (கூடவே நடந்துகொண்டு) அபூபக்கரே! அப்படியெல்லாம் நீங்கள் பிடிவாதம் பிடிக்கக்கூடாது.

அபூபக்கர்: நீ என்ன இப்படிச் சொல்லுறே, வேலு! எனக்குத்தான் எல்லாம் ஆயிடிச்சே. நிலத்துக்கு ஒரு கேசு; குடியிருக்கிற இடத்துக்காக வேறொரு கேசு; அது வீட்டுக்காரரர் போக்கருடைய பங்கு. மகன் ஓடிப்போனபோது படுத்தவள் தான்; இன்னும் என் பீவி எழுந்திருக்கவில்லே. தொழுவத்திலே இப்போது இரண்டே இரண்டு மாடுகள்தான் மீதி இருக்குது. தண்ணீர் காட்டக்கூட நாதியில்லே. என்ன வேலு, கேட்டுக்கிட்டியா?

வேலு: மாப்பிளே! உங்களுக்கு மகன் ஓடிப்போன விசனந்தான், பாவம்! யாருக்கும் ஏற்படுகிறதுதானே, இது.

அபூபக்கர்: அதைச் சொல்லு! (கோபப் படபடப்பு அடங்குகிறது. உள் பக்கம் பார்த்து, ''ஆயிஷா!'' என்று கூப்பிடுகிருர்.) நீ உட்காரு வேலு! (பெஞ்சியைக் காண்பிக்கிருர்.)

வேலு: வேண்டாம், மாப்பிளே! நான் இப்படித் தரையிலேயே குந்திக்கிறேன். அந்த முட்டிப் பலகையைக் கொஞ்சம் இங்கிட்டுத் தள்ளுங்க.

*[அபூபக்கர் முட்டிப் பலகையை நீட்டுகிறார். வேலு அதை வாங்கி, அதில் உட்கார்ந்துகொள்ளுகிறான். ஆயிஷா வந்து அபூபக்கர் பக்கத்திலே நிற்கிறாள். கறுத்த முண்டும், ரவிக்கையும், தலைத் துணியையும் அணிந்திருக்கிறாள். நாட்டுப்புறத்துத் தோற்றம். வயது பதினைந்து.]*

அபூபக்கர்: அந்த வெத்திலைப் பெட்டியை இங்கிட்டுக் கொண்டு வா, ஆயிஷா!

*[ஆயிஷா வெற்றிலைச் செல்லத்தை எடுத்து வந்து ஸ்ரீதரனுக்கு எதிரே வைக்கிறாள்.]*

ஸ்ரீதரன்: (சிரித்துக்கொண்டு) எனக்கு வெற்றிலை போடுகிற வழக்கம் இல்லை. வேலுவுக்குக் கொடு.

ஆயிஷா: இல்லாட்டிப் பாக்குத் தூளையாவது அடக்கிக் கொள்ளுங்க. காக்கா* கூட பாக்குத்தான் போட்டுக் கொள்ளுவாக.

ஸ்ரீதரன்: (சிரித்துக்கொண்டு) சரி, அப்படியே செய்யலாம். (பாக்குத் தூளை எடுத்துக்கொள்ளுகிறான்).

*[ஆயிஷா வெற்றிலைப் பெட்டியை வேலுவிடம் கொடுக்கிறாள்.]*

ஆயிஷா: கறம்பிப் பசு கன்னு போட்டுடிச்சா வேலு?

வேலு: போட்டுடிச்சு பெண்ணே! காளைக்கன்னு.

ஆயிஷா: (அப்பா பக்கத்தில் சென்று) கறம்பிப் பசு காளைக்கன்னு போட்டா, நாம்ப வாங்கிக்கணும்னு காக்கா (அண்ணன்) சொன்னுகளே.

அபூபக்கர்: (ஆற்றாமையுடன்) எப்போ பார்த்தாலும் 'காக்கா, காக்கா'ன்னு நச்சரிச்சுக்கிட்டு இருக்காதே, ஆயிஷா!

வேலு: தீண்டல் கழியட்டும். இங்கினியே கொண்டாந்து கட்டிப் பிடறேன்.

அபூபக்கர்: அது இப்போதைக்கு வேண்டாம் வேலு. நம்பளுக்கு அது வாங்கக்கூடிய காலமாயில்லையே இது.

---

* 'காக்கா' (சிற்றப்பன்) அண்ணனை அழைக்கவும் இச்சொல் வழங்கும்.

வேலு: இருக்கட்டும், மாப்பிளே! இந்த வேலுவுக்கும் குழந்தை குட்டிகள் இருக்கிறுங்க.

ஸ்ரீதரன்: நம் வேலையைப்பற்றிப் பேசுவோமா? ஒரு தீர்மானத் திலே கொண்டுவந்து வைக்கணுமென்றுதான் வந்திருக் கிறேன். ஏதாவது சொல்வதற்குள்ளேயே நீங்கள் கோபப்படு கிறீங்க. என்ன செய்ய?

அபூபக்கர்: நம்பளு கோவப்படறதில்லே, குழந்தே! கோவப் பட்டதும் இல்லே. வருத்தம் சந்தோசமெல்லாம் உங்களுக்குத் தான். எங்க மாதிரி ஏழைக் குடியானவப் பயலுங்களுக்கு அதெல்லாம் இருக்கமுடியுமா? என்ன வேலு, நான் சொல்லுறது?

வேலு: ஆமாம், மாப்பிளே! நாமெல்லாம் வருத்தப்பட்டுக் கிட்டால் கட்டுப்படியாகுமா? கோபப்பட்டுத் தான் என்ன ஆதாயத்தைக் கண்டிட்டோம்?

அபூபக்கர்: உன்னுடைய எஜமான்மார் கண்ணே உருட்டி நம்பளேப் பயமுறுத்திஞக. ''நிலத்தைவிட்டு வெளியேறுடா சாயுபு!'' ண்டு விரட்டிஞக. இப்போ இந்தச் சின்னவரு வந்து சிரிக்கிருக; சமாதானம் பேசருக. இவுகளும் நிலத்தை விட்டுப் போடான்னு தான் சொல்ல வந்திருக்கிருக. இரண்டும் ஒண்ணுதான் (எல்லாரும் சிரிக்கிருர்கள்).

ஸ்ரீதரன்: (எழுந்திருந்து) அப்படியொன்றும் தீர்மானப் படுத்திக் கொள்ள வேண்டாம் பெரியவரே! எல்லாரும் ஒண்ணு போலே இருப்பாங்கன்னு சட்டமா? மாமா அந்தக் காலத்து ஆசாமி. அப்போதெல்லாம் நிலத்தைவிட்டு நீக்குவது சர்வ சாதாரணமாக இருந்தது.

வேலு: ஆமாம் மாப்பிளே! அதையும் பார்க்கணுமில்லே.

ஸ்ரீதரன்: இன்று காலம் மாறிவிட்டது. பண்ணேயாராகப் பிறந்தது என் குற்றமில்லே. நீங்களும் கஷ்டந்தான் படுகிறீர் கள்; நாங்களுந்தான் கஷ்டப்படுகிறோம். உங்களுக்காவது கையிலே வேலே இருக்கிறது; அநுபவம் இருக்கிறது. நான் சாகுபடி வேலேயிலே இறங்கலாமென்ருல் பயிற்சி கிடையாது, வேலேயும் கிடைக்காது. இதுதான் எங்களுடைய நிலேமை.

அபூபக்கர்: அது சரி; நிமிரு சின்னப் புள்ளேயாயிருந்தாலும் 'பக்கா'வாகத்தான் பேசுகிறீங்க!

ஸ்ரீதரன்: இந்த நிலேயிலே நான் இருக்கிற போது, காலத்தை ஒட்டி எப்படி நடந்து கொள்ளலாமென்று யோசனே கேட்கத் தான் உங்களிடத்திலே வந்திருக்கிறேனே ஒழிய, பண்ணே

முதலாளி என்கிற அதிகாரத்திலே உங்களை விரட்ட நான் வர வில்லை, பெரியவரே!

அபூபக்கர்: (ஆலோசித்து) ஆனால் ஒண்ணு; நான் நிலத்தை விட்டுப்பிடறதாக இல்லை. பின்னே எதுக்காகப் பேச்சை வளர்த்தணும்?

ஸ்ரீதரன்: நிலத்தை விடவேண்டாம். இப்போது என்ன சொல்லு கிறீர்கள்?

அபூபக்கர்: கோர்ட்டுச் செலவும் தர முடியாது. என்னை வீணுக்கு நீங்க நஷ்டப்படுத்தி விட்டீங்க.

ஸ்ரீதரன்: கோர்ட்டுச் செலவும் வேண்டாம்; போகட்டும்.

அபூபக்கர்: (வியப்படைந்து) பின்னே? நிமிரு என்னைக் கேலி செய்யத்தான் வந்திருக்கிறீக! கொளந்தே! ஒரு காரியம். மாப்பிளேயைக் கேலி பண்ண மட்டும் கோஷிஸ் (முயற்சி) செய்யவேணும்; ஹாம்மாம்!

வேலு: சொல்லி முடியறத்துக்கு முந்தியே மூஞ்சி மேலே அறையற மாதிரிப் பேசிப்பிட்டா என்ன செய்யறது? உங்களைக் கேலி செய்திட்டுப் போகிறதுதானா எங்களுக்கு ஜோலி?

அபூபக்கர்: பின்னே? கீழ்க்கடையிலே நடந்தமாதிரி நடக்கணுமா? நடக்கவேண்டாம்.

ஸ்ரீதரன்: ஆனால், ஒரு சிறு வித்தியாசம், நீங்கள் நிலத்தைக் குத்தகைக்கு வாங்கியிருக்கிறது நல்லதில்லை. அதனாலே லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை.

அபூபக்கர்: அப்படியானால் நாங்களு நிலத்தை விட்டு விலகிக் கொள்ளணும்டு சொல்லுறீக?

ஸ்ரீதரன்: இல்லை, அப்படி இல்லை.

அபூபக்கர்: வேலு, என்னாலே இதையெல்லாம் புரிஞ்சுக் கொள்ள முடியவில்லை.

ஸ்ரீதரன்: புரிந்துகொள்ளுகிறபடி நான் விளக்கமாகச் சொல்லு கிறேன்.

[நம்பியார் உள்ளே வருகிறார். வழக்குகளை நடத்திக் கொடுப்பவர்; இதே பிழைப்பு இவருக்கு. வயது ஐம்பது. வழக்கு சம்பந்தமான தஸ்தாவேசுக் கட்டு கையில் இருக்கிறது. வந்தவர் வாசல் பக்கமே நின்று விடுகிறார். யாரும் அவரைக் கவனிக்கவில்லை. ஸ்ரீதரன் பேச்சைத் தொடருகிறான்—]

ஸ்ரீதரன்: நம் நிலம் இரண்டு திசையிலே பிரிந்து கிடக்கிறதில்லையா? நடு எல்லையாக வேலு நிலம் கொஞ்சம் இருக்கிறது. எல்லா நிலங்களையும் ஒரே நிலமாக ஆக்கிவிடுவோம். அதிலே உங்கள் பிள்ளைகளும் வேலை செய்யும்; வேலுவினுடைய பிள்ளைகளும் வேலை செய்யும். எல்லோரும் கூடி வேலை செய்ய நாங்களும் அங்கே வந்து சேருவோம்.

வேலு: ஆமாம். அதுதானுங்க ஏற்பாடு.

ஸ்ரீதரன்: ஒரே நிலத்திலே எல்லாரும் கூடி ஒன்றுகப் பாடுபடப் போகிறோம். வேலுவிற்கு அவன் நில அளவு பார்த்துப் பங்கு கொடுத்துவிடுவோம். பாக்கியை நாம் சரிசமமாகப் பங்கு போட்டுக்கொள்ளுவோம். என்ன?

அபூபக்கர்: அப்படியானுல் . . .

நம்பியார்: (முன்னே வந்து) வாரிசுகள் இருந்துவிட்டால் பொய்-புரட்டு, வழக்கு! வாரிசுகள் இல்லையானுல் சவடால் அடித்தே காரியத்தைச் சாதித்துக்கொள்வது—அப்படித்தானே ஸ்ரீதரன் நாயரே!

அபூபக்கர்: யாரு? நம்பியாரு வந்திட்டாகளா? பேஷாப் போச்சு. உட்காருங்க, நம்பியாரே! கேசு நடத்திக்கிட்டிருந்தாலும் ராஜியாப் போகவும் வழி வந்திருக்கு.

[நம்பியார் உட்காருகிறுர்.]

ஸ்ரீதரன்: (நம்பியாரிடம்) என் பேச்சுக்குத் தவறுன விளக்கத்தைத் தான் நீங்கள் கொடுக்கிறீர்கள். என் யோசனை அபூபக்கருக்கு லாபமில்லை என்று நீங்கள் நினைக்கவேண்டாம், நம்பியாரே!

நம்பியார்: நீங்கள் ஒன்றும் அபூபக்கருக்கு லாபம் தேடித்தர வேண்டாம். உங்களுடைய பெரியவர்கள் ஏற்படுத்தி வைத்த 'லாபமே' போதுமே! இவருக்கு அது போதாதா?

ஸ்ரீதரன்: (சற்று யோசித்து) நீங்கள் ஒரு நல்ல தீர்மானத்துக்குத் தான் வரமாட்டீர்களே, நம்பியாரே! ஆனுல் உங்கள் தொழில் நோக்கமே அதுவாகத்தான் இருக்கும். நாங்கள் ஒருவருக்கு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டால்தானே உங்கள் பிழைப்பு நடக்கும்.

நம்பியார்: (கோபத்துடன்) அதிகப்பிரசங்கித்தனமாய்ப் பேச வேண்டியதில்லை.

அபூபக்கர்: அடடே! போறும் நம்பியாரே! அவுக ஜோலிகளை அவுக சொல்லியாக வேணும்? 'கூட்டுக் கிருஷி' (கூட்டுப் பண்ணை) நடக்கும், அதிலே லாபம் இருக்கும். சாகுபடி வேலை

யெல்லாம் எங்களுக்குத் தெரியும். வேலுவும் கூடிப் பாடுபட வந்தாலே, அவன் நிலத்தைவிட்டுத் தண்ணீர் வடிய வழி உண்டாகும். எல்லாத்திலும் மூணு பங்கு எடுக்கலாமே!

வேலு: என்ன மாப்பிளே! நானும் உங்களோடே கூடி விவசாயம் செய்யமாட்டேனு? எனக்கும் சாகுபடியிலே கொஞ்சமாச்சும் பழக்கம் இருக்குதில்லே?

அபூபக்கர்: அப்படிக் கூட்டாகச் சாகுபடி செய்யறதிலே லாபம் இருக்குமா? அது சரியான முறைதாஞ? ஆலோசிக்கவேண்டிய விசயம். ம்ஹ்ம்? . . .

நம்பியார்: என்னவோ? இப்போதெல்லாம் புதுப் புதுச் சட்ட திட்டம் செய்கிறவர்களுக்குக் காலமாக இருக்கிறது. பண்ணை யாரும் குடியானவரும் கூடி, விளைச்சலை எடுக்கிறபோது, பகுதி, வாரம் என்று பேசமுடியுமா? அறுவடையாகி, கண்டு முதலை எடுத்த பிறகு, வயலிலே கால்வைக்க வேணுமானுல், இதோ இந்த எசமானரின் உத்தரவு வேண்டும். எதற்கும் வக்கீலிடம் கேட்டுக்கொண்டு செய்யுங்கள், அபூபக்கரே!

வேலு: வக்கீலு!—அது வேறொரு சைத்தான்.

[ஆயிஷா இதைக் கேட்டுச் சிரிக்கிறுள்.]

அபூபக்கர்: உன் கருத்துத்தான் இவளுக்கும் வேலு! கோர்ட்டிலே சைத்தானுகதான் இருக்கும் என்கிறது இவள் கட்சி.

ஆயிஷா: சைத்தான்களாக இல்லாதிருந்தால் பொய் சொல்லி, ஆளுகளைச் சண்டை போட வைப்பாங்களா?

அபூபக்கர்: (ஆயிஷாவைப் பார்த்து) போறும் போ! உள்ளே போ நீ!

நம்பியார்: நீங்கள்தான் குழந்தைகளைக் கெடுக்கிறீங்க, அபூபக்கரே!

அபூபக்கர்: ஆமாம். அன்னிக்கு நீங்களு இவள் அண்ணன் பாப்புவைப் பத்திச் சொன்னீகளே. நான் அவனைப் பிடிச்சு இரண்டு அடி கொடுத்தேன். இவளுக்கு அதுதான் என்மேலே கோவமாக்கும்.

[ஆயிஷா நம்பியாரைப் பார்த்து முகத்தைச் சுளித்து அழகுகாட்டிவிட்டு உள்ளே போகிறுள். ஸ்ரீதரன் நாயரும் வேலுவும் இதைக் கண்டு சிரிக்கிறுர்கள்.]

நம்பியார்: ஆகட்டும், ஆகட்டும். நாளைக்குப் போக்கருடைய வழக்கும் இப்படித் தீர்ந்து போகணும்னு யோசனை உண்டோ? இந்த மாதிரி ஆளாயிருந்தால் அதுவும் தீரும். போக்கரும்

அவன் பங்கு மனையிலே வந்து குடியிருக்கட்டும். இப்பதான் எல்லாத்திலும் கூட்டுச் சேரணுமாமே! பாதி இடத்திலே உங்கள் குடிசை! மீதிப் பாதியிலே போக்கர் குடிசை. அபூபக்கரே, எப்படி?

வேலு: ஹும், ஹும். அதெல்லாம் ஒண்ணும் தீரக்கூடாது. வழக்கு வம்பெல்லாம் தீரவே கூடாது (நையாண்டிக் குரல்).

ஸ்ரீதரன்: அப்போ சமாதானமாகப் போகக்கூடாது; ஆளுக ஒருவருக்கு ஒருவர் அடித்து மோதணும் என்கிறதுதானே உங்கள் அபிப்பிராயம், நம்பியாரே?

வேலு: இவருக்குப் பித்துப் பிடிச்சிருக்கு எசமான்! உம்மக்குட்டி (ஆயிஷா) சொன்னது சரிதான்.

அபூபக்கர்: நம்பியாரே! நாளைக் கேசுக்கு இங்கே ஒண்ணும் வக்கு இல்லீங்களே.

நம்பியார்: அப்படியானால், குடியிருப்பு குடி இழப்புதான். என்னிடத்திலே விளையாட வேண்டாம், ஆம்மாம்!

[அபூபக்கர் வேறு வழியின்றி உள்ளே போகிறார்.]

நம்பியார்: (ஸ்ரீதரனிடம்) கஷ்டம்! அது பெரியவங்க காரியம். பலாச்சுளையைக் கீறி எடுத்தால் எப்படித் தம் பங்கிலே அதிகம் ஒதுக்கிக்கொள்ளலாம் என்பதை அவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள். அவங்க யோசனையே தனி. என்ன இருந்தாலும் நாம் ஒரு சாதிக்காரர்கள்தானே?

வேலு: உம்மக் குட்டி சொன்னது சரிதான்.

ஸ்ரீதரன்: என்ன சொன்னாள்?

வேலு: சைத்தானுங்கன்னு சொன்னாளில்லே?

நம்பியார்: எலே வேலு! நீ எதுக்காக இங்கே வலை வீசுறேன்னு எனக்குத் தெரியுமிண்டாலே! ஒடியனுக்கு (பிசாசுக்கு) முன்னாலே மாயவித்தை காட்டவாடா செய்கிறே? எலே, வேண்டாம்டா உனக்கு இது!

வேலு: நீங்க வெறும் ஒடியன் இல்லே: 'கரொடியன்'—பெரிய காட்டேரிப் பிசாசு.

அபூபக்கர்: (குடிசைக்குள்ளேயிருந்து வந்து நம்பியாரின் கையில் ஒரு பொருளைக் கொடுத்துவிட்டு) என் மகளு கழுத்திலே போட்டுக்கிட்டிருந்தது இது. கடைசியா மிச்சப்பட்டது இது தான். முப்பது ரூபாய் இதை வைச்சு வாங்கிக்கொள்ளுங்க. நிங்களு செலவுக்கும் வேணுமில்லே? (தனக்குள்) கையில் காசு வந்ததும் திரும்ப மீட்டுக்கொள்ளலாம்.

நம்பியார்: (சலிப்புணர்வுடன்) அடகுவைத்து வாங்குகிற வேலே மகா. தொந்தரை பிடித்ததாயிற்றே? (கையிலெடுத்துத் தூக்கிப் பார்த்துவிட்டு) என்ன செய்வது உங்களுடைய காரிய மாயிற்றே. செய்யத்தான் வேண்டும். (நகையை மடியில் வைத்துக்கொள்ளுகிறார்) அப்போ, இவருடைய காரியம்?

அபூபக்கர்: இதை இப்படியே தீர்த்துக்கொள்ளலாமென்று யோசனை.

நம்பியார்: உங்கள் விருப்பம்போலே செய்யுங்க. வக்கீலிடத்திலே ஒரு பேச்சு சொல்லவில்லே. எனக்கென்ன? நான் ஏதும் சொல்லப்போகிறதில்லே. (கிளம்புவதற்காகக் குடையை எடுக்கிறார்).

வேலு: நீங்கள் ஏதும் சொல்லாமல் இருக்கிறதே நல்ல நிலைமைக்குத்தான். சைத்தானுக. . .

நம்பியார்: (எழுந்திருந்து) எலே வேலு! நீ பாட்டுக்குக் கிடடா! பேசாமல் இருக்கிறதில்லே. ஆட்டைக் கடிச்சு, மாட்டைக் கடிச்சு, கடைசியிலே மனிதனையும் கடிக்க வந்திருக்கியாடா? எலே, உன்னை. . .

[வேலுவும் நம்பியாரும் நெருங்குகிறார்கள். ஸ்ரீதரன் குறுக்கே வந்து இருவரையும் விலக்கி விடுகிறான். அபூபக்கர் கலவரமடைகிறார். ஆயிஷா வந்து பார்த்து, ''நல்லா வேணும்'' என்று சாடை காட்டுகிறாள்.]

## காட்சி 3

[இடம்: வயல் வெளி. ஆயிஷா வயல் கோடியில் நின்று கொண்டு, மரக்கட்டை கொண்டு மண்கட்டிகளை உடைத்துக்கொண்டிருக்கிறாள். முறத்தில் விதைகள் எடுத்து வந்து, பக்கத்து நிலப்பகுதியில் அவற்றைச் சுகுமாரன் விதைக்கிறான். இருவரும் அடிக்கடி பார்த்துக்கொள்ளுகிறார்கள். ஆயிஷா சட்டென்று கைத்தடியைக் கீழே போட்டுவிட்டு, கண்ணைக் கசக்கிக்கொள்ளுகிறாள். சுகுமாரன் தூவிய விதை மணிகளில் ஒன்று அவள் கண்ணில் விழுந்துவிட்டதுபோல் இருக்கிறது. சுகுமாரன், ''என்ன?'' என்று பரபரப்புடன் கேட்டுக்கொண்டே அருகில் வருகிறான்.]

ஆயிஷா: மனிதர்களுடைய கண்களைப் பார்த்துத்தான் நீங்க விதை தூவுகிறதா?

சுகுமாரன்: ஓ! உன் கண்ணிலேயா விதை விழுந்துவிட்டது? நான் கவனிக்கவில்லையே! காட்டு, பார்க்கலாம்.

[சுகுமாரன் ஆயிஷாவின் கைகளை ஒதுக்கிவிட்டு, கண் இரப்பைகளைத் திறந்து ஊதிவிடுகிறான். ஆயிஷா புன் சிரிப்புடன் கண்ணைத் துடைத்துக்கொள்ளுகிறாள்.]

ஆயிஷா: போறும்; சரியாகிவிட்டது. விதைக்கத் தெரியா விட்டால் இந்த ஜோலிக்கு ஏன் வரணும்? இப்படியா விதைப்பாங்க?

சுகுமாரன்: நான் விதைக்க வரும்போது நீ வயலைவிட்டு வரப்பு மேலேதானே நிற்கவேணும்? விதைக்கிற சமயத்திலேதானா நீ இங்கே வந்து கட்டிகளை உடைக்கணும்? (நமுட்டுச் சிரிப்பு.)

ஆயிஷா: நான் ஸ்ரீதரன் நாயரிடத்திலே சொல்லுகிறேன். ஆளு களுக்குக் கண்ணும் மூக்கும் இல்லாமல் எப்படி வேலை செய்ய முடியும்?

சுகுமாரன்: என்ன சொல்லப்போறே என் அண்ணனிடத்திலே?

ஆயிஷா: வயலிலே விதைக்காமல், ஆளுகளுடைய கண்ணிலே விதை தூவுகிறாரு என்று சொல்லப்போகிறேன்.

[மீண்டும் மண்கட்டிகளை உடைக்கிறாள்.]

சுகுமாரன்: கூடவே இங்கே கண்ணை விரித்து ஊதிக் கொடுக்க ஓர் ஆள் தேவை என்று சொல்லப் போகிறதில்லையா?

[ஆயிஷா கட்டிகளை உடைக்கிறபோது அவை சிதறிச் சுகுமாரனின் காலில் படும்படி உடைக்கிறாள்.]

சுகுமாரன்: இதையும் சேர்த்து என் அண்ணனிடத்திலே சொல்லணும். இங்கே ஒருத்தி, பக்கத்திலே இருக்கிற ஆளின் காலிலே மண்ணாங் கட்டியாலே அடிச்சிருக்கிறாள். இதையும் சொல்லுவியா? சொல்லணும், என்ன? (போலி மிரட்டல்).

ஆயிஷா: நீங்க சொல்லுகிறதையெல்லாம் போய்ச் சொல்லவா நான் இருக்கிறேன்? (குறும்புப் பார்வை.)

சுகுமாரன்: (புன்சிரிப்புடன்) அப்படியானால் நான் சொல்லு கிறேன்; ஆயிஷா சொல்ல வேண்டியதையெல்லாம் நானே சொல்லிவிடுகிறேன். என்ன சொல்லணும்?

ஆயிஷா: ஆகட்டும்! நீங்க உங்க சமாசாரத்தைச் சொல்லிக் கொண்டால் போதும். வேலை மெனக்கிடுது. நான் அப்பாரு கிட்டே திட்டும் அதட்டலும் கேட்டுக்கொண்டாகணும். (கட்டிகளை உடைக்கிறாள்.)

[சுகுமாரன் விதை தூவி விட்டுக் கரை ஏறுகிறான்.]

ஆயிஷா: உங்களுடைய பெண்டுகள் எங்கே? அண்ணன், வேலு, அப்பா எல்லாரும் கரை ஏறுகிற நேரமாயிடித்தில்லே?

சுகுமாரன்: வந்துவிடுவாங்க. ஆனல், உங்கமாதிரி 'ஸைங்...'னு நடக்க ஆண்களாலே முடியுமா?

ஆயிஷா: நீங்க ஒரு ஆணில்லையா? பரிஞ்சுதான் பேசுவீங்க. வயலுக்கு மாட்டை ஒட்டுகிறதும், வயலை உழுவதும்தான் ஆண்களுக்குச் சரியாக இருக்குமே! விடிகாலையிலே தொடங்குகிற வேலை, நாள் முச்சூடும் ஓயாது. ஆனல், வேலைதான் முடியாது!

சுகுமாரன்: கட்டிகளை உடைக்கிற வேலையை மட்டும் நீ விடிகாலையிலே தொடங்கவில்லையா? (கிண்டலாக.)

[இருவரும் சிரிக்கிருர்கள். வேலு, ஏர்மாடுகளை ஓட்டி வரும் சப்தம் கேட்கிறது.]

சுகுமாரன்: ஒரு கவலையும் இல்லாத மனிதன்.

ஆயிஷா: சரிதான். ஸ்ரீதரன் நாயரும் அப்பாவும் ஆளுக்கொரு பக்கமாக வேலை செய்துகொண்டிருப்பாங்க. வேலு வந்த வழிக்கே மாட்டை ஓட்டத் தொடங்கிவிடுவாரு.

சுகுமாரன்: புள்ளி மாட்டை யார் ஏரிலே பூட்டியிருக்கிறது?

ஆயிஷா: அப்பாதான்.

சுகுமாரன்: அப்போ அண்ணன்தான் வரப்பு வெட்டுகிருர் போலிருக்கிறது.

ஆயிஷா: ஆமாம். ஸ்ரீதரன் நாயருதான் வரப்பு கொத்துகிருரு. நீங்களும் போங்க. கொஞ்சம் உதவி செய்யுங்க, போங்க!

சுகுமாரன்: என்னலே அதெல்லாம் முடியாதம்மா! அந்தக் கைக்கொட்டை வைத்துக்கொண்டு, குனிந்திருந்து கொத்திக் கொண்டிருக்க வேண்டும்.

ஆயிஷா: (அதே மாதிரி) எனக்கும் முடியல்லேப்பா! பாட்டுப் பாடவும் 'கரபுரா'ன்னு எழுதவும்தான் என்னலே ஆகுமப்பா!

[இருவரும் சிரிக்கிருர்கள்.]

சுகுமாரன்: அதோ, வேலு பக்கத்து வயலில்தான் இருக்கிருன். ஆயிஷா! அதோ பார், அவன் உழுகிறபோது கலப்பை தள்ளுகிற மண், பின்பக்கமாய்ப் புரண்டு விழுகிறதைப் பார். அந்தப் புது மண்ணின் வாசனை, மயிலைக் காளைக்குத் தனிப் போதை ஊட்டியிருக்கிறுப்போல் தோன்றுகிறது.

Indian Ins... ...dvance ...S... 117382

ஆயிஷா: *அது உடலைச் சிலுப்பிக்கொள்வதைப் பாருங்களேன்!*

*[ஆயிஷா மண்கட்டிகளை உடைத்துக்கொண்டே பாடுகிறாள்.]*

''வித்தும் கைக் கொட்டும்,
வித்தும் கைக் கொட்டும்,
உழுதிட்டக் கழனியிலே
செழித்திடுமே புதுமையொளி!
வித்தும் கைக் கொட்டும்,
வித்தும் கைக் கொட்டும், . .
ஏர்க் கொழுவை அழுத்தியே
நீர்வயலில் உழுதிட்ட
புது மணமே கமழும் நிலம்
புழலினிலே அலையினைப்போல்
உழுதிட்ட சால் வரிசை
உழைப்புக்கே புகழ்தருமே!
வித்தும் கைக் கொட்டும்,
வாழ்வளிக்கும் அணிகலனே!''

*[அவர்களுக்குப் பின்னுலுள்ள திரை மெல்ல விழுகிறது. கீழே எட்டிய பகுதியின் இடைவெளியில், ஏர் பூட்டி நிற்கும் வேலு தென்படுகிறுன்.]*

வேலு பாடுகிறுன்:

''என் மணியான இளம் எருதே,
இன்பமாய் விளை யாடியே நீ,
ஏர் பூட்டி உழுதிடு வாயே!
கொழு கொழுத்த தாடை யசைத்து
ஏர் பூட்டி உழுதிடு வாயே!
வித்தும் கைக் கொட்டும்,
வித்தும் கைக் கொட்டும்!''

*[பின்னுள்ள திரை தாழ்கிறது.]*

சுகுமாரன் பாடுகிறுன்:

''கலகலப்பாய்ப் பறந்து வந்தே
கண்கவரும் கிளிகள் இங்கே
குலவிப் பேசும் இனிமையுடன்.,
வித்தும் கைக் கொட்டும்,
வித்தும் கைக் கொட்டும்.''

இருவரும் சேர்ந்து பாடுகிறுர்கள்:

''வயல் வெளியெங்கும் பிச்சகப் பூ
வெண் பொலிவாய்ப் பூத்திருக்க,
அவை மீதே அமர்ந்திருந்து
ஆனந்தமாய்ப் பாடிடுவாய்;
மாயக் கிளியே நீ,
மனதுக் கிசைவாய் நீ,
ஆனந்தமாய்ப் பாடிடுவாய்!
வித்தும் கைக் கொட்டும்,
வித்தும் கைக் கொட்டும்!''

சுகுமாரன்: *இதற்குமேலே பாடத் தெரியாதா ஆயிஷா?*

**ஆயிஷா:** *தெரியாது. சுகுமாரன் நாயருக்குத் தெரியுமா?*

சுகுமாரன் பாடுகிறுன்:

''அருகில் ஒலிக்கும் தேவகானம்,
வான வெளியில் பரவி நிற்கும்;
அலே மிதப்பதுபோல் இருவருமே,
கலே சிறக்கும் மதுரகானமதில்,
திளேத்திருப்போம் என்னுளும்.
வித்தும் கைக் கொட்டும்,
வித்தும் கைக் கொட்டும்!''

ஆயிஷா: *இந்த வரிகளே நான் பாடினதில்லே. இதை யாரும் பாடுவதில்லே.*

**சுகுமாரன்:** *நான் பாடுவதுண்டு.*

**ஆயிஷா:** *அதை நீங்கள் இட்டுக் கட்டிப் பாடறீங்க. இந்த ஆயிஷா ஏமாறுவாள்னு மட்டும் நினேக்கவேண்டாம்.*

சுகுமாரன்: *ஓ! இல்லே. நீ மகா கெட்டிக்காரியில்லே!*

*[தலேயில் பெரிய பாத்திரமும், கையில் கொஞ்சம் பாக்கும் பாளேகளும், ஒரு சிறு இலேக்கட்டுமாக, பார்வதி வருகிறுள். ஆயிஷா பாத்திரத்தைத் தலேயி லிருந்து இறக்கி வைக்கிறுள்.]*

பார்வதி: *இந்த அண்ணனுக்கு எப்போது பார்த்தாலும் பறப்பு, ஓட்டம். விதைக் கோட்டையைத் தலேயிலே தூக்கி வைத்துக் கொண்டு விடவேண்டியதுதான், காவடி எடுத்த ஆள்மாதிரி ஒரே ஓட்டந்தான்.*

ஆயிஷா: *அதை நான் நம்பமாட்டேன். இவரு எங்கே நடக் கிறுரு? நடையுமில்லே ஓட்டமுமில்லே. நேத்து மாலேப்*

போதுக்கு வீட்டுக்குத் திரும்பும்போது, எங்க அப்பாரு திரும்பிப் பார்த்துக் கேட்டாங்க. அப்போது அண்ணன் தம்பி இரண்டு பேரும் உங்கள் நிலத்துக்குப் போய்க்கொண்டிருந்தாங்க. அதைக்கண்டு, எனக்குக்கூட வெட்கமாப் போயிடிச்சு.

பார்வதி: அப்போ, இன்னைக்கு என்ன ஆகுமோ?

சுகுமாரன்: (மதிப்புடன்) சரி, சரி, இரண்டு வம்பாடிகளும் கூடி விட்டாங்களில்லே! ஒரே கலகலப்பு, கத்தல்தான். தங்கச்சி தலையிலே ஒரு சுமையையும் வைத்துக்கொண்டு, குஷியாய்ப் பாட்டுப் பாடிக்கிட்டுத்தானே துள்ளல் நடை போடுகிறாள்.

[ஸ்ரீதரன் நாயரும் அபூபக்கரும் வருகிறார்கள். ஸ்ரீதரனின் கையில் கைக்கொட்டு இருக்கிறது.]

ஸ்ரீதரன்: இங்கே நின்றுகொண்டு கதை பேசிக்கொண்டிருக்கிறீர்களா? இருக்கிற மண்கட்டிகளையெல்லாம் உடைச்சுப் போடுங்க, குட்டிகளா! இது போதாதப்பா; பாக்கி விதையையும் கொண்டு வரணும். நிறைய இடம் உழுதாகிவிட்டது.

சுகுமாரன்: (எழுந்திருந்து) கொண்டு வருகிறேன் (போகிறான்).

[அபூபக்கரும் ஸ்ரீதரனும் சுகுமாரனைப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். அவன் அப்பால் சென்றதும்—]

ஸ்ரீதரன்: பையன் கொஞ்சம் கறுத்துப் போயிருக்கிறான்.

அபூபக்கர்: நீங்களும் முன்மாதிரி இல்லே. வெயிலிலே வேலை செய்து செய்து உடம்பே கெட்டுப்போயிருக்கு. ஆனால், இனி இரண்டே நாள்தான் ஜோலி. அப்பறம் 'ஆராம்'தான் (ஓய்வு).

ஸ்ரீதரன்: ஒண்ணும் இதெல்லாம் போதாது. சரி, பாருக் குட்டி! சீக்கிரம் கஞ்சியைத் தொன்னையிலே ஊத்து!

[ஆயிஷாவும் பார்வதியும் தொன்னை தயார் செய்கிறார்கள். ஸ்ரீதரனும் அபூபக்கரும் சாப்பிடக் காத்திருக்கிறார்கள்.]

# களம்: 2

## காட்சி 1

[வயல்பக்கத்து வழி; பொழுது சாயும் நேரம். இரு குடியானவர்கள் எதிர் எதிரே வருகிருர்கள். ஒரு கிழவனும் (பறங்கோடன்), ஒரு இளைஞனுமே (வாரியர்) அவர்கள். கிழவன் கையில் சாட்டைக் கம்பும், இளைஞனின் கையில் பூக்கூடையும் உள்ளன.]

பறங்கோடன்: நீங்க என்னுடைய மயிலைக் காளையைக் கண்டீங் களோ, வாரியரே?

வாரியர்: உங்கள் மயிலைக் காளையையா? பறங்கோடன் நாயரே, உங்களுக்கு ஏது மயிலைக் காளை?

பறங்கோடன்: கறத்தோடம் கிராமத்திலே வாங்கின மயிலைக் காளைதான். குட்டைக் கொம்புங்க. நூத்தி முப்பத்தேழு ரூபாய்க்கு வாங்கினதுங்க.

வாரியர்: ஊம் . . . நூத்தி . . . முப்பத்தேழு ரூபாய்க்கு! ரூபாய்க்கு மதிப்பு-கிதிப்பு கிடையாதா? அதிகமாப் போனு லும் ஐம்பது ரூபாய்க்கு மேலே இருக்காது. அவ்வளவுதானே பெறும்.

பறங்கோடன்: எவ்வளவு? ஐம்பதா? பாக்கிக்குப் படையல் சோறு படைக்கிறதா? 'ணங் ணங்னு' நூத்தி முப்பத்தேழு ரூபாய் எண்ணிக் கொடுத்திட்டுத்தான் மயிலைக் காளையின் தும்பைக் கையிலே வாங்கிக்கொண்டேன், தெரியுமில்லே!

வாரியர்: ஹூம்! நூத்தி முப்பத்தேழு ரூபாய், பத்தி எரிகிற வீட்டிலே பிடுங்கியது ஆதாயம்னு எத்திலே சேகரித்த பணமா யிருக்கும். ஐம்பது ரூபா கொடுத்தால், இந்தமாதிரி இரண்டு மாடுகள் வாங்கலாமே.

பறங்கோடன்: என்னது! நான் 137 ரூபா கொடுக்கலேன்னு சொல்லுறீங்க? வாரியராச்சேன்னு பொறுத்துக்கிறேன். இன்னொருத்தராக இருந்தால் கெட்ட கோபம் வந்திருக்கும். பகவானே, இப்படி அநியாயம் செய்தால் இந்த ஆனி—ஆடி மாசத்திலேகூட மழை இல்லாமே போகாம என்ன செய்யும்?

வாரியர்: ஹும்! மகா மயிலைக் காளை வாங்கி வந்துவிட்டாரு! நூத்தி முப்பத்தேழு ரூபாய் ஐராவதம்!* என்னுடைய 'சூட்டன்'காளைக்கு ஈடாக நிற்கமுடியுமா அதாலே? மழை இல்லாது போனதனாலேதான் இவ்வளவு சங்கடமும். உங்க மாதிரி ஆளுங்க இருந்தாலே கடல்கூட வற்றிப்போகுமே.

பறங்கோடன்: (வேறு வழி இல்லாமல்) கடவுளே! இப்படி இளக்காரப் பேச்சு கேட்கவேண்டி வந்ததே! எதுக்கு ஈடாக நிற்க வைத்தால்தான் என்ன? இளம் பெண்சாதிகணக்காய் ஜில் ஜில்லுனு அது நடக்கிறதைப் பார்த்ததில்லையா? உங்களுடைய 'சூட்டன்' மாடும் இருக்கிறதே! ப்பு!

வாரியர்: உங்களுடைய மயிலைக் காளை மட்டும் என்ன! இருபத்தைஞ்சு ரூபாய்க்கு ஏத்த சரக்குதானே அது!

பறங்கோடன்: (அடக்கமாக) வாரியரே! என்ன இப்படிச் சொல்லுகிறீங்களே! பொய் சொல்லி எனக்கு என்னங்க காரியம் ஆகணும்? பாருங்க, நூத்தி முப்பத்தேழு ரூபாய் அங்கே எண்ணிக் கொடுத்தேனுங்க. அதிகமாச் சொன்னதாலே பிறத்தியாரா வந்து பணம் கொடுக்கப்போறாங்க?

வாரியர்: அப்போ என்னுடைய சூட்டன் காளை? நூத்தி இருபது ரூபாய்க்கு வாங்கியதாகச் சொன்னபோது, அன்றைக்கு நீங்கள் என்ன சொன்னீங்க? இருபது ரூபாய் கொடுத்தால்கூட இதுக்கு நஷ்டம்தான்னு சொல்லல்லே?

பறங்கோடன்: அதொண்ணுமில்லே, வாரியரே! சும்மாச் சொன்ன பேச்சு அது. உங்க மாடு நூத்தி இருபது ரூபாய்க்குப் பெறுமானம் உள்ளதுதான். பார்த்தாலே தெரியல்லே?

வாரியர்: அப்படியானால் உங்க மயிலைக் காளை 137 ரூபாய்க்கு மதிப்பு உள்ளதுதான். பார்க்கவே நல்ல லட்சணமான மாடு இல்லே!

பறங்கோடன்: ம்! அப்படிச் சொல்லுங்க. உங்களுடைய பேச்சைக் கேட்டபோது எனக்கு அப்படியே பொறிதட்டினாப் போலே இருந்திச்சுங்க.

வாரியர்: அதுதான், அவங்க அவங்க கவனித்துப் பேசாது போனதன் பலன்.

பறங்கோடன்: அதுக்கில்லேங்க, வாரியரே! நீங்க என் மயிலைக் காளையைக் கண்டீங்களோன்னு கேட்டேன்? உச்சிப் போது முதலே தேடத் தொடங்கினவன் நான், இன்னும் தேடிக்கிட்டுத்தான் இருக்கிறேன்.

---

* ஐராவதம்—இந்திரனின் வாகனமான வெள்ளை யானை.

வாரியர்: எங்கே மேய்ந்துகொண்டிருந்தது?

பறங்கோடன்: அதான், அந்த அபூபக்கருடைய வயல் ஓரமாய் மேய்ந்துகொண்டிருந்தது.

வாரியர்: அப்படியானுல், வேலு பிடித்துப் பவுண்டிலே கொண்டு போய் அடைச்சிருப்பான்.

பறங்கோடன்: பவுண்டிலே அடைச்சிருப்பானு? . . . எலே, வேலு! உன் ஆசையைத் திசைமாறவைப்பேன் நான்! வேலுவுக்கு என்ன வந்தது? அவன் நிலம் அப்பாலேதான் இருக்கிறது?

வாரியர்: ஹூம்! பறங்கோடன் நாயருக்குத் தெரியாதுபோலே இருக்கிறது. இந்த வருசம், வேலு, அபூபக்கர், அப்புறம் அந்த . . . ஆமாம் . . . அந்த செத்துப் போன உண்ணிச் சுண்டன் நாயருடைய மருமகன் இல்லே, அவன்—இவங்க மூணு பேருமாகக் கூட்டுச் சேர்ந்து, நிலத்தையெல்லாம் ஒண்ணுக்கிக் கொண்டுவிட்டாங்க. அதனுலேதானே என்னவோ, மற்ற நிலங்களெல்லாம் வாடி வதங்கிப் போயிருக்கிறபோது, இவர்களுடைய நிலம் மட்டும் நன்ருக விளைந்திருக்கிறது. கரும்புபோலே செழுமையாக மண்டி வளர்ந்து நிற்கிறதே பயிரெல்லாம், பார்க்கவில்லே?

பறங்கோடன்: அதுதான் நாம் காணுகிற மாதிரி ஒண்ணும் ஆகிறதில்லே. 'தவுட்டை' விதைதானே விதைத்திருக்கிருர்கள். ஒரு கழனிக்கு இருபத்தைந்து ஆள்கள் வேண்டியிருக்குமே, புல் பிடுங்கமட்டும்.

வாரியர்: புல்லா? ஓ! களே பிடுங்குவதைச் சொல்லுகிறீர்களா? உங்களுக்கென்ன? நீங்கள் கதிரும் அறுக்கமுடியாது; களே பிடுங்கவும் இடமிருக்காது. கண்ணைப் போட்டு விடுவதானுல், முள் இலேகளேப் போட்டுவிட்டு. திரும்பிப் பார்க்காமல் போங்கள். ஒண்ணும் தரம் நெல் அவர்களுடையது, அது அவர்கள் செய்த பாக்கியமாக்கும்!

பறங்கோடன்: ஆமாம், பாக்கியம்! (இளக்காரமாக) ஒழுங்குமுறை இல்லாத ஒரு பாக்கியம் . . . நல்லதுக்கா இது? குட்டிச் சுவராக்குகிற காரியங்கள்.

வாரியர்: அதை இப்போது சொல்லி என்ன? இப்போதைக்கு ஒத்த செயலா இல்லேயா? வேலுவும் இனிமேல் கோயிலுக்குள்ளே நுழைந்து வந்தாலும் வருவான். ஹிந்துவும் மாப்பிளாக்களும் ஒண்ணுகணும்னுதானே எல்லாரும் சொல்லுகிருர்கள்?

பறங்கோடன்: இதென்ன காலம், வாரியரே! காலத்தை மனிதர்கள்தானே உண்டாக்கி வைச்சது?

வாரியர்: இருந்தாலும், எக்கச்சக்கமான விளைச்சல், ஐய்யா!

பறங்கோடன்: ஆமாங்கிறேன்! அசுர விளைச்சல்! கலி காலத்திலே கெட்டவர்களுக்குத்தான் யோகம். ஆனால், பின்னே வரப் போவதையும் முன்கூட்டி யோசித்துப் பார்க்கவேண்டாமா? அதிக விளைச்சல் அதிக ஆபத்துதான்.

வாரியர்: ஊம், அதிக விளைச்சல் ஆபத்து! நிறைய விளைந்தால் நிறையச் சாப்பிட்டாகணும்; இதுதான் ஆபத்து. நான் அதோ காய்ந்து வதங்கி நிற்கிற என் வயலைப் போய் ஒரு முறை பார்த்துவிட்டு வருகிறேன்.

பறங்கோடன்: என் வயல் என்ன வாழ்ந்தது? எல்லாமே கருகிப் போய்விட்டது, 'பேக்கோம்', 'பேக்கோம்' என்று தவளைகள் கத்தவேண்டிய காலத்தில், வண்ணார் வீட்டு அறை மாதிரி வானம் வெளுத்துக்கிடக்கிறதே; பார்க்கவில்லை? . . .கஷ்டம்!

வாரியர்: அதனாலேதான் மற்றவங்களைக் காணும்போது இத்தனை பொறாமையாக இருக்கிறது. பொறாமை தாங்காமல்தானே மயிலைக் காளையை அவர்கள் நிலத்திலே மேயவிட்டிருக்கிறீங்க? நாயரே, நீங்க பெரிய ஆளுதான்!

பறங்கோடன்: (மெல்ல) வைக்கோல் இல்லை. மயிலைக் காளை ஏதாவது தின்னவேண்டாமா? 137 ரூ. கொடுத்து வாங்கின தாயிற்றே? எத்தனை நாளைக்குத்தான் பட்டினி போட முடியும்? நானே அவிழ்த்துவிட்டேன். நேற்று இரவு முழுவதும் வயிறுரத் தின்றிருக்கும். நட்டமொண்ணும் இல்லை. பவுண்டுக் கூலி கொடுத்தாகணும்; போகட்டும்!

வாரியர்: ராத்திரி பூராவும் மேய வேலு விட்டிருக்கமாட்டான். அக்கம் பக்கத்திலே பயிர் காயத் தொடங்கியதுமே, நாள் முழுவதும் மாறி மாறிக் காவல் நிற்கிறாங்களே; வேலுவும், அந்த ஸ்ரீதரனின் தம்பி இருக்கிறானே—சுகுமாரன் அவனும்தான் காவல். உங்க மயிலைக் காளை நேற்று இரவே பவுண்டுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும். அதன் நாலு கால்களிலே ஏதாவது மிச்சம் மீதி இருக்கிறதா என்று பார்க்கணும் முதலிலே!

பறங்கோடன்: அப்படியானால் நான் அவங்க எல்லாரையும் கொன்றுபோடுவேன். கதிர்களையெல்லாம் நான் அறுத்துக் கொண்டு போவேன். ஆம்மாம்! . . . தரித்திரம் பிடித்த மூதிகள்! (சிறிது யோசித்து) யார் கேட்டாங்க இந்தக் கூட்டுப் பண்ணையும் உலக்கையும்? உதவாக்கரை . . .

வாரியர்: அதோ நம்பியார் வருகிறார். அவரைக் கேட்டுப் பாருமே கூட்டுப் பண்ணை ஏதுக்கு என்ன—என்கிறதை.

[நம்பியார் வருகிறார்.]

நம்பியார்: (இருவரும் தம்மைப் பார்த்து நிற்பதைக் கண்டு) என்ன சமாசாரம்?

பறங்கோடன்: அது...பாருங்க நம்பியாரே! நீங்க உயர்ந்த—குடுமிக்காரச் சாதிக்காரராக இருக்கீங்க. வந்து...

நம்பியார்: அதனாலே என்ன வந்தது இப்போ? என் குடுமியை அறுக்க என் தலையை உங்க கையிலே கொடுத்துவிடணுமா?

பறங்கோடன்: அப்படி யார் சொன்னது? என்னிடத்திலேயா இப்படி அதிகப்பிரசங்கித்தனம்?

நம்பியார்: பின்னே? நான் என்ன செய்தேன்?

பறங்கோடன்: என்னவே? நீங்கள் பார்க்கவில்லையா? நாயர், மாப்பிளே, கீழ் சாதிக்காரன்—மூணு பேர்களும் சேர்ந்து ஒரு கூட்டாம்; கூட்டுப் பண்ணையாம்! உங்கள் கண்ணிலே இதெல்லாம் படவில்லையா? இங்கே ஊரிலே ஒருவரும் மாடு—கன்னு வைத்து வளர்க்க வழி இல்லே. ஊரிலே ஆண்பிள்ளைகள் இல்லாத காலமாகவல்லவா போய்விட்டது!

நம்பியார்: பறங்கோடன் நாயரே! அப்போ என்னதான் செய்யணும்னு சொல்லுகிறீங்க?

பறங்கோடன்: எது செய்யணும்னு என்று கேட்கிறீங்க?

வாரியர்: இந்தப் பெரியவருடைய மயிலேக்காளே அபூபக்கருடைய நிலத்திலே மேயப் புகுந்ததாம். பவுண்டிலே பிடித்து அடைத்திருப்பாங்க. அதுக்காகத்தான் இவரு இப்படிக் கிடந்து குதிக்கிறாரு.

நம்பியார்: அதுக்கு நான் என்ன செய்ய? போய்ப் பிராது கொடுங்க. மயிலேக் காளேயைத் திருடிக்கொண்டு போயிட்டான்னு முறையிடுங்க. பிறகு, அப்பாரும் மகளும் கூடிக் குடிசையிலே கொண்டுபோய்க் கட்டிப்போட்டாங்கன்னு சாட்சியம் சொல்ல ஏற்பாடு செய்யணும்.

[போக்கர் வருகிறான்.]

போக்கர்: நம்பியாரே! என்ன சொல்லுகிறீங்க?

நம்பியார்: பறங்கோடன் நாயருடைய மயிலேக் காளேயை வேலுவும் ஸ்ரீதரன் நாயரும் சேர்ந்து கட்டிப் போட்டுவிட்டாங்களாம். ஆள் படைகள் கூடியபோது பவுண்டிலே கொண்டு

போய்க் கட்டிவிட்டாங்க. பிராது கொடுக்கலாம்னு நினேச்சா, நல்ல சாட்சி கிடைக்கல்லே.

போக்கர்: ஏன்? பிராது கொடுக்கிறதுக்கென்ன? நம்ம சாட்சிக்கு என்ன குறைவு? வாரியர் இருக்கிறுரே.

வாரியர்: ஐய்யோ, போக்கரே! எனக்குக் கோர்ட்டுக்கு நடக்க நேரம் இல்லே. இரண்டு வேளேயும் கோயிலுக்குப் போகணும். எனக்கு அங்கேதானே சோறு.

போக்கர்: உங்களுக்கு இரண்டு வேளேயும் போயாகணும். எனக்குப் பூராநேரமும் கடையிலே இருந்தாகணும். என்ன நம்பியாரே?

வாரியர்: போக்கரே! உங்களுக்குக் கடையைப் பூட்டிக்கொண்டு வந்தாலும் நட்டம் இல்லே. 'கண்ட்ரோல்' இருக்கிறதனுலே கொஞ்சம் ஆதாயத்தைக் காணலாம். மீதி உள்ளவங்களுக்கு அப்படியில்லேயே.

நம்பியார்: உங்களேவிட மோசமான ஆசாமி கிடையாது, வாரியரே! எனக்குத் தெரியாதா? ரூபாய்க்கு இரண்டு பணம் வட்டியும், பிற்பாடு வட்டிக்கு வட்டியும் வாங்கிச் சேர்த்தும் கோயிலுக்கு ஒரு காசு தர்மம் கொடுத்ததில்லே, தர்மப் பிரபு!

[எல்லாரும் சிரிக்கிறுர்கள்.]

நம்பியார்: பின்னே, இந்தக் கேடுகெட்ட கூட்டுப் பண்ணேக்கு முடிவு காலம் வந்தாகணும். இது நல்லதுக்கு அல்ல. ஒரு ஒழுங்குமுறை இல்லாமலே போய்விட்டதே! நான் அபூபக்க ருடைய ஆளுன்னு பேரு. ஆனுல், என் பேச்சைவிட வேலு பேச்சுக்குத்தான் மதிப்பு அதிகம். எனக்கு அங்கே பிடிமானம் இல்லாமே போய்விட்டது. ம்த்சு!...

போக்கர்: வேலு வீட்டிலே தங்கியிருக்கத்தானே அபூபக்கரும் ஆசைப்படுகிறுர். அப்போது வேலு பேச்சுத்தானே எடுபடும்.

[எல்லாரும் கண்ணேக் குவித்து ஜாடையாக ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக்கொள்ளுகிறுர்கள்.]

வாரியர்: அதுதான் பசு கன்று போட்டதும் நான் விலேக்குக் கேட்டேன். கொடுக்க மறுத்துவிட்டான் வேலு. இப்போ அதே கன்னுக்குட்டியை அபூபக்கருக்குக் கொண்டுபோய்க் கொடுத்திருக்கிறுன். கேட்டதுக்கு அபூபக்கருடைய பெண் விரும்பிக் கேட்டாளாம்; சமாதானம் சொல்லுகிறுன்.

பறங்கோடன்: அபூபக்கருடைய பெண்ணுக்கு உண்டான ஆசையை நிறைவேற்றி வைக்க இவனு ஏற்பட்டிருக்கிறுன்?

போக்கர்: அதுதான், பறங்கோடன் நாயரே! நான் அப்போதே சொல்லவில்லே?

வாரியர்: இன்னொரு பையன் இருக்கிறனே, அவன் அபூபக்கருடைய வீட்டுப் பிள்ளேயாகிவிட்டான். அவன் பேர் என்ன? ...ஆமாம்,...சுகுமாரன்.

பறங்கோடன்: எல்லாம் கூடி ஒரே அவியல், கூளம். இவனுகளே யெல்லாம் நாடு கடத்தவேண்டும்.

போக்கர்: இந்தப் போக்கர் நாடு கடத்துகிறுரா இல்லேயா பாருங் களேன். அந்தக் கூட்டிலே ஒருவன் மாப்பிளா—முஸ்லீம். அவனே—ஒழுங்குமுறை இல்லாத அவனே—நிலேகெட்டு மாறிய அவனே நான் கவனித்துக்கொள்ளுகிறேன்! ஊரைவிட்டே விரட்டுகிறேன். அவன் குடியிருப்பை நான் காலி செய்ய வைக்கிறேன். பார்த்துக்கொண்டே இரு! இந்துக்களேக் கவனிச்சுக்கிற பொறுப்பு இந்துக்களுக்கு. அதாவது, நாயரே! நம்பியாரே! நீங்க அந்த வேலு, சுகுமாரன் முதலானவர் களேக் கவனித்துக்கொள்ளுங்கள். நான் வேண்டிய உதவி செய்கிறேன்.

நம்பியார்: அதனுலேதான் வாரியரே! நீங்க ஒரு சாட்சியாக இருங்கன்னு சொல்கிறேன். கேசு ரிஜிஸ்டர் செய்துவிடலாம். வேலுவும் மாட்டிக்கொண்டான்; ஸ்ரீதரனும் அகப்பட்டுக் கொண்டான். என் பின்னுலே நாய்கள்மாதிரி குழைந்து கொண்டு வரப்போகிறுர்கள். பாருங்களேன்!

வாரியர்: நீங்க ஒண்ணு சொல்லிவிட்டால் நான் மாறு சொல்லவா போகிறேன்?

பறங்கோடன்: நம்பியாரே! அப்படியானுல் ஒரு பெட்டிஷன் எழுதி விடுங்கள்.

நம்பியார்: (போக்கரையும் வாரியரையும் பார்த்துக் கண் ஜாடை காட்டி) பறங்கோடன் நாயரே! பிராது எழுதுவது என்று வந்தால், தலேநிமிர்ந்து நிற்கணும்; அதாவது கொஞ்சம் போதை போட்டாகணும். இங்கே பக்கத்திலே ஏதாவது வசதி உண்டோ?

பறங்கோடன்: நம்பியாரே! தலேயை நிமிரச் செய்யணுமானுல், இப்போது கொட்டப் பாலம் சுற்றித்தான் போய்வரணும். காங்கிரஸ்காரர்கள் குடிக்கிறதையும் குற்றமாக்கி வைத்துத் தொலேச்சிருக்காங்களே!

[எல்லாரும் சிரிக்கிறுர்கள்.]

## காட்சி 2

[வயலுக்கு அடுத்துள்ள பாதை, சக்கி, நீலி—இரு பெண்டுகளும் இரு பக்கங்களிலிருந்து வருகிறுர்கள். இருவரும் களே பறிக்கும் நடவுப் பெண்டுகள்.]

சக்கி: இது என்னடீ வேடிக்கையாய் இருக்குது? அவுங்க கூலியும் தரமாட்டாங்களாம்; கூலி கொடுக்கிறவங்களிடத்திலே வேலே செய்யவும் போகக்கூடாதாம்.

நீலி: யாரு அது, கூலி தராமே இருக்கிறது?

சக்கி: வேற யாரு? போக்கரு ஐயா இருக்கிருரில்லே, அவருதான்.

நீலி: அப்படியாஞ நாம் அங்கே போகவேண்டாம்.

சக்கி: போகாமப் போஞல் முடியுமா? குடிசையிலே கிடந்தாலும் பொளேக்கவேணும்?

நீலி: யாருடைய வயல் வேலேக்கிப் போகவேண்டாம்னு சொன் ஞங்க?

சக்கி: அபூபக்கரு இருக்கிருரில்லே, அவர்கிட்டே வேலேக்குப் போகக்கூடாதாம். அவரு நாலணு கூலி கொடுப்பாரு. உச்சிப்போதுக்குச் சோறும் தருவாரு. நேத்திக்குப் போய் வந்தேனே—அட எம் புள்ளேயங்களே! இனி என்னிக்கு உங்களுக்கு வயிருரச் சோறு கிடைக்கப்போவுதோ? கடவுளே! தாயும் கொளந்தைங்களும் கிடந்து பெரிசா ஒப்பாரியல்ல வைக்கிருங்க.

நீலி: ஏனும்?

சக்கி: ஏன்னுட்டா கேக்கிற? கூலி தராமே போஞக்கி, நான் வேலேக்கு வரமாட்டேனிட்டுச் சொல்லிட்டேன். போக்கரு சொல்லுருரு: 'என் வேலேக்கு வராட்டியும் பரவாயில்லே; அந்த சோமாறிப் பயல்கிட்டே மட்டும் வேலேக்குப் போயிராதே சக்கி!' அப்படீங்கருரு போக்கரு மாப்பிளா. இதென்னடீ கூத்து?

நீலி: அதைப் போக்கரு மாப்பிளே சொல்லவேண்டியதில்லேயே. அபூபக்கர்கிட்டே வேலேக்கு, பவுனேயே வைச்சுக் கொடுத் தாலும் யாரும் போகமாட்டாங்களே.

சக்கி: ஏண்டீ, போஞ என்னவாம்?

நீலி: போஞக்கி என்ஞன்ஞ கேட்கிறே? நீ போவேடீ, உனக்குத் தான் கட்டுத் திட்டம் ஒண்ணும் கிடையாதே. வயிறு,

வயிறுன்னு சொல்லிக்கிட்டு, சம்பாறிக்கவே அலேஞ்சுக்கிட்டிருந்தால்மட்டும் போருது. அந்த அபூபக்கரு, அந்த நாயர் தம்புரான் இவங்க கால் வைச்ச இடத்திலே புல்கூட முளேக்காதுடீ, தெரிஞ்சுதா?

சக்கி: அதெல்லாம் சரிதான், கட்டுதிட்டம் இதைப்பற்றி நானும் பேசுவேன். அங்கே கூலியைக் கொடுத்துத்தானே வேலே வாங்கருங்க; அப்படி வேலே செய்கிறதிலே என்ன கட்டு திட்டம் குறைஞ்சி போயிடிச்சாம்?

நீலி: பெரிய கூலி! சாவு—வாழ்வு எதுக்குமே போகவேணும்னு தடுத்திருக்காங்க. அப்படிப்பட்டவங்க வயலிலே பணி செய்ய யாராவது போவாங்களா? வாரியர் எசமான்கிட்டே நான் வேலேக்கு போகப்போறேன். அங்கே வேலே ஏதும் இல்லேன்னு சொல்லிட்டா, வேறே இடத்தைப் பார்ப்பேன். எங்கியும் கிடக்கல்லே, கவலே இல்லே. தலேமுடியிலே ஈறு எடுத்துக்கிட்டுக் குடிசையிலே கிடப்பேன்.

சக்கி: அந்திப் போதுக்கு என்னடீ செய்யறது? வந்த மழேயும் தான் அப்படியே தேங்கித் தயங்கிக்கிட்டு நிக்குதே. சோத்துக்கே வழியில்லாத காலமாயில்லே போயிறிச்சு. பிள்ளேக்காணு வயித்துப் போக்கு நிக்கல்லே. கொஞ்சம் மருந்துக் கசாயம் போட்டுக் கொடுக்கலாம்ணு, கையிலே காசு உண்டா, மருந்து சாமான் வாங்கியாற?

நீலி: உனக்கு இப்போ மருந்து—மாயம் செய்ய காசு இல்லேங்கறே. என் வீட்டிலே அடுப்பு மூட்டியே நாளு மூணுயிடிச்சு. என்ன செய்ய? மாப்பிளாக்காரரும் இந்துக்காரரும் கட்டு திட்டம் இல்லாம கைகோத்துக்கிட்டு, கூடி இருக்கிறப்போ வவுத்துக்குச் சோறு எங்கினே கிடைக்கும்?

[வேலு வருகிறுன்]

வேலு: அடீ! சக்கியில்லே. கிளம்பு. நம் வயலிலே முதலிலே இறங்கு. மத்தவங்கள்ளாம் எங்கே?

சக்கி: வண்ணுரய்யா, இந்தச் சக்கியை நீங்க தேடவேணும். எனக்கு வேறே ஜோலி இருக்கு.

வேலு: நான்தான் நேத்தைக்கே உன்னிடத்திலே சொல்லி வைத்தேனே.

நீலி: சொல்லிட்டா என்னவாம்? நீங்க யாரு இந்த ஊருக்கே எசமாணு? நாங்க போக்கரு அய்யாகிட்டே வேலேக்குப் போகப் போறோம்.

[நீலியும் சக்கியும் போகிறுர்கள். வேலு திகைத்து நிற்கிறுன். அபூபக்கர் வருகிறுர்.]

அபூபக்கர்: என்ன வேலு, நீ அப்படியே திகைச்சுப் போய் நின்னுட்டியே?

வேலு: ஹூம். ஒண்ணும் பேசிக்கிருப்போல இல்லே, மாப்பளே! வேலேக்குக் கூப்பிட்டா எல்லாரும் மொகத்தைத் திருப்பிக்கிட்டுப் போகிறுளுக. வயலிலே புல்லோ எக்கச்சக்கமாய் மண்டிக்கிடக்கு. நாம் வாயாலே சொல்லிட்டா அத்தனே புல்லும் வெளியேறிவிடுமா? அதுதான் யோசனே பண்ணுறேன்.

அபூபக்கர்: ஐம்பது ஆளுகள் வேணும்டு கணக்குப் போட்டிருக்காக நம்ப ஸ்ரீதரன் நாயரு. கிளக்குப் பக்காலே தொடங்கலாம் வேலேயைன்னிட்டு நான் சொன்னேன். மேற்குப் பக்கம் வர்றப்போ தண்ணீர் நிறையத் தேங்கும். அப்போ களே பிடுங்க அந்தப் பக்கம் போகலாமே.

வேலு: ஸ்ரீதரன் எசமான் ஒப்புக்கொள்ளவில்லே, இல்லேயா? எல்லாத்தையும் ஒரே முட்டா பரப்பி வைச்சுக்கிட்டாரு. ஆனல், அவரு சொல்லுகிறதிலேயும் உண்மை இருக்கு. இதெல்லாம் எங்கேதான் கத்துக்கிட்டாங்க! முன்னுலேயே பழக்கம் இருக்கும்னு தோணுது.

அபூபக்கர்: அதொரு நல்ல மூளேதான் வேலு. ஆனுலும், இந்தக் களே பறிக்க இப்போ ஆளுங்க வேணுமே. (தொலேவில் நோக்கி) அதோ இரு பெண்டுகள் வராங்களே.

வேலு: நீங்கதான் ஒரு குரல் கொடுத்துப் பாருங்களேன். எனக்குப் போறும் போறும்னு ஆயிடிச்சு.

[பாத்துமாவும் கறும்பியும் வருகிறுர்கள். கூடவே இரு நடவுக்காரிகளும் வருகிறுர்கள்.]

அபூபக்கர்: வாங்க, பெண்டுங்களா, வாங்க. நம்ம வயலுக்கு வாங்க. நாலணுக் காசு; மேற்கொண்டு உச்சிப் போதுக்கு சோறு வேறே உண்டு.

பாத்துமா: அணுக் கூலி கொடுத்தாலும், இங்கே எங்களாலே முடியாது. நாங்க யாரும் உங்ககிட்டே வேலே செய்யக்கூடாது.

அபூபக்கர்: அது ஏனும்?

பாத்துமா: வாரியர் அய்யா சொல்லிவைச்சிருக்காக, உங்க வயலிலே வேலே செய்யக்கூடாதின்னு.

அபூபக்கர்: ஏன்? நானும் காசுதானே கொடுக்கிறேன்!

பாத்துமா: காசு கொடுத்திட்டா எல்லாம் ஆயிடிச்சா! உங்களுக்குத்தான் அவுங்க சொல்லிக்கருப்போலே ஒரு கட்டு திட்டம், பண்டிகை—பெருநாளு எதுவும் கிடையாதே.

கறும்பி: (முன்வந்து) யார் வீட்டு வேலேக்குப் போகக்கூடாது? மாப்ளா வீட்டு வேலேக்கா, தியன் சாதிக்காரர் வீட்டு வேலேக்கா அல்லது நாயர் வீட்டு வேலேக்கா?—எதுங்கறது முதலிலே நிச்சயமாவட்டும். சரி, நாம் போகலாம் வாடி. (பாத்துமாவையும் கூட்டிக்கொண்டு போகிருன்.)

[வேலு, அபூபக்கரின் முகத்தைப் பார்த்துச் சிரிக்கிருன். அபூபக்கரின் முகம் மெள்ள சாந்தப்படுகிறது. வறண்ட சிரிப்புத்தான் அவர் முகத்தில் எஞ்சியிருக்கிறது.]

அபூபக்கர்: (சிரித்துக்கொண்டு) இந்தக் காலமில்லாக் காலத்திலே ஏதாவது வழிசெய்ய முடியுமா, பாரேன் வேலு!

வேலு: இனி யாரையும் கூப்பிட்டுப் பிரயோசனமில்லே. ஊரே நமக்கு எதிராகத் திரும்பிக்கிட்டிருக்கு.

அபூபக்கர்: நாம்பளு என்ன தவறு செய்திட்டோம்? ஊர்ப் பெரியவங்களுக்கு ஏதாவது கெடுதி செய்திருக்கிருேமா?

வேலு: அப்படி ஏதாவது செய்தால்தானு, மாப்பளே? பொறுமை-பொச்சாப்புக்கெல்லாம் காரணம் வேணுமா? பார்க்கலே நீங்க, இவ்வளவு பசுமை நம் வயலிலேதானே இருக்குது? மற்றவங்க வயல்களிலே முளேயே அவிஞ்சுபோய், காய்ந்து கிடக்குதே, நீங்க பார்க்கல்லே?

அபூபக்கர்: இப்போ நாலு பேர் பார்த்துச் சிரிக்கும்படியான நிலேமையை ஏற்படுத்திவிட்டாயே, ஆண்டவனே!

[ஸ்ரீதரன் வருகிருன்.]

ஸ்ரீதரன்: ஏன்? களே பறிக்க யாரும் கிடைக்கவில்லேயா?

வேலு: ஹூம்! கூப்பிட்டவங்களெல்லாம் மொகத்தைத் திருப்பிக்கிட்டுப் போகிருங்க. நமக்கு எதிராய் ஏதோ 'ட்ரிக்' செய்து வைத்திருக்கிருங்க.

ஸ்ரீதரன்: எனக்கும் அப்படிதான் தோன்றியது, நானும் சில பேர்களேக் கூப்பிட்டுப் பார்த்தேன். அப்போதுதான், ஊர் மூச்சூடும் கட்டுமானம் செய்துவைத்திருக்காங்க என்கிறது புரிஞ்சுது.

அபூபக்கர்: தம்பி! இப்போது நம்ப காரியம் பெரிய சங்கடத்திலே சிக்கிக்கொண்டதே.

ஸ்ரீதரன்: அதைச் சொல்லி லாபம் இல்லை. நம் வீட்டுப் பெண்கள் வந்து களை பறிக்கட்டும். இந்த மாதிரி ஆகியிருக்கிறது என்று விவரம் கேட்டதுமே, அம்மா புறப்பட்டுவிட்டாங்க. வேலு வீட்டிலேயிருந்தும் பெண்டுகள் கிளம்பிவிட்டாங்க. அவங்க அவங்க வீட்டு வேலையை அவங்க அவுங்களே செய்துகொள்ளு கிறதை யார் தடுக்கமுடியும்?

அபூபக்கர்: அப்படியானு, பெரியம்மா வரவேண்டாம். பெரிய குடும்பத்திலே மூத்தவங்க; அவங்க வயலிலே இறங்கப் படாது, சொல்லிப்புட்டேன். இந்த அபூபக்கரு கண்ணை மூடுகிறமட்டும் இந்த அநீதமெல்லாம் வேண்டாம்.

வேலு: அது சரிதான். பெரியம்மா வயலிலே இறங்கி வேலை செய்கிறதாவது! வேண்டாம். கீழ்க்கடையிலே வழக்கம் இல்லாத காரியம் இது.

ஸ்ரீதரன்: நானே அதைச் சொன்னேன். அதுக்கு அம்மா சொன் ளுங்க: ''நம் வயல் வேலைக்கு ஒருத்தரை அழைத்து, அவங்க வரமாட்டேன்னு சொன்னதுமட்டும் கீழ்க்கடையிலே நடந் திருக்குதா?'ன்னு திருப்பிக் கேட்டாங்க! நடக்கட்டும். நாம்தான் புதுமைக்கு இறங்கிவிட்டோமே. கொஞ்சம் பழமையும்தான் அங்கே இருக்கட்டுமே.

வேலு: (நெஞ்சில் கைவைத்து) ஓ! இந்தக் களைப் புல்களை மனிதன் பிடுங்கியா மாயும்?

அபூபக்கர்: வேலு! மலைச்சு நிக்காதே. இவ்வளவு களைப் புல்களை யும் படைச்சவன் பறித்தெடுப்பான், பார்த்துக்கொண்டிரு.

[உள் பக்கத்திலிருந்து களை பறிக்கும்போது இசைக்கப் படும் பாட்டு கேட்கிறது. இரண்டாவது திரை விழு கிறது. அங்கே சுகுமாரன் நிற்கிறுன். ஆயிஷா, பார்வதி, அவள் அன்னை, வேலுவின் பெண்கள்—யாவ ரும் வயலில் களை பறிக்கிருர்கள், ஆயிஷா பாடுகிருள்; பார்வதி ஏற்றுப்பாடுகிருள்.]

மாற்றுனைக் கலக்கித் துரத்தியவர்
நாட்டின் அடிமைத்தளை நீக்கியவர்
நம்மை ஏழ்மைச் சகதியினின்றும்
வளமையெனும் தாழ்வரைக்குக் கொணர்ந்தவரே!
நாயும் நரியுமாய் வீழ்ந்திருந்த
நாற்பது கோடி மனிதரையும்
உலக அரங்கிலே தலைநிமிர்த்தித்
தன்மானத்துடன் வாழத் துணை புரிந்தார்,
தீயவனின் துப்பாக்கி முனை யெதிரே

திருப்தியுடன் கடவுளையே வாழ்த்தியவர்,
நாம் அந்த அண்ணலின் அடியவர்தாம்
நமக்கு வேண்டி பிறந்தவர் காந்தி
நமக்கு வேண்டி இறந்தார் காந்தி,
நமக்கு வேண்டியே அப் புண்யமூர்த்தியின்
பொன் மேனிதன் சாம்பல் இந்நீரிலுண்டு
நாம் அவர் திருப்பாதச் சுவடுகளை
எப்போதும் உண்மையிலே பின்தொடர்வோம்,
நாம் அந்த மகாத்மாவின் பின் செல்வோம்,
நாம் அந்த அண்ணலின் மக்கள் தாமே.

அபூபக்கர்: *அப்ப, வேலு! இந்த ஒரு மந்திரம் போருதா நமக்கு? ம்ஹும்!*

வேலு: *இதைத்தானே மாப்பளே, இந்த வேலுவும் நினைச்சுக் கிட்டு இருந்தது. இந்தப் பாட்டையும் பாடிக்கிட்டு, நாம் களைபறிச்சால், அந்திப் போதுக்குள்ளாறே அநேகமாய் வேலை முடிஞ்சு கரை ஏறிப்பிடலாம், கிளம்புங்க.*

*[எல்லோரும் களை பறிக்கிருர்கள்.]*

## காட்சி 3

*[அபூபக்கருடைய வீடு, காலை நேரம். அபூபக்கர் கட்டிலில் படுத்திருக்கிருர். அவர் மகள் ஆயிஷா உற்சாக இல்லாமல் குழம்பி நிற்கிருள். வாசல்படிப் பக்கமும் தூண் அருகிலும் மாறி மாறிப் போய் நிற்கிருள். இடையே ஏதோ பேசிக்கொண்டிருக் கிருள்.]*

ஆயிஷா: *(தனக்குள்) போயாகணும். உங்களையெல்லாம் ரொம்பவும் ஆசையாய் வைத்துக்கொண்டிருந்தோம்.*

அபூபக்கர்: *(திரும்பிப் பார்த்து) மகளே, ஆயிஷா!*

*[ஆயிஷா அருகில் வந்து நிற்கிருள். கண்களில் நீர் மல்கி யிருக்கிறது. ஏதும் பேச இயலவில்லை. அபூபக்கர் மகளுடைய தலையை மெள்ளக் கோதிவிடுகிருர். அவர் தொண்டையும் அடைபட்டுக் குரல் தழுதழுக்கிறது.]*

அபூபக்கர்: *வருத்தப்படவேண்டாம் மகளே! படைத்தவன் கஷ்டப்படுத்திஞல், அதற்கு ஒழிவு உண்டா?*

ஆயிஷா: *(முகத்தை உயர்த்தி) அப்பா! நாம் இந்த இடத்தை விட்டுப் போகவேணும். வானமோ கறுத்து இருண்டு*

வருகிறது. (முகத்தைத் திருப்பி, கண்ணீரை ஒத்தித் துடைத்துக்கொண்டு) அம்மாவாலே நடக்கமுடியாதே, எனக்கு அதுதான் சங்கடமாய் இருக்கு.

அபூபக்கர்: காலமில்லாத காலத்திலே ஒரு மழை வேறே. தண்டித்தவர்களையே தண்டித்துக்கொண் டிருக்கிறரே, இந்த ஆண்டவன். ஏதோ, என்ன இருந்தாலும், நம்பியார் ஒரு நல்ல வீடாகப் பார்த்துக்கொண்டு வருவார் நமக்காக.

ஆயிஷா: அப்பாவுக்கு இனியும் அந்த நம்பியாரிடத்திலே நம்பிக்கையா?

அபூபக்கர்: நம்பிக்கை வைக்காமல் என்ன மகளே செய்யறது?

ஆயிஷா: அந்த ஆளுதானே அப்பா நம்மை ஏமாற்றியிருக்கிறரு.

அபூபக்கர்: ஏமாற்றினல், அதற்குக் கூலி ஆண்டவன் கொடுக்கட்டும். நாம்ப மனிதர்களை நம்பித்தான் வாழணும். கண்ணுக்குத் தென்படுகிற மனிதர்களை நம்பாதவன், கண்ணுக்குப் புலப்படாத கடவுளை மட்டும் எப்படி நம்புவான்?

ஆயிஷா: (ஒரு மூலையைப் பார்த்து) இந்த வாசலிலே நானும் அண்ணனும் எத்தனை நாள் விளையாடிக்கொண்டிருந்திருக்கிறோம்!

அபூபக்கர்: அதெல்லாம் நினைக்கவேண்டாம் மகளே! பிறந்து வளர்ந்த இடமாச்சேண்ணு சங்கடப்படுது மனசு. பஞ்சக் காலத்திலேகூட இதைவிட்டுப் போகல்லே.

ஆயிஷா: நமக்கு இதைவிடப் பஞ்சக் காலம் வேறே வரணுமா, அப்பா?

அபூபக்கர்: ஹூம், உன் அம்மாவைக் கலியாணம் செய்து கொண்டு வந்த வருசம்; அப்போது அப்பாருதான் வீட்டுப் பொறுப்பையெல்லாம் பார்த்துக்கிட்டிருந்தாரு. அப்பாருக்கு அப்போது ஒரு வாரண்டு வந்துவிட்டது. அவரை ஜெயிலுக்குக் கொண்டுபோகிற நிலைமை வந்ததும், நான் இந்தக் குடிசையை ஒத்திவைச்சு விடுதலை வாங்கணும்டு முனைஞ்சேன். வாப்பா சொன்னக: 'நான் ஜெயிலுக்குப் போனலும் பரவாயில்லே; குடியிருக்கிற குடிசையை மட்டும் கைமாற விட்டிடாதே மகனே!'ண்டு கண்டிப்பாய்ச் சொல்லிட்டாரு. (துளும்பி நிற்கும் கண்ணீரை வடித்து உதறிவிட்டு) இப்போ, என்னுடைய காலத்திலே இந்த வீடும் போயிடிச்சு.

ஆயிஷா: நிலத்துக்குக்குச் சொந்தக்காரன் மனையைக் காலி பண்ணிக் கொடு என்று சொல்லுகிறபோது, நாம் என்ன

செய்யமுடியும்? (இருவரும் சிறிதுநேரம் மௌனமாக இருக்கிறார்கள்). அந்தச் செவ்விளநீர் தென்னங்கன்னு வளர்ந்து, குலை தள்ளினால். அதை யார் பார்த்துப் பறிக்கப் போகிறாங்களோ?

அபூபக்கர்: (மகளுடைய கையைப்பற்றி) ஓ! அதுக்குத் தண்ணீர் எடுத்து ஊற்றி, நாள் தவறாம எத்தனை கஷ்டப்பட்டிருக்கிறே நீ, மகளே! (சிறிது நிசப்தம், பிறகு ஆதரவுடன்) மகளே! போனதைப்பற்றி நினைச்சு விசனப்படாதே. உனக்கு வேண்டியதை அந்த ஆண்டவன்கிட்டே கேளு. இதுவரைக்கும் தந்தவரு இனியும் தராமலா போவாரு? (குரல் மாற்றம்) மகளே! அமீனாவும் மற்றவங்களும் வர்றபோது நீ அழுது புலம்பக்கூடாதம்மா; அது நமக்கு கௌரவக் குறைவு; மறந்திடாதே மகளே!

ஆயிஷா: ஸ்ரீதரன் நாயரிடத்திலே இதைச் சொன்னீங்களா, அப்பா!

அபூபக்கர்: சொல்லல்லே. ஸ்ரீதரன் நாயரு என் குழந்தையைப் போலவானாலும், நான் செயலிழந்தவன் என்கிற நிலைமையிலே என் தோல்வியைச் சொல்லிக்கொள்ள நா எழமாட்டேங்குது மகளே!

ஆயிஷா: அந்த நம்பியாரிடத்திலே சொல்லுகிறாப்போல அவரிடத்திலேயும் சொல்லிவையுங்களேன்.

[நம்பியார் வருகிறார். முகத்திலே தன் மதிப்பு புலப்படுகிறது. வீட்டுக்குள் வந்து நாற்காலியில் உட்காருகிறார்.]

நம்பியார்: நேத்தைக்கும் இன்னைக்குமாக முப்பது வீடுகளாவது ஏறி இறங்கியிருப்பேன், பெரியவரே!

அபூபக்கர்: ஏதாவது சரிப்பட்டு வந்ததா? எங்கெல்லாம் போனீக?

நம்பியார்: ஒண்ணும் கிடைக்கவில்லை. இந்த மழைக் காலத்தில் எந்த வீடு காலியாக இருக்கும்? பிறத்தியாருக்குக் கொடுக்க இடம் ஏது? (மதிப்புடன்) நான்தான் சொல்லுகிறேனே சாட்சிக்காரன் காலிலே விழுவதற்கு, பேசாமல் சண்டைக்காரன் காலிலேயே விழுந்துவிடலாம். நீங்கள் போக்கர் கிட்டே கேளுங்களேன், இடம் கிடைக்கும்.

அபூபக்கர்: அது கிடக்கு விடுங்க! நம்பளுக்குத் தெருவிலே கிடந்து செத்தாலும் பரவாயில்லை.

நம்பியார்: இப்படிப் பிடிவாதம் செய்கிறது நல்லதில்லை, பெரியவரே! 'பிடிவாதம் பரம நாசம்'னு சொல்லுவாங்க.

அபூபக்கர்: *(மௌனமாக ஆலோசித்துவிட்டு) அல்ல நம்பியாரே! எல்லாருக்குமே குடியிருக்கும் இடம் சொந்தமாக அமையுமா? நமக்கு மட்டும் என்ன?*

நம்பியார்: *(முகபாவம் மாறுகிறது) அதென்னவோ எனக்குத் தெரியாது. இதுக்குத்தான் ஒவ்வொரு வழக்கு - வாய்தாவுக்கெல்லாம் நீங்கள் நேரே வந்து போகணும்னு சொன்னது. கேசு தோற்றுப் போனதும் பலவிதமாய்ச் சந்தேகம் ஏற்படுகிறதில்லையா?*

அபூபக்கர்: *சந்தேகப்படவில்லே, நம்பியாரே! சமாசாரம் என்ன? நிலைமை என்ன?—என்கிறதைத் தெரிந்துகொள்ளலாமே என்கிற எண்ணந்தான். சௌகரியப்பட்டால் அமீனுவிடம் சொல்லிப் பார்க்கலாமே.*

நம்பியார்: *சொல்லிப் பார்த்துவிட்டேன். உங்களுக்கு அமீனு மூலம் பாதுகாப்பு கிடைக்காமல் இருக்கிறதும் நல்லதுதான். அதுக்கும் என்னைப் பொறுப்பாளியாக்கி, இனியும் நான் பணம் பறிக்கப் பார்க்கிறேன் என்று பழி சுமத்த இங்கே ஆளுகள் நிறைய இருப்பாங்களே!*

அபூபக்கர்: *நீங்க வீணுக்குச் சந்தேகப்படுகிறீங்க நம்பியாரே!*

நம்பியார்: *என்ன இருந்தாலும் கிரகக் கோளாறு உள்ளவருடைய காரியத்திலே ஈடுபட்டால், ஈடுபட்டவருக்கும் சங்கடம்தான்.*

*[அமீனுவும் போக்கரும் வருகிறார்கள். ஆயிஷா உள்ளே போகிறாள். அமீனு நாற்காலியில் உட்காருகிறார். போக்கர் நிற்கிறான்.]*

அபூபக்கர்: *(போக்கரைப் பார்த்து) உட்காருங்க!*

*[போக்கர் உட்காருகிறான்]*

அமீனு: *(நம்பியாரிடம்) அட, நம்பியாரா! பாக்கியசாலிதான், நீங்க!*

நம்பியார்: *ஆமாம், ஆமாம். அமீனு ஸார்! இப்போது சங்கடத்திலே சிக்கிக்கொண்டவங்களுக்குப் 'பாக்கியசாலி' என்றுதான் பேரு.*

அமீனு: *(அபூபக்கரைக் காண்பித்து) இவர்தானே பிரதிவாதி?*

நம்பியார்: *அது கிடக்கட்டும், அமீனு ஸார்!*

*[நம்பியாரும் போக்கரும் சற்று ஒதுங்கிப் போய் ரகசியம் பேசிக்கொள்ளுகிறார்கள்.]*

அமீனு: *(அபூபக்கரிடம்)* இப்போ இந்த ஜப்தி உத்தரவை அமல் நடத்த உத்தரவு வந்திருக்கிறது. சாமான்களையெல்லாம் எடுத்து ஒழித்துவிடலாமா?

அபூபக்கர்: கிட்டத்தட்ட உச்சிபோதுக்குள்ளே வீட்டைக் காலி செய்துவிடுகிறேன். அமீனு ஸார்! அப்போ எல்லோருக்குமே நிம்மதியாப் போகுமில்லே.

*[நம்பியாரும் போக்கரும் முன்னே வந்து உட்காருகிறார்கள்.]*

நம்பியார்: *(அமீனுவிடம்)* மத்தியஸ்தமாகப் போக ஒரு யோசனை.

அமீனு: சரி, அப்படியே ஆகட்டும்.

நம்பியார்: *(அபூபக்கரிடம்)* காரியத்திலே இறங்காமல், விவகாரத்தைச் சமாதானமாய்த் தீர்த்துக்கொள்ளலாம். ஆனால், ஒண்ணு, அதுக்குப் பதிலாக நீங்கள் போக்கருக்கு ஒரு உதவி செய்யவேணும், என்ன?

அபூபக்கர்: *(வியப்புடன்)* என்னப்பா, நான் உதவி செய்ய இருக்கு!

போக்கர்: விருப்பம் இருந்தால் செய்யுங்க, போறும். இந்தக் குடியிருப்பு இடத்துக்குக் குத்தகைச் சீட்டு எழுதிக்கொடுங்க போதும்; காலி செய்துகொடுக்க வேணும். அந்த ஸ்ரீதரன் நாயருடைய நிலம் இருக்கிறது பாருங்க, அதை என் பேருக்கு எழுதிக்கொடுத்திடுங்க. எனக்கு அதன் மேலே வெகு நாளாகவே ஒரு கண். அதை எனக்கு உரிமையாக்கிக் கொடுங்க. என்ன விலை சொன்னாலும் சரி, சம்மதம்.

நம்பியார்: என்ன முதலாளி! கொடுத்துவிடுங்களேன். குத்தகைக்கு எடுத்த நிலந்தானே? உங்களுக்கு இங்கே பக்கத்திலேயே நிலம் வாங்கித் தருகிறோம்.

போக்கர்: இதோ, வீட்டுக்குப் பக்கத்திலே இருக்கிற நிலத்தைக் கொடுத்துவிட்டதாகவே வைத்துக்கொள்ளுங்க. ஸ்ரீதரன் நாயருடைய நிலத்தைக் காட்டிலும் இது கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும்.

அபூபக்கர்: அது இப்போ என் கைவசத்திலே மட்டும் இல்லையே. நம்பியாருக்குத் தெரியாதா? இந்தப் போகம், நான், ஸ்ரீதரன் நாயரு, வேலு - மூணு பேருமாக சேர்ந்து சாகுபடி செய்து வருகிறோமே.

போக்கர்: அப்போ குத்தகைக்காரங்க அதிகமாய்ப் போய் விட்டாங்க!

நம்பியார்: நான்தான் அன்னைக்கே சொன்னேனே, சொன்னுப் போலேயே, ஸ்ரீதரன் நாயர் ஏமாற்றிவிட்டாளு இல்லையா? அவங்க அவங்களுக்குக் குத்தகை உரிமை இருந்தும், யாரும் ஏதும் செய்யமுடியாமல் ஆகிவிட்டதில்லையா? (சற்று யோசித்து) போகட்டும்; அதுக்கும் ஒரு வழி இருக்கிறது. பெரியவரே! நீங்க உங்களுடைய குத்தகை உரிமையைப் போக்கருக்கு எழுதிக் கொடுத்துவிடுங்க. பிற்பாடு ஸ்ரீதரன் நாயரைப் போக்கர் பார்த்துக் கொள்ளுவார்.

போக்கர்: ஸ்ரீதரன் நாயர் ஒண்ணும் இந்தப் போக்கரிடத்திலே வாலாட்ட முடியாது. அவன் முதலிலே வயலுக்குள்ளே இறங்கவே முடியாதே. அப்புறம்னு இந்த விளைச்சலை அறுவடை செய்ய வரணும்?

அமீனு: எப்படியாவது விவகாரம் தீரட்டும், அபூபக்கரே! எப்படிப் பார்த்தாலும் உங்க பெரியவங்க கட்டிவைத்த குடியிருப்பு இது; இதைவிட்டுக் கிளம்ப வேண்டாம்னுட்டு நினைக்கிறதனுலே, போக்கரை நல்லவர்னுதான் சொல்லணும்.

நம்பியார்: குழந்தைகள் கையைப் பிடித்துக்கொண்டு, இந்த பெரு மழைக் காலத்திலே வெளியே புகல் இல்லாமல் நிற்கிறதைக் கண்ணுலே பார்க்கமுடியுமா?

அபூபக்கர்: (யோசனை செய்துவிட்டு) ஊஹூம், நான் அதைச் செய்யமாட்டேன். அந்தக் குழந்தை என்னை நம்பித்தான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறது, அவங்களுக்கு வேறே யாரும் கிடையாது. நான் இப்போ உங்க யோசனைப்படி செய்தால், கொலைபாதகம் செய்தது போலாகும்.

போக்கர்: அப்போ, உனக்கு ஒரு 'காபிர்' காரனுக்கு உதவி செய்தாகணும், இல்லையா? எனக்கு அந்த ஆண்டவன் முன்னிலையிலே குற்றவாளியாகாமல் இருந்தால், போதும்.

அபூபக்கர்: 'காபிர்'காரன் என்று சொல்லவேண்டாம், போக்கரே! யார் 'காபிர்' எவர் இஸ்லாமியக்காரர் என்பதெல்லாம் செத்தபின்னே, ஆண்டவன் முன்னிலையிலே தானே தெரியவரும். தீர்ப்புக் கூறுகிற 'கயாமத்' நாள் அப்போதுதானே.

போக்கர்: அப்படியானுல் நீ வீட்டைவிட்டு இறங்கு, (அமீனுவோடு) எனக்கு இந்த இடத்தை ஒழித்துக் கொடுத்தாகணும்!

அமீனு: இந்த நிலைமையிலே நீங்கள் வீட்டைக் காலிசெய்து கொடுக்கத்தான் வேண்டும், அபூபக்கரே!

அபூபக்கர்: சொன்னேனே, உச்சிப்போதுக்கெல்லாம் ஒழித்துக் கொடுத்துவிடுகிறேன். அந்த வேலுவும் வந்துவிடட்டும்.

நம்பியார்: வேலு கையிலே வீடா இருக்குது? வெறும் மெனக் கெடு.

போக்கர்: அல்ல, இனி வேலுதானே இந்த ஊரிலே பெரிய மிராசுதாரு.

நம்பியார்: (எழுந்திருந்து) நான் சொல்லவேண்டியதைச் சொல்லி யாகிவிட்டது. பிடிவாதத்திற்கு முடிவு நாசந்தான். என்ன ஆனாலும், வீட்டைவிட்டு வெளியேறுகிறதைக் காண நான் இங்கே நிற்கமாட்டேன்.

அமீனு: இருங்க நம்பியாரே, சேர்ந்து போகலாம்.

அபூபக்கர்: அதெல்லாம் ஒண்ணுமில்லே நம்பியாரே! உங்களுக்கு என்ன வந்தது? உங்கள்பேரிலே குற்றமில்லேயே.

போக்கர்: (அமீனுவிடம்) அப்புறம் இந்த இடத்தை ஒழுங்கா காலி செய்ய வைக்கணும். உங்களுக்கு முடியாவிட்டால் சாமான் களே எடுத்து வெளியே போடுங்கள். அதுக்கும் முடியாத போனல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

அபூபக்கர்: அப்படியொன்றும் பதட்டப்பட வேண்டாம், போக்கரே! இது இன்னேக்கு எனக்கு வந்திருக்கு; நாளேக்கு உனக்கும் இதே நிலே வரும்.

போக்கர்: என் இடத்திலே இருந்துகொண்டாடா இந்தத் திமிரு பேச்சு பேசறே? வீட்டைவிட்டு வந்து அப்புறம் பேசுடா!

ஆயிஷா: (வெளியே வந்து) அப்பா! எழுந்திரிங்க, போவோம். சாமான்களேயெல்லாம் எடுத்துக் கட்டுங்க; இதை விட்டுப் போய்விடலாம்.

அபூபக்கர்: (எழுந்திருந்து, தள்ளாட்டத்துடன்) எங்கடி மகளே, போவது?

[அமீனு தலேயைத் திருப்பிக்கொள்ளுகிருர். போக்கர் அங்குமிங்கும் நடைபோடுகிருன். வேலுவும் ஸ்ரீதரன் நாயரும் அங்கு வந்து சேருகிருர்கள்.]

ஸ்ரீதரன்: (அபூபக்கரின் கையைப் பிடித்து) என் வீட்டுக்கு வந்து விடுங்க. சந்தேகம் வேண்டாம். நாம் ஒரே நிலத்தில் பாடு பட முடியும் என்று ஆனபோது ஒரே வீட்டில் சேர்ந்து வசிக்கவும் நம்மால் முடியும்.

[போக்கரும் அமீனுவும் நம்பியாரும் வியப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளுகிருர்கள்.]

ஸ்ரீதரன்: (ஆயிஷாவைப் பார்த்து) தங்கை பாருக்குட்டி வந்திருக்கிருள். அம்மாவும் நீயும் அவளோடுகூட நம் வீட்டுக்குப் போங்க. அப்பாவை நான் அழைத்து வருகிறேன்.

ஆயிஷா: அம்மாவாலே நடக்கமுடியாதே.

ஸ்ரீதரன்: அது எனக்குத் தெரியாதா? வாசலிலே நம் பல்லக்கு வந்திருக்கிறது. மெள்ள அம்மா கையைப் பிடித்து அழைத்து வாசல் வரைக்கும் கொண்டுவந்து விட்டுவிடு. இதுகூட முடியாதா?

ஆயிஷா: வாசல் வரைக்கும் நடந்து வந்து விடலாம். அதிகம் நடக்கத்தான் முடியாது.

ஸ்ரீதரன்: (அபூபக்கரிடம்) உங்களேயும் உங்கள் குழந்தைகளேயும் எங்கள் வீட்டுக்காரர்களாகவே ஏற்றுக்கொள்வது, எங்களுக்கொரு பாக்கியம். அறிந்தவர்களுக்கு உங்கள் பெருமை தெரியும். இன்று முதல் நீங்கள்தான் எங்கள் குடும்பத்திற்கு மூத்தவர். வாங்க, போகலாம் நம் வீட்டுக்கு. (அமீனுவிடம்) நீங்கள் உங்கள் கடமையைத் தொடங்கலாம்.

அமீனு: நான் உங்களே மனதார வாழ்த்துகிறேன். மிஸ்டர் நாயர்! வயிற்றுப் பிழைப்புக்காக இப்படி வேஷம் போட்டுக்கொண்டு, உங்கள் போன்றவர் எதிரே நிற்கும்போது, எனக்கே என் இழிநிலே புலப்படுகிறது; வெட்கப்படுகிறேன்.!

ஸ்ரீதரன்: ம்த்சு! கவைக்கு உதவாத பேச்சு. சொந்த சகோதரனே நடுத்தெருவிலே நிற்கவைக்கிற நில உரிமை இருக்கிறதே, அதுதான் இழிவு - நீசத்தனம். உங்க வயிற்றையும் என் வயிற்றையும் குத்தகை எடுத்திருக்கிறவன் மிராசுதாரன். இந்தக் குத்தகை முறையை மாற்றவேண்டும். அது மாறித்தான் தீரும். தானுகவே நம்முள் எழுகிற இந்த மூடத்தனமும் அகன்று விலகிவிடும். உங்கள் தன்மைக்கு என் நன்றி!

பாருக்குட்டி: (உள்ளே வந்து, ஆயிஷாவின் கை பிடித்து) போகலாம் வா! அம்மா பல்லக்கிலே ஏறி உட்கார்ந்து விட்டாங்க.

அபூபக்கர்: நீ போ மகளே! நான் இதோ வர்றேன்.

வேலு: மாப்பளே! தட்டிக் கழிக்காதீங்க, கிளம்புங்க. நான் சாமான்களேயெல்லாம் எடுத்து வர்றேன்.

அபூபக்கர்: (ஸ்ரீதரனிடம்) குழந்தை!... உங்களே அந்த ஆண்டவன்தான் தக்க சமயத்திலே இங்கே கொண்டுவந்து விட்டிருக்காரு. (சோகத் தழுதழுப்பு).

[அபூபக்கரும் ஸ்ரீதரன் நாயரும் முன்னே போகிருர்கள். பாருக்குட்டி ஆயிஷாவின் கையைப் பிடித்துக் கொண்டு பின்னே செல்லுகிருள்.]

# களம்: 3

## காட்சி 1

*[நாற்சந்தி இடம். காலை நேரம். பறங்கோடன் நாயரும் வாரியரும் இருக்கிறார்கள். பறங்கோடன் நாயர், வாரியரின் கையைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்.]*

பறங்கோடன்: நம்பியார் எங்கே? அவரை நீங்கதான் கண்டு பிடித்துக் கொடுக்கணும்; இல்லாதபோனால் உங்களை விடமாட்டேன். கிளம்புங்க!

வாரியர்: (கையை உதறி விடுவித்துக்கொண்டு) என்னிடத்திலே வந்து ஏனய்யா பழி கிடக்கிறீரு? என் கையிலேயா நம்பியார் இருக்கிறாரு?

பறங்கோடன்: உங்க கையிலே இருந்தவர்தானே? நீங்கதானே அந்த யமனை என்னோடு சேர்த்துவிட்டது. அதனாலேதானே நான் இப்போது சங்கடத்திலே சிக்கியது.

வாரியர்: உங்களுக்கு என்ன சங்கடம்?

பறங்கோடன்: சங்கடமா? இதைவிட வேறென்ன சங்கடம் வேணும்? இப்போது போலீஸ் என்னை விடமாட்டேங்குதே!

வாரியர்: போலீஸாருக்கு என்ன வந்தது? போலீஸ் குற்றவாளிகளைத்தானே பிடிக்கும்?

பறங்கோடன்: ஆமாம். இப்பவும் குற்றவாளியைத்தான் பிடிச்சிருக்காங்க.

வாரியர்: அப்படி இருக்கிறபோது ஏன் பொய் வழக்குக் கொடுக்கப் போனீங்க? பொய்யும் புளுகுமாகத்தானே எழுதிக் கொடுத்தீங்க? வேலுவும் ஸ்ரீதரன் நாயரும் சேர்ந்து கன்னுக்குட்டியைக் கட்டிப் போட்டுவிட்டாங்க என்றுதானே புகார் கொடுத்திருக்கிறது.

பறங்கோடன்: நீங்களும் உங்க யமன் இருக்கிறானே நம்பியார்— இரண்டு பேரும் கூடி யோசனை சொன்னதனாலேதானே நான் செய்தது?

வாரியர்: *அதற்காக? கன்னுக்குட்டியைக் கண்டவங்க வயலிலே நானு மேயவிடச் சொன்னேன்? இல்லே, நம்பியார்தான் சொன்னுரா?*

பறங்கோடன்: *(நையாண்டியாக) யார் சொன்னுரா? காண்பிக்கிறேன். எனக்குக் கிடைத்ததிலே பாக்கிப் பங்கை உங்களுக்கு வைத்திருக்கிறேன். எனக்கு ஹெட்கான்ஸ்டபிளை நன்ருகத் தெரியும்; அவரோடு பேசிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். உங்களைக் கைப்பிடியாய்க் கொண்டுவரச் சொன்னுர்.*

வாரியர்: *அப்புறம்?*

பறங்கோடன்: *அப்புறமா? ஆளைச் சங்கடத்திலே சிக்க விட்டுப் பிட்டு, 'அப்புறமா?'ன்னு கேட்கிறீங்க! (சாமர்த்தியமாக) நீங்க பார்த்தீங்களா, எங்கே அந்த நம்பியாரு?*

வாரியர்: *(தொலேவில் பார்த்து) ஆகட்டும்; நம்பியாரைக் காட்டித் தருகிறேன். உங்க மயிலேக் காளேயை நாளேக்கு என் ஏரிலே பூட்டத் தரமுடியுமா?*

பறங்கோடன்: *ஆகா; தருகிறேனே. சும்மா, என்னு 'ஜில், ஜில்'லினு போகும் தெரியுமா என் மயிலேக் காளே!*

வாரியர்: *நிச்சயம்தானே கொடுக்கறது?*

பறங்கோடன்: *நிச்சயம்.*

வாரியர்: *அப்போ கையடிச்சுக் கொடுங்க. (கைநீட்டுகிருர்).*

பறங்கோடன்: *(கையடித்துக் கொடுத்து) சரி, அந்த யமகாரப் பயல் எங்கே?*

வாரியர்: *(வாசல் பக்கம் சுட்டிக் காண்பித்து) அதோ வருகிருர் பாருங்க. வண்டியிலிருந்து இறங்கருரு. அதோ போகிருரு. அதோ போகிருரு. பின்னுலே, அது யாரு துருக்கித் தொப்பிக் காரன்? . . . ஓ! அவன் அபூபக்கருடைய மகன் பாப்பு இல்லே? ஆமாம், அவனேதான்.*

பறங்கோடன்: *இந்தத் தந்திரத்தையெல்லாம் அங்கே சொல்லிக்க வேண்டாம், வாரியரே!*

*[நம்பியார், போக்கர், பாப்பு—மூவரும் வருகிருர்கள்.]*

பறங்கோடன்: *(நம்பியாரைப் பார்த்து) ஓ! நம்பியாரே!*

நம்பியார்: *(திரும்பிப் பார்த்து) ம்ஹும்; . . . என்ன பெரியவரே!*

பறங்கோடன்: *அதெல்லாம் சரியாயிடிச்சு. அதிலே ஒரு அயிட்டம் மட்டும் கொஞ்சம் சரிப்படுத்திக் கொடுக்கணும். ஹெட்*

கான்ஸ்டபிள் உங்களைக் கொஞ்சம் கையோடே கூட்டிவரச் சொன்னுரு.

நம்பியார்: என்ன சரிப்படுத்தணுமாம்?

வாரியர்: எலும்பை. எலும்பையெல்லாம் சரிப்படுத்தணுமாம்.

பறங்கோடன்: (வாரியரை முறைத்துப் பார்த்துவிட்டு) ஆமாம்; நம்ப எதிராளியினுடைய எலும்பைச் சரிப்படுத்தத்தான். 'பெட்டிசன்' வழக்குக் கொடுத்திருக்கிறேமில்லே, அதிலே ஏதோ ஒண்ணு சரிப்படுத்தணுமாம்.

நம்பியார்: (யோசித்துவிட்டு) இன்னும் கொஞ்சம் கூடுதலாய் எழுதிச் சேர்க்கவேண்டியிருக்கும். அதைப் பக்கா வழக்காக்கி விடணுங்கற எண்ணந்தான் நமக்கு. (போக்கரிடம்) நம்ம செயலும் கைக்கூடுகிற நிலைக்கு வந்திருக்கிறது.

போக்கர்: உம்; நடக்கட்டும். அதிட்டம் இருந்தாக்கி, எல்லாம் சரியாகும்னு வெச்சுக்கங்க.

நம்பியார்: அப்படியாளு ஒரு மினிட்டு நீங்க இங்கே நில்லுங்க.

[நம்பியார், பறங்கோடன் நாயர், வாரியர்—மூவரும் போகிருர்கள்.]

போக்கர்: (பாப்புவிடம்) நல்லவன்தான் இந்த நம்பியார். உன்னைக் கண்டுபிடிக்க இந்த ஆள் எவ்வளவு மெனக் கெட்டிருக்காரு தெரியுமா? உன் அப்பாரிடத்திலே அவ்வளவு சிநேகம் இந்த ஆளுக்கு.

பாப்பு: ஆசாமி நல்லவர்தான்; சந்தேகமில்லே. இவர் வந்த போது, நான் 'மலபார் ரெஸ்டாரெண்டி'லே இருந்தேன். நம் நாட்டுக்காரனை ஒரு முஸல்மான்தான் அதை நடத்து கிருன். அங்கேதான் என்னை இவரு கண்டுபிடிச்சாரு. ஆபீஸ் போகிறபோதும், லீவு லெட்டர் கொடுக்கிறபோதும் என் கூடவே இருந்தார். இதோ, இப்போதுதான் பிரிந்து போயிருக்கிருர்.

போக்கர்: போயிட்டாரேன்னு கலங்கிட்டியாங்காட்டியும்! சிநேக முள்ள ஆள்தாங்கறேன்.

பாப்பு: சிநேகமுள்ளவர்தான். இங்கே வந்து சேருகிறவரைக்கும் சொல்லியிருக்கிருரு, அந்த ஶ்ரீதரன் நாயர் எங்க அப்பாரை ஏமாற்றியிருக்கிற கதையை. பாவம், கண்ணிலே ஜலம் முட்டிக்கொண்டு வந்தது.

போக்கர்: அந்த ஆளுக்கு எப்படிச் சகிக்கும்? மனிதனகப் பிறந்த எவனுக்கும் அது சகிக்காதுங்கறேன்!

பாப்பு: யாருக்குமே சகிக்காதுதான். நிலம் உள்ளவன் நிலைமையைப் பார்த்தீகளா சித்தப்பா! குடியிருப்பு இடமும் போயிடிச்சு. பாடுபட்ட நிலமும் போயிடிச்சு.

போக்கர்: அதைப்பத்திப் பேசவேவேண்டாம் குழந்தை! உன் குடியிருப்பு இடத்தைப் பறித்துக்கொள்ளுகிற தினத்திலே, இந்தப் போக்கருக்குச் சாவு நாளுன்னு வெச்சுக்கோ. சரித்தானே?

பாப்பு: அதுக்காக அல்ல சித்தப்பா! நீங்க ஏன் அப்படிச் செய்யணுங்கறதுக்கு நம்பியார் சமாதானம் சொன்னுரே.

போக்கர்: சொல்லியிருப்பார், சொல்லியிருப்பார். அந்த ஆள் இந்துவானுலும் நல்லவன்தான். உனக்கு அது தெரியுமா? அன்னைக்கு நான் அப்படிச் செய்யாதபோனு, உன் வீடு இப்போ அந்தக் 'காபிர்' கையிலேயாக்கும் போயிருக்கும்.

பாப்பு: நம்பியார் சொன்னுரே, எங்க அப்பாரு ஸ்ரீதரன் நாயருக்கு நிலத்தைச் சாசனம் செய்து கொடுத்திடறதாகத் தீர்மானிச்சிருக்கிருராமே.

போக்கர்: அதையெல்லாம் நினைச்சுப் பார்க்காதே, குழந்தை! பரம்பரைக் குத்தகை உரிமையுள்ள நிலம் அது. குத்தகை வாரத்தைக் கவர்மெண்டே குறைச்சு வெச்சிருக்கு. அதை அத்திரியாக் கைகழுவிக் கொடுத்துவிட்டு, அவங்ககிட்டே குத்தகை வாங்க நடக்கிருரு ஒங்க அப்பாரு. இதுக்கும் வேனு ஒரு கூட்டு. என்னத்தைச் சொல்றது?

பாப்பு: கஷ்டம்! அப்பாரை ஏமாற்றிவிட்டாங்க. அவரு நல்லவரு. அப்பாவி மனிதர்.

போக்கர்: ஆமாங்கறேன்! இந்த இந்துக்கள் இருக்காங்களே, இப்படித்தான் முஸல்மான்களை நயவஞ்சகமாய் ஏமாற்றிவிடுகிருங்க. நாம்ப அழிஞ்சு போகணும்; அவனுக தின்னு கொழுக்கணும். இதுதானே சூழ்ச்சி!

பாப்பு: ஹோ! இவங்களுடைய போக்கிரித்தனத்தையெல்லாம் பம்பாயிலே பார்க்கணும். ஆண்டவனே! . . . முஸ்லீம்களும் சும்மா இருக்கவில்லை. பதிலுக்கு இந்தக் காபிர்களையும் படாத பாடு படுத்தி வைக்கத்தான் போருங்க.

போக்கர்: ஹூம்! இஸ்லாமும் சும்மாப் பார்த்துக்கொண்டா இருக்கும்? அப்படி இருந்தால் அது இஸ்லாமா? 'காபிர்'கள் நம்மை வஞ்சனையாக அழுத்திவிடுவாங்க. நாம் நேரிடையாகவே புகுந்து அவங்களை முறியடிக்கணுங்கறேன்!

பாப்பு: என் அப்பாரை ஏமாற்றியவனை நான் சும்மா விடமாட்டேன்.

போக்கர்: இந்த மோசடிக்கு எந்த முஸ்லீமும் சும்மா விட்டிருக்க மாட்டான். இந்தப் போக்கர் இருக்கிறவரைக்கும் குடி இருக்கிற இடம் கைவிட்டுப் போய்விடாது. எனக்கு அதைப் பறித்துக்கொள்ள வேணுங்கற எண்ணம் இருந்தால், இவ்வளவு பணம் செலவு செய்து உன்னைத் தேடிப் பிடித்து இங்கே அழைத்துவரச் செய்வேனு? கேட்கிறேன்?

பாப்பு: அது சரி; இனி உங்கள் விருப்பம்?

போக்கர்: இந்த விவகாரத்திலே 'காபிர்'காரனை நான் பழி சொல்லமாட்டேன். இல்லாதபோனுல் நீயே யோசித்துப் பார். இங்கே முஸ்லீம்களுடைய வீடோ, மனைக்கட்டோ வேறே கிடையாதா? அந்தக் 'காபிர்'னுடைய வீட்டுக்கா போகணும்? முன்னுலே இப்படி யாராவது போயிருக்கிருேமா? போனுல்தான் அவங்க சேர்ப்பாங்களா? பருவம் வந்த பெண் ஒண்ணு இருக்குது உன்னேடே; நீ போகலாமா அங்கே? ஒரு முஸ்லீமாவது தலைநிமிர்ந்து நடக்கமுடியுமா? முடியுமா, தம்பி? நீதான் சொல்லேன்.

பாப்பு: (அவமானத்தாலும் வருத்தத்தாலும் கொதிப்படைந்து) சித்தப்பா! பருவப் பெண் இருக்கிருள், வயசான தாய் இருக்கிருள். வயசு கடந்த தந்தையும் இருக்கிருரு. மதத்துக்கு விரோதமாக அவங்க நடந்துகொண்டதுக்குப் பிறகு, எனக்கு அவங்க பெரிசு இல்லை, உறவும் இல்லை. யார் பேரிலே வேணுமானுலும் சத்தியம் செய்கிறேன், இந்தப் பாப்பு இஸ்லாமுக்கு எதிராக நடக்கமாட்டான். அடுத்தபடியாக, இதுக்கெல்லாம் காரணமாக இருந்தவனை—என் அப்பாரே தடுத்தாலும் சரி—நான் பழிவாங்காமல் விடப்போவதில்லை.

போக்கர்: மெள்ளச் சொல்லு, தம்பி. நம்பியார் வருகிருர். என்னதான் சேர்ந்திருந்தாலும் இந்த ஆளும் இந்துதான்.

பாப்பு: அது சரி, உள்ளதுதான்.

[நம்பியார் வருகிருர். தலையிலே துண்டைக் கட்டிக் கொண்டிருக்கிருர். தள்ளாடியபடியே நடந்து வருகிருர்.]

போக்கர்: நம்பியாரே! என்ன உங்களுக்கு?

நம்பியார்: (தீனமான குரலில்) ஒண்ணும் . . . சுக . . . மில்லை. கீழே . . கீழே . . . விழுந் . . . திட்டேன். ஸ்டேஷன் . . . லேயிருந்து இறங்கறபோது . . . கால் இடறி விழுந்திட்டேன். (பக்கத்திலே வந்து உட்காருகிருர்).

பாப்பு: அடேடே! எங்கே பார்க்கலாம் (முக்காடு இட்டிருந்த துண்டை விலக்கி) தலையிலே நல்ல அடியோ? கன்னத்தைத் தொட்டுப் பார்த்து இங்கேகூடப் புடைச்சிருக்குதே.

போக்கர்: அப்போ பறங்கோடன் நாயரும் வாரியரும் எங்கே?

நம்பியார்: திருட்டுப் பயலுக. ஜெயிலிலே கிடக்கிறுனுக. இரண்டு பேரையும் விசாரிக்கிறபோது, தப்பும் தவறுமாய் உளறிக் கொட்டிவிட்டானுக. இன்ஸ்பெக்டர் வேறே இருந்திருக்கிறுரு. பொய் வழக்குக் கொடுத்தாங்கன்னு சொல்லி உள்ளே தள்ளிவிட்டாரு.

போக்கர்: நீங்க கீழேதானே விழுந்தீங்க?

நம்பியார்: அய்யோ! . . . அந்தக் கல்லுமேலே விழுந்து விட்டேனய்யா!

பாப்பு: (தாங்கியபடியே) வாங்க, மெல்ல நடந்து போகலாம்.

[ மூவரும் மெல்ல நடந்துபோகிறுர்கள்.]

## காட்சி 2

[வயல்புறம். காலை வேளை. வேலுவும், சுகுமாரனும் நிற்கிறுர்கள். வேலுவின் கையில் கைக்கொட்டு இருக்கிறது.]

சுகுமாரன்: கதிரெல்லாம் சாய்ந்துவிட்டதே. இதுவரைக்கும் வழி, வரப்புகளிலே கிடந்த கதிர்களையெல்லாம் எடுத்து வயலுக்குள்ளே போட்டுக்கொண்டிருந்தேன்.

வேலு: கதிரினுடைய கனத்தினுலேதான் அப்படிச் சாய்ந்திருக்கிறது. நல்ல செழுமையான நிறை விளைச்சல். கொள்ளிக் கண்ணு படைச்ச பொருமைக்காரங்க இந்தப் பக்கம் வராமல் இருந்தாங்கள்ணுக்கி, நாம்ப ஜயிச்சோம். ஏன் உங்க சட்டையெல்லாம் நனைஞ்சிருக்கு?

சுகுமாரன்: வரப்பிலே சாய்ந்துகிடக்கிற கதிர்களையெல்லாம் காலாலே தள்ளிவிட மனசு வரவில்லை. அப்படித் தோணவும் இல்லை. எல்லாத்தையும் கையாலேயே எடுத்துப்போட்டேன்.

வேலு: (சிரித்துக்கொண்டு) சரியான வேலை. உழுது, விதைச்சு, நட்டு, சாகுபடி செய்தவனுக்கு, தலை சாய்ந்து கிடக்கிற கதிர்களைக் காலாலே தள்ளிவிட மனசு வராதுதான்.

**சுகுமாரன்:** தண்ணீர் கொஞ்சம் வடிஞ்சிருக்கு. இல்லையா வேலு? நான் பயந்துகொண்டிருந்தேன்.

**வேலு:** ஹும்! வடியாமல் இருந்தால் இந்த வேலு வடிய வைக்காமலா இருப்பான்? வேலு இருக்கிற இடத்திலே என்ன தான் வெள்ளம் வரட்டுமே!

**சுகுமாரன்:** இன்னும் இரண்டு நாள் தேங்கியிருந்தால் அப்போது தெரியும்,

**வேலு:** தெரியறதுக்கு ஒண்ணுமில்லே. நான் ஒரு நாள் இரவு, வரப்பு - வடிகாலெல்லாம் வெட்டிவிடுவேன். பறங்கோடன் நாயருடைய வயலிலே இருக்கிற விளைச்சலும் நம் வயலினுடைய தண்ணீரும் கலந்து, மேற்குப் பக்கத்து வயல்காரங்களுடைய குட்டை — மடுவெல்லாம் நிறைந்து போகும், அவ்வளவுதான்.

**சுகுமாரன்:** ஹா, ஹா, ஹா! நல்ல புள்ளி. பறங்கோடன் நாயருக்கு என்ன விளைச்சல்? நெல்தானே? நம்ப நெல் போனப்போலேதானே, அவன் நெல் போனலும்?

**வேலு:** அவன் திமிருத்தனமெல்லாம் அபூபக்கரிடத்திலேதான். இந்த வேலுகிட்டே அதெல்லாம் சாயாது. பறங்கோடன் நாயருடைய நெல் போனல் பறங்கோடன் நாயர்தான் பார்த்துக் கொள்ளணும். வேலுவினுடைய நிலம் - நெல்லுகளைக் குறித்து, வேலுவே பார்த்துக்கொள்ளுவான்.

**சுகுமாரன்:** (தலை அசைத்து) நல்லா இருக்கே நீ பேசுவது! பலே ஆளுதான்!

**வேலு:** அப்படித்தான் இருக்கணும். அந்தத் திருட்டுப்பயல், வேலுவும் ஸ்ரீதரன் நாயரும், அவனுடைய காளைக் கன்னைக் களவாடிக் கட்டிப் போட்டுக் கொண்டதாகப் பொய்க் கேசு எழுதி வைத்தானில்லையா? வேலுவை வேணுமானல் குற்றப்படுத்தட்டும். உங்க அண்ணனைப் போய் அப்படி அபாண்டமாய்ச் சொன்னல், மகா பாவமில்லே! நாம்ப அவனுக்கு ஏதாவது துரோகம் செய்தோமா?

**சுகுமாரன்:** பலன் அவனுக்குத்தானே கேடாக முடிந்தது. உதவி செய்தவனுக்கும் உடம்பு நிறையக் கிடைத்ததே. என்னதான் இருந்தாலும், அப்படி அவங்களை அடித்துப் போட்டிருக்க வேண்டாம் போலீஸ்காரங்க. மனசுக்குச் சங்கடமாயிருக்கு. இப்படி நடக்கும்னு நான் நினைக்கல்லே வேலு!

**வேலு:** நமக்கு நஷ்டம் ஒண்ணுமில்லே. இந்த ஆளுங்களுக்கு, முந்தி மாதிரி போலீஸ்காரங்க கைக்கூலிகளுங்கற நினைப்பு.

காசு மெதப்பை வைச்சுக்கிட்டு, யார் மேலே வேணுமானாலும் பழி சுமத்தலாங்கற எண்ணம். அந்தத் திமிரு குலைந்ததே, அது போதும்.

சுகுமாரன்: *(வாசல் பக்கம் பார்த்துக்கொண்டு)* அதோ, யார் வருகிறது? பாப்புவா?

*[அபூபக்கர் மகன் பாப்பு வருகிறான்.]*

வேலு: ஆமாம் . . . எப்போ வந்தாப்போலே?

பாப்பு: *(வேலுவிடம்)* நீயும் மத்தவங்களோடு கூடிக்கிட்டு நம்பளைச் சதிச்சிப்பிட்டே இல்லை? அப்படித்தானே, வேலு?

*[வேலு அலமந்து நிற்கிறான்.]*

சுகுமாரன்: மிஸ்டர் பாப்பு! நீங்கள் எப்போது வந்தீர்கள்?

பாப்பு: நேற்றுதான்.

சுகுமாரன்: அப்புறம்? . . .இதுவரைக்கும் எங்கே தங்கியிருந்தீங்க? அப்பாரை வந்து பார்க்க வேண்டாமா?

பாப்பு: *(அழுத்தலான குரலில்)* இதுவரைக்கும் எங்கே இருந்தேன் இதுதானே? என் அப்பாவைக் காணக்கூட உங்களுடைய உத்தரவு வேணும், இல்லையா?

சுகுமாரன்: என்ன அப்படிச் சொல்லுகிறீங்க? எங்க வீடு உங்க அப்பாருடைய வீடாகிவிட்டதே. அப்போ, அது உங்களுக்கும் சொந்தமான வீடுதானே?

பாப்பு: மிஸ்டர் நாயர்! இந்த நடிப்பெல்லாம் இங்கே வேண்டாம். நான் ஒரு முஸ்லீம். நான் நேருக்கு நேர் பேசிவிடுபவன். போலி வேஷம் எனக்குப் போட வராது; போடக் கற்றுக் கொடுத்தாலும் வராது. உங்களுடைய வீடு ஒருகாலும் என் வீடாக ஆக முடியாது. நான் இன்றைக்கும் ஒரு முஸ்லீம் தான்.

சுகுமாரன்: *(சிரித்துவிட்டு)* உங்களுடைய அப்பா முஸ்லீம் இல்லையா?

பாப்பு: எனக்குத் தெரியாது. அப்படியிருந்தால் உங்களுடைய வீட்டில் அவர் வந்து தங்கியிருக்க அவசியமிருக்காதே.

சுகுமாரன்: *(யோசனை செய்து)* ஏதோ கோளாறு ஆகியிருக்கிறது. நீங்க ரொம்பவும் தப்பு அபிப்பிராயம் கொண்டிருக்கீங்க. உங்களுக்கு யாரோ இப்படித் துர்ப்போதனை செய்து வைச்சிருக்காங்க.

**வேலு:** அப்படியானல், பாப்பு மாப்பிளே! நீங்க வர்ற வழியிலே அந்த நாசகாரப்பயல் மகன் நம்பியாரும், சதிகாரன் போக்கர் மாப்பிளேயும் விரிச்ச வலேயிலே சிக்கிக்கொண்டு விட்டீங்க.

**பாப்பு:** எலே! யார் யாருடைய வலேயிலே சிக்கிக்கொண்டு இருக்கிருகே என்கிறது இருக்கட்டும். யாரையும் நீ குற்றம் சொல்ல வேண்டியதில்லே! அது நல்லதுக்கு அல்ல.

**வேலு:** ஹூம் . . . ஆயிரம் தடவை . . .

**சுகுமாரன்:** (தடுத்து) நாம் யாரையும் குற்றம் சொல்ல வேண்டியதில்லே. மிஸ்டர் பாப்பு, நீங்கள் பல தகவல்களே உண்மைக்கு மாருகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்; தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள்.

**பாப்பு:** சரிதான். எப்போதுமே தப்பபிப்பிராயம், விவரம் புரியாத மந்த புத்தி, மடத்தனம், பகுத்தறிய முடியாத அவிவேகம் - இதெல்லாம் முஸ்லீம்களுக்குத்தான். இந்துக்களுடைய நாட்டில் வாழ்ந்துவருகிற காலத்திலே, அறியாமையும் தவருன கருத்தும் கொண்டுள்ள காரணத்தால், பட்டினி கிடந்து, வாழ வழியின்றி, ஊரைவிட்டே ஓடியதற்குக் காரணமும், முஸ்லீமின் விவரம் புரியாத மந்த புத்திதான். ஒரு முஸல்மானுக்கு அவனுடைய இனத்துக்காரர் உதவ முன் வரும்போது, அதை ஏற்றுக்கொள்வது அவர் வலேயிலே சிக்கிக்கொள்வதாகும், இல்லேயா? இது தான் அவனுடைய மடத்தனம். . . . சாரே! நீங்கள் ஒரேவொரு தயவு செய்தால் போதும்; நீங்கள் எனக்கு உபதேசம் செய்யாமல் இருக்க வேண்டும்.

**சுகுமாரன்:** பாப்பு! . . .

**பாப்பு:** ஸாரே! மரியாதையாகக் கூப்பிடுங்கள்.

**சுகுமாரன்:** மன்னிக்கவும். மிஸ்டர் பாப்பு! நீங்கள் ஏதுக்காக இங்கே ஹிந்து – முஸ்லீம் தகராறைக் கற்பனே செய்து கிளப்புகிறீர்கள்?

**பாப்பு:** பதில் தெளிவு. நீங்கள் ஒரு இந்துவும், நான் ஒரு முஸ்லீமாகவும் இருப்பதால்தான்.

**வேலு:** பின்னே, உங்களுடைய அப்பாரு யாரு? 'காபிர்' காரரா?

**பாப்பு:** (கோபம்கொண்டு) டேய், நீ மரியாதை தவறினுல், நானும் மரியாதை தவறுவேன். (சுகுமாரனிடம்) நீங்க உங்க கூட்டாளியை ஒரு நிதானத்திலே இருக்கும்படியாச்

சொல்லுங்க. விவரம் தெரியாதவன்; கண்டபடி பேசிவிடு கிருன்.

சுகுமாரன்: அப்படியாஞல், நான் மட்டும் உள்ளதை மறைத்து வைத்து, உங்களே வஞ்சிக்கிறேஞ?

பாப்பு: இல்லேயா மிஸ்டர் நாயர்? எங்களுடைய குத்தகை நிலத்தைப் பறிக்க நீங்க விவகாரம் செய்தீங்க; வழக் காடினீங்க. உப்புச் சிரட்டையைக்கூட ஜப்தி செய்துகொண்டு போய்விட்டீங்க. அவமானப்படுத்தினீங்க. எங்களே ஓட்டாண்டியாக்கி, என்னேயும் நாட்டைவிட்டே விரட்டி விட்டீங்க. அப்படியும் மனசு நிறையல்லே; என் சாது அப்பாவை ஏமாற்றி நிலத்தைக் கைவசப்படுத்திக்கொண்டு விட்டீங்க; இல்லேயா? இல்லேயாஞல், நீங்கள் எப்படி எங்களு டைய பங்கிலேயும் சாகுபடி செய்தீங்க? இன்னேக்கு எங்க அப்பாரு யாரு? உங்களிடத்திலே அடங்கின குத்தகைக்காரன் தானே? கூரைக் குடிசைகூடப் பறிபோன கைகட்டிச் சேவுகன் தானே?

சுகுமாரன்: நான் வருத்தப்படுகிறேன், ஸார்! இங்கே நடந்தவை களே நீங்கள் உள்ளபடி தெரிந்துகொள்ள முடியாமல், எதிராளிங்க கண்ணியிலே விழுந்துவிட்டீங்க. ஏமாத்தப்பட்டு இருக்கீங்க.

பாப்பு: இருக்கட்டும். இப்படித்தானே பிரசாரம் செய்யணும். எங்க நிலத்தை நீங்க பறித்துக்கொண்டு விட்டீங்க. எங்க அப்பாரையும் அடிமைச் சேவுகஞக்கிக்கொண்டீங்க. இத் தோடே முடிஞ்சுபோச்சா? (ஆத்திரத்துடன் பார்த்துக் கொண்டு நிற்கிருன்.) ஏன் வீண்பேச்சு? நீங்க தெரிஞ்சுக் காதது மாதிரி இருக்கிறது, நீங்க மறுத்துப் பேசுவிங்கன்னு தெரிந்துபோனது—இதை யெல்லாம் நான் ஏதுக்குத் தொண்டை வலிக்கக் கத்தணும்? (ஆத்திரம் மேலிட்டு) ஆஞல் ஒண்ணு, நீங்க சிந்தித்துப் பார்க்கணும். உங்களேப் போலவே நானும் ஒரு இளேஞன். மாப்பிளாப் பயல்தானே என்று சல்லிசாக நினேக்கிறீங்க. ஆஞல், மானம்—அவமான மெல்லாம் எனக்கும் உண்டு.

சுகுமாரன்: நாங்கள் என்ன செய்துவிட்டோம் மிஸ்டர் பாப்பு? நீங்க இங்கே நடந்தவற்றைப்பற்றி ஒரு தலேப்பட்சமாகத் தான் கேட்டுவைத்திருக்கிறீங்க. எங்க வீட்டுக்கு வாங்க. அங்கே தங்கியிருங்கன்னு நான் சொல்லவில்லே. ஒருமுறை உங்களுடைய அப்பாவைச் சந்தியுங்க. அந்த வயதான பெரியவர் உங்களிடத்திலே நடந்ததைச் சொல்லுவார். அதை மட்டும் கேளுங்கள். உண்மை விளங்கும்.

பாப்பு: ஸாரே, நான் ஒரு தடவை சொல்லியாகிவிட்டது. நான் ஒரு உண்மையான முஸ்லீம். ஓர் இந்துவினுடைய வீட்டில் என் தந்தை இருக்கமுடியாது.

வேலு: மாப்பிளே, நீங்க என்ன இப்படிச் சொல்லுகிறீங்க? பின்னே, அங்கே இருக்கிறது வேறே யாராம்? ஓ! நாலஞ்சு மாதமாய் இந்த ஊரைவிட்டுப் போனதிலே, எங்குமில்லாத அலாதி 'முஸ்லீமாக' ஆயிட்டீங்க!

சுகுமாரன்: வேண்டாம் வேலு, விடு!

வேலு: என்ன வேண்டாம்! வாயிலே வந்தபடி ஏசிப்பிடறதுக்கும் ஒரு எல்லை வேண்டாம்? நிற்க நிழல் இல்லாமே, எங்கே போகறதுன்னு தவிச்சுக்கிட்டிருந்தவங்களுக்கு, ஒருவர் புகல் தந்து உதவினால், உதவினவங்களுடைய நெஞ்சுமேலேயா ஏறி மிதிக்கறது? இதுதான். . .

பாப்பு: சரி, நான் உன்னை ரொம்பவும் பாராட்டுகிறேன். ஆனால், என் நிலத்திலே விளைந்திருக்கிற விளைச்சலை நீ அறுவடை செய்துகொள்ளலாம் என்கிற நப்பாசை மட்டும் இனிமேல் வைத்திருக்க வேண்டாம். என்னை அவமானப்படுத்தினவங்க ளிடத்திலேயும் தீர்மானமாய்ச் சொல்லிவிடு. பாப்பு இதை யெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மாப் போகிறவன் இல்லை என்கிறதைச் சொல்லிவிடு.

சுகுமாரன்: எனக்குப் பயமாக இருக்கிறது.

பாப்பு: 'காபிர்'காரங்களுக்குப் பயம் ஏற்படத்தான் செய்யும். முஸ்லீமுக்குப் பயம் கிடையாது. அச்சம் என்பது மரணம். ஒரு முஸ்லீம் ஒரே முறைதான் மரிக்கிறான். (வேகமாகப் போகிறான்).

[சுகுமாரன் பாப்புவைப் பார்த்துக்கொண்டு நிற்கிறான்.]

வேலு: இது ஆபத்திலேதான் போய் முடியப் போவுது. இந்த வேலுவின் விளைச்சலிலே கைவைக்க இறங்கினால், இறங்கின காலோடு வரப்பிலே ஏறமுடியாது. அவன் முஸ்லீமானாலும் சரி, 'காபிர்'காரனானாலும் சரி!

சுகுமாரன்: வேலு! நீ ஒண்ணும் சொல்லாதே. இந்த ஆளை இல்லாதது—பொல்லாததெல்லாம் சொல்லி மனசைக் கெடுத்து வைத்திருக்காங்க. நாம் அபூபக்கரை மறந்துவிடக் கூடாது. அந்தப் பெரியவரை வருத்தப்பட வைக்கவும் முடி

*யாது. போகலாம். ஏதானுலும், அண்ணனிடத்திலே போய் விவரத்தைச் சொல்லுவோம்.*

**வேலு:** உம், உம். போகலாம்.

*(இருவரும் போகிறுர்கள்.)*

## காட்சி 3

*[ஸ்ரீதரன் நாயருடைய வீடு, உள் தாழ்வாரம், இரவு வேளே. மேஜைமேல் விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது. இரண்டு—மூன்று நாற்காலிகள். விளக்கெதிரே ஆயிஷா அமர்ந்து துணி தைத்துக்கொண் டிருக்கிருள். தைப்பதை நிறுத்தி, ஏதோ ஆழ்ந்த சிந்தனேயில் ஈடுபடுகிருள். முகத்தில் விசனம் படர்ந்திருக்கிறது. கண்களில் நீர் மல்கியிருக்கிறது. லக்ஷ்மி அம்மாளும் பார்வதியும் வருகிருர்கள்.]*

**பார்வதி:** *ஆயிஷா! ஏன்? உனக்கு இன்னேக்குச் சாப்பாடு இல்லேயா?*

*[ஆயிஷா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிருள்]*

**அம்மா:** *(கூர்ந்து நோக்கி)* என்னம்மா, நீ அழுகிருயா, என்ன!

**ஆயிஷா:** இல்லேயே.

**அம்மா:** என்ன 'இல்லேயே!' கண்ணிலே நீர் தேங்கி வழியுது. *(ஆயிஷாவை அணேத்தபடியே)* என்ன குழந்தை?

**ஆயிஷா:** *(கண்ணேத் துடைத்துக்கொண்டு)* அம்மா, நீங்க என் அம்மாவையும் அப்பாவையும் நல்லபடியாக் கவனித்துக் கொள்ளுங்க.

*[மறுபடியும் அழுகிருள்.]*

**அம்மா:** ஆயிஷா! நீ அழுது நான் பார்த்ததில்லேடீ, ஏன் இப்படி? என்ன மனசுக் கஷ்டம் உனக்கு? பார்வதி, இவள் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் என்ன அப்படிக் கஷ்டம்?

**பார்வதி:** எனக்கு ஒண்ணுமே தெரியாதம்மா.

**ஆயிஷா:** ஒண்ணுமில்லே அம்மா, அவங்களுக்கு ஒரு கஷ்டமும் இல்லே.

**அம்மா:** பின்னே, ஏதுக்கு நீ வருத்தப்படுகிறே? ஏதாவது இருந்தால் தயங்காமல் சொல்லம்மா! நாங்க என்னதான் சேர்ந்து

பழகினாலும், உங்களுடைய பழக்க வழக்கத்தையெல்லாம் எங்களாலே முழுவதும் தெரிந்துகொள்ள முடியவில்லே. என்னிடத்திலே நீ மனம்விட்டு சொல்லக்கூடாதா, குழந்தை?

ஆயிஷா: அம்மா, எங்களுடைய வீட்டிலேகூட இவ்வளவு வசதி எங்களுக்கு இருந்ததில்லே; அவ்வளவு சௌகரியம் இங்கே. எங்களுக்காக வேண்டி, நீங்க சங்கடப்படுகிறதெல்லாம் எனக்குத் தெரியும்.

பார்வதி: உங்களுக்காக வேண்டி எந்தச் சங்கடமும் இங்கே இல்லே. நீ இங்கே இருக்கிறதனாலே, எனக்கு நன்மைதான். உன் உதவி கொஞ்சநஞ்சமில்லே எங்களுக்கு.

அம்மா: எனக்கு என்னன்னு கேட்டால், நீங்களெல்லாரும் வந்திருக்கிறதனாலேதான் இங்கே மதிப்பாய் நாலு பேர்கள் வளைய வந்து, வீடும் கலகலப்பாய் இருக்கிறதாக எனக்குப் படு கிறது. பெரிய வீட்டிலே இரண்டு பேருங்க மட்டும் இருந்து வந்தால், அது சூன்யம் பிடிச்சமாதிரிதான் இருக்கு.

ஆயிஷா: அப்படி ஒண்ணும் சங்கடம்னு சொல்லல்லே. எங்களுக் காக வேண்டி நீங்க பல தடைகளும் கட்டுப்பாடுகளும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறீங்களேன்னுதான் சொல்ல வந் தேன்.

பார்வதி: என்ன அப்படித் தடையும் கட்டுப்பாடும்?

ஆயிஷா: நாங்க இங்கே வந்த பிறகு, நீங்க வாசலுக்குச் சாணம் தெளிக்கிறதில்லே. துதி—தோத்திரம் பாடுவதைக்கூட மெல் லவே சொல்லத் தொடங்கிவிட்டீங்க. அதையும் காலம்—நேரம் கடந்தே செய்கிறீங்க. அதிகம் சொல்லுவானேன். வரப்போகிற ஓணம் பண்டிகையிலே திருக்காக்கரை அப்பனை பூஜைக்கு வைக்கவேண்டாம்னு வேறே தீர்மானம் செய்திருக் கீங்க.

பார்வதி: இதெல்லாம் ஒரு அசௌகரியமா? பெரிய அண்ணன் வாசல் பக்கத்துக்குச் சிமிண்டு போட்டுவிட்டார்; அதனாலே அங்கே சாணம் தெளிக்கிறதில்லே, அவ்வளவுதான்.

அம்மா: நாமஜபம், துதி கீதமெல்லாம் மெல்லத்தான் சொல்லு கிற வழக்கம். குழந்தைகளா என்ன உரக்கப் பாடிக்கொண் டிருக்க?

பார்வதி: ஓ! ஓணப் பண்டிகைக்குத் திருக்காக்கரை அப்பனை வைக்க வேண்டாம்னு தீர்மானிச்சதுக்கா நீ அழுகிறே? அண்ணனோடு சொன்னப் போவுது. நீ பூப்பறித்துக்கொண்டு வர்றியா?

உனக்கு அவ்வளவுதானே வேண்டியது? இதுக்காகவா குழந்தையைப்போல ஒருத்தி அழுவாள்?

**அம்மா:** திருக்காக்கரை அப்பனை வைப்பது ஒரு பழைய வழக்கமே தவிர, வேறு இல்லை. இப்போதெல்லாம் யாருக்கும் அதிலே அவ்வளவாக நம்பிக்கை கிடையாது. குழந்தைகள் இருந்தால், அவங்களுக்கு அதிலே ஒரு தனி ஆர்வம் உண்டு. அவங்க இல்லாதபோது, இதெல்லாம் ஏதுக்கு?

**பார்வதி:** இதெல்லாம் ஒண்ணுமில்லை. உன் மனசிலே வேறு ஏதே கிடந்து சங்கடப்படுத்துகிறது.

**ஆயிஷா:** அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீங்க என் அப்பாவையும் அம்மாவையும் கவனமாய்ப் பார்த்துக்கொள்ளுங்கன்னுதானே சொன்னேன்.

**அம்மா:** அப்படியானல் உன்னை?

**ஆயிஷா:** (முகம் தாழ்த்தி) நான் என் அண்ணன்கிட்டே போகப் போகிறேன்.

**பார்வதி:** பம்பாய்க்கா?

**ஆயிஷா:** இல்லையே, அண்ணன்தான் இங்கே வந்திருக்கிருரே!

**அம்மா:** இங்கே ஏன் வரவில்லை?

**ஆயிஷா:** ஆமாம்; வரவில்லை. அந்த நயவஞ்சக போக்கர் வீட்டிலே தங்கியிருக்கிருரு.

**அம்மா:** அது எப்படி? அப்பாரைக் காணக்கூட வராமலா மகன் இருப்பது?

**ஆயிஷா:** அதுதானே பெரிய தொந்தரவாகி ஆக்கி வைத்திருக்காங்க. அந்தப் பாவிப் பயலுக அண்ணன் மனசைக் கலேச்சு நமக்கு எதிராக ஆக்கி வைத்திருக்காங்கன்னு கேள்விப்பட்டேன்.

**அம்மா:** அப்படியானல், அப்பாரிடத்திலே சொல்லேன். யோசனை பண்ணி ஏதாவது வழி செய்வாங்க. ஏதானலும் சரி, நீ வந்து சாப்பிடு வா! பாருக்குட்டி, இவளுக்குச் சோறு போடேன். நான் ஜபம் செய்ய உட்காருகிறேன் (பக்கத்து அறைக்குப் போகிருள்).

**பார்வதி:** ஆயிஷா! உன்னிடத்திலே இதெல்லாம் சொன்னது யார்?

**ஆயிஷா:** எனக்கே தெரிந்தது.

**பார்வதி:** எப்படி? நானும் தான் தெரிஞ்சுக்கறேனே?

ஆயிஷா: நீங்க வேற யாரிடத்திலேயாவது சொல்லிவிடுவீகளா?

பார்வதி: நிச்சயமாய் இல்லே.

ஆயிஷா: இப்போ கொஞ்ச நேரம் முன்பு நான் இங்கே உட்கார்ந்து தைத்துக்கொண்டிருந்தேன், உங்க பெரிய அண்ணனும் சின்ன அண்ணனும் நின்னு பேசிக்கிட்டிருந்தாங்க, உங்க சின்ன அண்ணன் என்னுடைய அண்ணனை நேத்தைக்குச் சந்தித்தாராம்.

பார்வதி: அப்புறம்?

[ஆயிஷா பேசாமல் இருக்கிருள்.]

பார்வதி: சொல்லேன், என்னிடத்திலே சொல்லு!

ஆயிஷா: நான் அண்ணன்கிட்டே போகப்போகிறேன்.

பார்வதி: இதைச் சொல்லேன். அவங்க என்ன பேசிக்கொண்டிருந்தாங்க?

ஆயிஷா: அண்ணன் ரொம்பக் கோவமாய்ப் பேசிப்பிட்டாராம். அண்ணனே...

[பார்வதி பேசாமல் நிற்கிருள்.]

ஆயிஷா: (வருத்தத்துடன்) எங்களாலே உங்களுக்குப் பெரிய ஆபத்துத்தான் ஏற்பட்டிருக்கு. என் அம்மாவாலே நடக்க முடியாது. அப்பாருக்கோ தள்ளாமை வயசு.

பார்வதி: ஆயிஷா! நீ என் சகோதரி, உன்னுலே ஒரு ஆபத்தும் எங்களுக்கு வராது. நம் இரண்டு குடும்பத்தாரும் சேர்ந்து வாழ்வது, ஊரிலே உள்ள சில பழைய ஆசாமிகளுக்கு விருப்பமில்லே. அது நல்லதுமில்லே. உன் அண்ணன் சொல்லிவிட்ட மாதிரி ஏதும் செய்துவிடமாட்டார். உன் சகோதரன் இல்லேயா அவர்!

ஆயிஷா: அதுக்கல்ல. நான் அண்ணனே ஒருமுறை சந்தித்தால் போதும். எல்லாத்தையும் சரிப்படுத்திவிடலாம். இல்லாது போனுல்...

பார்வதி: உன்னே அங்கே அனுப்பறதுக்கில்லே; இப்போ அந்தப் பொல்லாதவங்க கூட்டத்துக்கு நீ போகக்கூடாது.

ஆயிஷா: என்னதான் பொல்லாதவங்க கூட்டத்திலே இருந்தாலும், என் அண்ணன் என்னேப் பார்த்துக்கொள்ளுவாரு. உங்களுக்குத் தெரியுமா அவரைப்பற்றி? நாங்க பள்ளிக்கூடம் போய்க்கொண்டிருந்த காலத்திலே, ஒரு நாள் சின்னப் பையன் ஒருவன் என் பாவாடைமேலே சேற்றுத் தண்ணியை

தெறிச்சுப்பிட்டான். அவனே அண்ணன் செம்மையாய் அடிச்சுப் போட்டுட்டாரு. அம்மா அடிக்கடி கேப்பாங்க: குழந்தைகளா, நீங்க எப்படிப் பிரிஞ்சு இருக்கிறீங்க? (கண்ணீரை ஒத்தித் துடைத்துக்கொண்டு) அப்படி இருந்தும் நாங்களும் பிரிந்திருக்கவேண்டி வந்தது.

**பார்வதி:** ஆயிஷா! நீ பழைய நினைவுகளைச் சிந்தித்து மனசைக் குழப்பிக்கொள்ளுகிறாய். அவ்வளவுக்கு ஒண்ணும் சங்கடம் வராது. நீ கொஞ்சமாவது சாப்பிடு, வா!

**ஆயிஷா:** எனக்குச் சோறுவேண்டாம்.

**பார்வதி:** ஆயிஷா! பரவாயில்லை, வா! பால் இருக்கு. அதாவது கொஞ்சம் சாப்பிடு. நான் இங்கே கொண்டு வரட்டுமா?

[உள்ளேயிருந்து ''ஆயிஷா!'' என்று அழைக்கும் குரல் கேட்கிறது. அபூபக்கரின் குரல்.]

**ஆயிஷா:** (எழுந்து) அப்பா படுத்துக்கொண்டுவிட்டாரா? (உரக்க) இதோ வர்றேன்.

[அபூபக்கர் வந்து நாற்காலியில் உட்காருகிறார்.]

**ஆயிஷா:** அப்பா, நீங்க இன்னும் தூங்கவில்லையா?

**அபூபக்கர்:** படுக்கறேன். (சிறிது மௌனம்) உன் அண்ணன் வந்திருக்கிறானில்லே?

[ஆயிஷா பார்வதியைப் பார்த்துச் சாடை செய்கிறாள்.]

**அபூபக்கர்:** அவன் இங்கே வரவில்லை! வர்றதாகவும் சொல்லல்லே. மேற்கொண்டு ரொம்பக் கோவப்பட்டானும்; நானும் கேள்விப்பட்டேன்.

**ஆயிஷா:** அப்பாரும் மகனும் சந்தித்துக்கொள்ளாததனாலேதான் இதெல்லாம்.

**அபூபக்கர்:** அதுக்காக, என்னை வீட்டைவிட்டு விரட்டிவிட்டவங்க இடத்துக்கு மறுபடியும் போகச் சொல்லுறியா, மகளே? அந்தத் திக்கிலே நான் போகணுமா?

**ஆயிஷா:** அப்பா, நீங்க போகவேணும். நான் போய் விவரமெல்லாம் சொல்லிக்கொள்ளுகிறேன்.

**அபூபக்கர்:** உனக்குத் துணிச்சல் இருக்குதா அங்கே போக?

**பார்வதி:** ஆயிஷாவைத் தனியாக அனுப்பி வைக்கறது நல்லதில்லே.

**அபூபக்கர்:** வேறே என்ன இந்தக் குட்டிக்கு அண்ணன்தானே அவன். நல்லதானலும் கெட்டதானலும் இவள் அனுபவிக்கத் தானே வேணும்?

**ஆயிஷா:** நான் கருக்கலிலே எழுந்து போய்க்கொள்ளுகிறேன். அப்பா, எனக்கு அண்ணனைப் பார்க்கவேணும்னு ஆவலாய் இருக்கு.

**அபூபக்கர்:** அப்படியானல் அவனிடத்திலே போய்ச் சொல்லு. அவன் முஸ்லீமாக இருக்கிறது எனக்கு மகனுக வந்து பிறந்ததனுலேதான். நிலைமையை உள்ளபடி தெரிந்து கொண்ட பிறகுதான் ஒரு முஸ்லீம் காரியத்தில் இறங்கணும்! அப்புறம் விளைச்சலை அறுவடை செய்துடப்போறதாகவும் கேள்விப்பட்டேன். அவன் விதைச்சு, பாடுபட்டு, விளைச்சல் காணப்போன இடத்திலேயே ஒண்ணும் அறுவடை செய்ய முடியல்லே. இங்கே விதச்சவங்க வேறே ஆட்கள்; விதைச்ச அவுங்க வந்து அறுத்துக்கொள்ளுவாங்க—என்கிறதையும் அவனுக்குச் சொல்லிவை?

*[பார்வதியும் ஆயிஷாவும் தம்முள் பார்த்துக்கொள்ளுகிறுர்கள்.]*

## காட்சி 4

*[அபூபக்கருடைய பழைய வீட்டில் ஓர் அறை. ஒரு கட்டில், மேஜை, நாற்காலி, இரவு வேளை. மேஜையில் விளக்கு எரிகிறது. பாப்பு நிம்மதியில்லாமல் உலாத்திக் கொண்டிருக்கிறுன். இடை இடையே நிற்கிறுன். திரும்பிப் பார்க்கிறுன். ஏதோ முணுமுணுக்கிறுன்].*

**பாப்பு:** சிலையையும் பொம்மையையும் வைத்துக் கும்பிடுகிற இவங்க, நம்பத்தகாத இவங்க, நம்பளை ஏமாத்துகிறுனுக! உள்ளதையும் தட்டிப் பறிக்கிறுனுக. அதுவும் எப்படி? சிரித்துச் சிரித்தே குடியைக் கெடுக்கிறுனுக. அவங்களுக்குத் தெரியும்—அந்த இந்துக்களுக்குத் தெரியும், முஸ்லீம்களோடு தகராறு வைத்துக்கொண்டால் முடியாதென்று. அதனுலே தான், எல்லாத்தையும் ஏமாற்றிப் பறித்துக்கொண்ட பிறகு, பெரிய மனிதராகி நமக்குத் தயவுகாட்ட வர்றுங்க: ''பாப்பு, உன் அப்பாவை நாங்கள் காப்பாத்தியிருக்கிறேம். உங்கள் வீட்டுப் பெண்டுகளை. . .'' என்கிறுனுக. (ஆத்திரத்துடன் பற்களை நெரித்து) ஹ! ஹ! ஏய் சைத்தானுகளா! உங்களைச் சும்மா விடப்போவதில்லை.

என் அப்பா! நான் ஊரைவிட்டுப் போகிற சமயத்திலே இருந்த புத்திகூட இப்போது கெட்டுப்போயிடிச்சு. இந்தச் சந்தர்ப்பத்தை அவங்க தனக்குச் சாதகமாய்ப் பயன்படுத்தி கொண்டுவிட்டாங்க. ஒரு குடும்பத்தின் வருமானம் பூராவையுமே தட்டிப் பறிக்கிறார்களே. உண்மையான உடைமைக்காரனை வஞ்சித்து, கைதட்டிச் சேவுகளுக ஆக்கிவைத்திருக்கானுகளே! அவனுக நாய் வளர்த்து வரானுகளே, அதைப் போலத்தான் இவங்களையும் கொண்டு போய் வளர்க்கிறாங்க. இருந்தும், அந்த அப்பாருடைய மகன், வலுவும் துணிவும் படைத்த ஒரு ஆண்மகன் இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்!... ஐயா!... ஏய் சைத்தானுகளா! உங்களைச் சும்மா விடப்போவதில்லை!

போக்கர் செய்தது? அவர், முஸ்லீமாயிற்றே என்று அப் படிச் செய்திருக்கிறார். அதனாலேதான், ஒரு முஸல்மானுக்கு ஏற்றவகையில் நடந்துகொள்ள வேண்டுமென்று என்னிடம் சொன்னார். அதைத்தான் எல்லா முஸ்லீம்களும் பார்ப்பாங்க. நானும் ஒரு முஸ்லீமைப் போலத்தான் நடந்துகொள்ளுவேன். அவசியம் வந்தால், ஒரு முஸ்லீம் தூக்குமரத்திலே தொங்க வும் எப்படி அஞ்சாமல் முனைந்து முன் நிற்கிறான் என்பதை இந்த இந்துக்களுக்குக் காண்பிக்கிறேன். நான் முன்னே நின்று செய்து காட்டும் இந்தச் செயல், எல்லா முஸ்லீம் வாலிபர் களுக்கும் ஓர் எச்சரிக்கையாக, அறைகூவலாக அமையும்... ஹா! இப்போ போக்கர் சித்தப்பா பேரிலே இந்த மிருகங்கள் எப்படியெல்லாம் பிரச்சாரம் செய்து வருகிறது! நய வஞ்சகர்கள்!

(வெளிப்பக்கம் நோக்கி) கீழ்த்திசை சிவந்திருக்கிறது. ஆம், இதுதான் இஸ்லாம் மதத்தின் வெற்றிக்கொடியின் அடையாளம்; இது உயர்கிறது. இச் செம்மையைப் போலவே நானும், நம்பகமற்ற இந்த ''காபிர்''களின் குருதியைச் சிந்த வைக்கப் போகிறேன். அப்புறம், எனக்கு நேர்ந்த அவமானத்தை—பொதுவாக இஸ்லாமியருக்கே ஏற்பட்டுள்ள இந்த அவமதிப்பை நான் அந்தக் குருதியில் கழுவப் போகிறேன்!

[மேஜையைத் திறந்து கத்தியை எடுக்கிறான்.]

ஹஹஹா!... சிரி! நன்றாகச் சிரி! மதப்பற்றுள்ள ஒரு வீரனின் கையில் இருக்கும்போது, நீ சிரிக்கத்தானே செய்வாய். செருக்குடன் சிரி! இன்னும் கொஞ்ச நேரத்திற்கெல்லாம், சூடான குருதியைப் பூசிக்கொண்டு, செவ்வொளி வீச,

வஞ்சினச் சிரிப்பாகச் சிரிக்கப்போகிறுய்! அதுதான் பழி தீர்த்தல் என்னும் சுண்ணும்பும் கூட்டி, செங்காவி நிறமேற, நீ தாம்பூலம் சுவைக்கப்போகிறுய், (கத்தியை இடுப்பிலுள்ள உறையில் செருகிக்கொள்ளுகிறுன். முகம் பார்க்க பயங்கர மாக இருக்கிறது). இஸ்லாம் மதத்தின் பாதுகாப்புக்காகப் போராடி மடிந்த மகான்களெல்லாரும் எனக்குத் துணைவர் களாக நிற்பார்கள், நான் அவர்களைப் பின்தொடர்வேன்.

[பாப்பு உற்றுப் பார்த்துக்கொண்டு நிற்கிறுன். கோபக் கொதிப்புடன் விறைப்பாக நடந்துபோகிறுன்.]

## காட்சி 5

[ஸ்ரீதரன் நாயருடைய வீட்டில் கிழக்குப் பக்கத்து வெளி முற்றம். பெரிய இலவ மரத்தின் நிழல்படிந்த தரை. இரவு, தெளிந்த நிலவு, பாப்பு வருகிறுன். சுற்றும் முற்றும் பார்த்தவாறு மெள்ள நடந்து வருகிறுன்.]

ஆயிஷா: (பின்பக்கமாக வந்து) அண்ணே!

[பாப்பு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறுன்.]

ஆயிஷா: நேத்தைக்குத்தான் எனக்குத் தெரிஞ்சது, அண்ணன் வந்திருக்கிறது. கிழக்கு வெளுத்ததும், அங்கே உங்களைக் காண வரணும்னு புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன். உறக்கம் வரவில்லை. ஜன்னல் பக்கமாக நின்று பார்த்தபோது, நீங்க வர்றது தெரிஞ்சுது.

பாப்பு: (உதட்டில் கைவைத்து) பேசாதே! நான் உனக்கு அண்ணனில்லை. நீ ஏதுக்காக என் எதிரே வந்து தொலைந் தாய்? (ஆத்திரத்துடன் பார்க்கிறுன்).

ஆயிஷா: அப்படியானுல் ஏதுக்காக அண்ணன் இங்கே வந்திருக் கிறது?

பாப்பு: உன்னைப் பார்க்க வரவில்லை. கிழத்தனம் வந்த அந்தத் தந்தை இருக்கிறுர் இல்லையா, நீ ''வாப்பா''ன்னு அழைக்கிற உன் அப்பாரு இருக்கிறுரில்லையா, அவரைக் காணவும் நான் வரவில்லை. என்னை-என் மதத்தை அவமானப்படுத்திய நய வஞ்சகர்கள் இருக்கிறுர்கள்; நான் அவர்களைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன். நீ போ! உள்ளே போய்விடு, வந்த வழி யாகவே, வந்த சோடு தெரியாமல் திரும்பிப் போய்விடு; ஊம்!

ஆயிஷா: (அசையாமல்) அண்ணு! உங்க முயற்சி நல்லதுக்கல்ல. நீங்க முதலிலே அப்பாரை வந்து பாருங்க. அதுக்குப் பிறகு, என்ன வேணுமானுலும் செய்துகொள்ளுங்க.

பாப்பு: ஆயிஷா! நான் சொல்லிவிட்டேன். நீ இந்த இடத்தை விட்டுப் போய்விடு! என் முன்னே நீ நிற்காதே, போ!

ஆயிஷா: நான் போகமாட்டேன், அண்ணு! நீங்க முதலிலே அப்பாவை வந்து பார்க்கணும். அது இல்லாமே, குடியிருந்த வீட்டிலேயிருந்து வெளியே தள்ளிவிட்டபோது, புகல் இல்லாமே, நடுத்தெருவிலே திண்டாடிக்கிட்டு நிற்க வேண்டாம்னு, எங்களுக்குத் தங்கியிருக்க ஓர் இடம் கொடுத்தவங்களிடத்திலேயா உங்களுக்குப் பகைமை? அவங்களுக்குக் கெடுதி செய்யவா நீங்கள் புறப்பட்டு வந்தது? இதை உங்களேப் படைத்த அந்த ஆண்டவனே பொறுக்க மாட்டான். அவன்கூட உங்களேக் கைவிட்டுவிடுவான்.

பாப்பு: என்னுேடு வாக்குவாதம் செய்யவேண்டாம்னு சொல்லியிருக்கிறேன். உன்னேப் போகச் சொன்னேனு இல்லேயா? ஏ, பெண்ணே! நீ போகமாட்டே?

ஆயிஷா: நான் போகமாட்டேன். நான் இங்கே நின்னுக்கிட்டு உரக்கக் கூக்குரல் போட்டு எல்லோரையும் கிளப்பப் போகிறேன்.

பாப்பு: (ஆத்திரக் கொதிப்பால் உடல் பதற) பெண் பிள்ளேக்கு இவ்வளவு ஆகாத்தியம் கூடாது, இது நல்லதுக்கு அல்ல. அப்படியானுல், உன்னே முதலில் . . . (இடது கையால் அவள் கழுத்தைப் பிடிக்கிறுன். வலது கையில் கத்தி, சட்டென்று ஏதோ தடுத்தாற்போல், பிடியை விடுகிறுன்.) நான் சொல்லுகிறேன், நீ போய்விடு!

ஆயிஷா: இதோ, உங்கள் கை தடைப்பட்டுவிட்டது. முன்பு பட்ட வடு இருக்கிறதில்லேயா? அண்ணனுக்கு நினேவு இருக்கும். முன்பு அண்ணன் கையிலேயிருந்து கத்தியைத் தட்டிப் பறித்தபோது ஏற்பட்ட காயத்தின் வடு இது. அன்று இந்த வடுக் காயத்திலிருந்து இரத்தம் வந்துவிட்டது. இன்று, அதே அண்ணனே என் இரத்தத்தைச் சிந்தவைக்க வந்திருக்கிறுரு! எனக்குச் சம்மதம். என்னே முதலிலே கொல்லுகிறதாக இருந்தால், நான் வாய் திறக்கவில்லே. அதுக்குப் பிறகு, நீங்க மற்றவங்களேக் கொன்றுபோடலாம். (குரல் மாற்றம்) அண்ணு! நீங்க அப்பாவைக் காணவேண்டாமினு இருந்தால், நான் அம்மாவை அழைத்துக்கொண்டு வருகிறேன். அவுகளே யாவது நீங்க பாருங்க.

[பாப்பு செய்வதறியாமல் குழம்பி நிற்கிறான்.]

பாருங்க! இந்தக் காயத்திலிருந்து இரத்தம் கொட்டினபோது, உங்களைக் குற்றவாளியாக்கக்கூடாதென்று, விளையாடப் போன இடத்திலே காயம் பட்டுக்கொண்டு வந்ததாக என்னைக் கடிந்துகொண்ட அந்த அன்னை இங்கே இருக்கிறாங்க. அண்ணன் போனபிறகு, அம்மா எழுந்து நடந்தது, இங்கே குடிவந்த அன்றைக்குத்தான். பிறகு வீட்டிலேயிருந்து வெளியேற்றப்பட்டபோது, இங்கே வந்து சேர்ந்திருக்காவிட்டால், கடந்த மழைக்காலத்திலே, தெருமண்ணிலே கிடந்து அவலமாய்ச் செத்திருக்கணும். அப்படிச் சாகாமல் பிழைத்திருக்கிற அம்மாவை நீங்க வந்து பாருங்க. ''என் மகன் வந்து என்னைப் பார்த்த பிற்பாடுதான் நான் கண்ணை மூடப்போகிறேன்'' என்று சொல்லிக்கிட்டு இருக்கிறாங்க. அப்பேர்ப்பட்ட தாயை ஒருவாட்டி வந்து பாருங்க. அதுக்குப் பிறகு, நீங்க உங்க தர்மத்துக்காகச் செய்யவேண்டியதைச் செய்து கொள்ளுங்க.

பாப்பு: (படபடப்பு அடங்கி, சோர்ந்துபோய்க் கத்தியை உறையில் செருகிக்கொள்ளுகிறான்.) ஆயிஷா! நீ என்னைக் கொன்று விட்டாய். ஒரு முஸல்மான் வலுவற்றவனாகிவிடக்கூடாது. ஆனால், நான் இப்பொழுது வலுவிழந்தவனாகிவிட்டேன்.

ஆயிஷா: அண்ணா! கண்டவங்க தாறுமாறாப் பேசி உங்களைக் கலைச்சுவிட்டிருக்காங்க. கொஞ்சம் நாங்களும் சொல்லிக் கொள்ளத்தானே வேணும்? நீங்க போய்க் கொஞ்சகாலம் தானே ஆகியிருக்குது? முந்தியெல்லாம் இங்கே பிறந்து வளர்ந்துவந்த காலத்திலே ஊரெல்லாம் ஒத்துமையாய் இருந்ததையும், நம்பகமாய் இணைந்து இருந்தவங்களையும் மறந்துபோய், இப்போது எங்களையும் 'காபிர்' களாகிவிட்டதாக நினைச்சுத்தானே, அண்ணா, நீங்க அவங்களோடுகூடத் தங்கியிருக்கிறீங்க?

பாப்பு: என்ன இருந்தாலும் நீங்க செய்தது தவறுதான். உங்களுக்கு வீடு ஏதும் கிடைக்கவில்லையானால், தெருவிலே கிடந்து செத்தாலும் பரவாயில்லை. இங்கே உள்ள முஸ்லீம்கள் அந்த நிலைமையைப் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டாங்க.

ஆயிஷா: அண்ணா! நம் அப்பா அதைச் செய்யவில்லை, எங்க புத்தி அவ்வளவு மோசமாக இருக்கலாம்; அண்ணனுடைய கடமை அதோடு தீர்ந்துபோயிடிச்சா? அந்த ஆளு—அந்த முதலாளி போக்கரு இருக்கிறானே, அவன் மனிதன் இல்லை; மிருகத்திலும் கேடுகெட்டவன். வஞ்சகப் பேய் மகன்.

பாப்பு: ச்சே! அந்த ஆளைப்பத்திப் பேசாதே. அவர் இல்லாத போனுல், இந்த நாயர்கள் நம்ப வீட்டையும் பறித்துக்கொண்டிருப்பார்கள்.

ஆயிஷா: எதைப் பறித்துக்கொள்ளணும்?

பாப்பு: நம்ப வீடு, மனை இரண்டையும்தான். நிலத்தோடு அவைகளையும் இவங்களுக்கு உரிமையாக்கிக் கொடுக்க நிச்சயப் படுத்தியிருக்கீங்க, இல்லையா?

ஆயிஷா: (கோபக் குரல்) இது உங்களுக்கு யார் போதிச்சது? அபாண்டம்! பொய்! அக்குருமம்!

பாப்பு: ஒருவேளை, நீ இப்போது சொல்லுகிறது பொய்யாக இருக்கும்; இல்லை, போக்கர்தான் பொய் சொல்லியிருக்கிருரோ என்னவோ?

ஆயிஷா: அப்படியானுல், இதே மாதிரிதான் பொய்யும் புளுகுமாக எல்லாத்தியும் திரிச்சுச் சொல்லியிருக்கிருன் பாவி.

பாப்பு: அது போகட்டும், எல்லாம் தானே தெரிந்துபோகும். நீ இதுக்குப் பதில் சொல்லு. நம் நிலத்தை இவங்க ஏன் வசப் படுத்திக்கொண்டிருக்காங்க?

ஆயிஷா: (பதைப்புடன்) நம்ப நிலத்தை வசப்படுத்திக் கொண்டாங்களா! இதென்ன பேத்தல்!

பாப்பு: எனக்குத் தெரியாதின்னு நினைச்சியா? இந்தவாட்டி சாகுபடி நம் பங்குக்கு, குத்தகையாகத்தானே நடந்திருக்கு?

ஆயிஷா: பொய்! எல்லாம் பொய்! அண்ணு! யாருக்கும் குத்தகைக்கு விடவில்லை; குத்தகையும் எடுக்கவில்லை; இப்பவும் நம் நிலம் நம் வசத்திலேதான் இருக்கு, அவங்களும் நம்மோடு சேர்ந்து சாகுபடி செய்கிருங்க. அண்ணன் போன பிறகு, அப்பாருக்கு யார் உதவிக்கு இருந்தாங்க? கிடைக்கிற கண்டு முதலிலே எல்லாருக்கும் சரிசமமாய்ப் பங்கு என்று தீர்மானமாயிருக்கு. வேலு நிலம் இருக்குதில்லையா? அது இப்போ அவன் கையைவிட்டாப் போயிடிச்சு?

பாப்பு: எனக்கு என்னவோ சந்தேகமாகத்தான் இருக்கிறது. எதுக்கும் அப்பாவைப் பார்த்து நான் பேசணும்.

ஆயிஷா: அண்ணு! உங்களைப் பிடிச்சிருந்த சைத்தான் இப்போ விட்டுடிச்சு (கண்களை துடைத்துக்கொள்ளுகிருள்).

பாப்பு: நீ என்னை என்னவோ செய்துவிட்டாய் ஆயிஷா! என்னவென்று சொல்லத் தெரியவில்லை. (கண்களை ஒத்தித் துடைத்துக்கொள்ளுகிருன்.) அம்மா எங்கே? முதலிலே அம்மாவைக் காணப் போகலாம் வா!

[இருவரும் வீட்டுப் பக்கம் போகிருர்கள்.]

# களம்: 4

## காட்சி 1

*[பத்திரம் எழுதுகிற இடம். பகல் 12. நம்பியார் எழுதுகிறார். போக்கர் வருகிறார்.]*

**போக்கர்:** நம்பியாரே! நம்பளை அந்தப் பாப்பு ஏமாத்திப் பிட்டானே.

**நம்பியார்:** (எழுதுவதிலிருந்து கண்ணை எடுக்காமல்) என்ன?

**போக்கர்:** நான் அன்னைக்கே சொல்லலியில்லை பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்யவேண்டாம்ண்டு. இப்போ, அந்த மனையும் வீடும் அவனுக்கே போய்ச் சேரும்படி செய்துவிட்டீகளே. அவன் இப்போ நம்ப எதிரிங்க கூட்டத்திலே போய்ச் சேர்ந்து கொண்டு விட்டாங்கறேன்.

**நம்பியார்:** அப்படியா?

**போக்கர்:** பின்னே? என்னமா சதி செய்து ஏமாத்திவிட்டான்! 'நான் பெரிய முஸ்லீமாக்கும்; அப்பாரு செய்ததெல்லாம் நம் மஜஹப்புக்கு (மதத்திற்கு) எதிராக்கும்; ஆணையாக்கும், சேனையாக்கும்—என்றெல்லாம் சொல்லிவிட்டு, பத்திரத்தையும் சாலக்காய்ப் பறிச்சுக்கிட்டு இப்போ நமக்கே வெடிவைச்சிட்டானே.

**நம்பியார்:** இப்போது அவன் எங்கே தங்கியிருக்கிறான்?

**போக்கர்:** எதிராளிங்க கூடவேதான். அநியாயக்காரங்க கூட்டத்திலே சேர்ந்தது அவனுக்கு லாபமாப் போயிடிச்சு. கையிலே வீடு வந்ததும் அந்தப் பக்கம் போய்ச் சேர்ந்துவிட்டான்.

**நம்பியார்:** வீட்டை நாம் போய் வசப்படுத்திக்கொண்டுவிடலாம். பத்திரம் இன்னும் ரிஜிஸ்தர் ஆகி, அமலுக்கு வரவில்லை என்று சொல்லிவிடலாம்.

**போக்கர்:** உங்க கையிலே அவன் கொஞ்சம் பணம் கொடுத்தான் இல்லையா, பத்திரம் எழுதுகிறபோது எனக்குக் கொடுக்க? அவனுக்கு நம்பிக்கை ஏற்படட்டும் என்று நான் அன்றைக்குப் பணத்தை உங்க கையிலேயிருந்து வாங்காமல் இருந்தேன்; உங்க கையிலேயே வைச்சிருங்க என்று கண்

ஜாடைகூடக் காட்டினேனே. அந்த பணத்தை என்னிடத் திலே கொடுத்துவிடுங்க. வந்ததும் தெரியவேண்டாம், போனதும் தெரியவேண்டாம்.

நம்பியார்: அதை எப்படி உங்களிடத்திலே தந்துவிடமுடியும்? நீங்க 'எனக்கு வேண்டாம்'னு அவன் காது கேட்கச் சொன் னீங்களா இல்லையா? அவனிடத்திலே அத்தொகையை நான் திருப்பிக்கொடுக்க வேண்டாம்?

போக்கர்: (இயல்பு மாறி) நம்பியாரே! எனக்குக் கொடுக்கும்படி சொல்லி அவன் உங்களிடத்திலே கொடுத்தானு இல்லையா?

நம்பியார்: நீங்க அதை வேண்டாம்னு சொன்னீங்களா இல்லையா?

போக்கர்: (உரக்க) எங்கிட்டே விளையாட வேண்டாம். இந்தப் போக்கருக்கு அதை எப்படி வாங்கணுங்கறது நல்லாத் தெரியும்; இதை நீங்க புரிஞ்சுக்கணும்.

நம்பியார்: அப்படியானுல் கொடுக்கல்—வாங்கல் இரண்டும் சரி யாகத்தான் இருக்கு. நீங்க வெளியே நின்றுகொண்டு கூச்சல் போட்டுக்கொள்ளுங்க; இங்கே வேண்டாம். நீங்க முதலாளியாய் இருந்தால் எனக்கொண்ணும் பயம் கிடை யாது. இது வெறும் பொல்லாத்தனமாக்கும்!

போக்கர்: (துள்ளியெழுந்து, நம்பியாரின் கழுத்தைப் பிடித்துத் தள்ளி) வஞ்சகப் பயலே! நீ என்னை ஏமாத்திப்பிடலாம்டா நினைச்சிருக்கே? கீழே வையடா என் பணத்தை!

[நம்பியார் எதிர்த்து நிற்கிறுர். அடிதடிகள். கூட்டம் கூடிவிடுகிறது.]

## காட்சி 2

[கிராமத்துப் பாதை. பகல் நேரம். வாரியரும் பறங்கோடன் நாயரும் எதிர் எதிராக வந்து சேரு கிறுர்கள்.]

வாரியர்: அடே! பறங்கோடன் நாயரா? ரொம்ப நாளா யிடிச்சே உன்னைப் பார்த்து. அப்புறம் அண்ணிக்கு என்ன முடிவாச்சு?

பறங்கோடன்: முடிவு என்ன? அன்னிக்கும் அங்கேயே கிடந்தேன்; மறுநாளும் அங்கேயே கிடந்தேன். அதுக்கு அடுத்த நாள் ஸ்ரீதரன் நாயருடைய தம்பி இல்லை? அந்த ஆளு வந்தாரு.

நான் 'ஹோன்னு' கத்தி அளுதேன். காரியம் ஆகணும்னுக்கி களுதையினுடைய காலைப் பிடிக்கவும் தயங்கக்கூடாது. நல்ல காலம், அன்னிக்கு ஜெயிலிலேயிருந்து வெளியே வந்தேன்.

வாரியர்: இப்போ அபூபக்கர் குடும்பத்தோடே ஸ்ரீதரன் நாயருடைய வீட்டிலேதான் இருக்கிருரு.

பறங்கோடன்: ஆ! அதனுலே என்ன? நான் இப்போ அங்கேயிருந்து தான் வருகிறேன். சும்மா, மாப்பிளாக்காரன்னு சொல் லிட்டா ஆயிடுமா? என்ன ஒழுங்கு, என்ன ஒத்துமை, எவ்வளவு மனசு சுத்தம் தெரியுமா!

வாரியர்: பேசுகிறதைப் பார்த்தால் நீங்களும் தொப்பி மாட்டிக் கொண்டு விடுவீங்கன்னு தோணுது.

பறங்கோடன்: அந்த நல்ல தன்மையெல்லாம் தொப்பி போட்டா லும் நமக்கு வராதைய்யா! நல்லவங்க எல்லாருமே தொப்பி போட்டவங்கதான். நீங்களும் உங்க சைத்தான் நம்பியார் இல்லே, அவனும்தான் தொப்பி போடாதவங்க.

வாரியர்: (வியப்படைந்து) அட தெய்வமே! அந்தத் தொப்பிக் காரரிடத்திலே அப்படி என்னதான் மயக்கிற வித்தை இருக்கிறதோ, தெரியல்லேயே. அன்னிக்கு நீங்கதானே சொன்னீங்க, ''கலிகாலம், குட்டிச்சுவராய் போகிற காலம், அப்படி, இப்படி . . .'' என்றெல்லாம்.

பறங்கோடன்: ஆமாம்! நான் அன்னைக்கு அப்படித்தான் சொன் னேன். நிலைமையைப் புரிஞ்சுக்காமலே பேசின பேச்சு அது. அதுக்காகத்தானே, நான் உள்ள காசையெல்லாம் செலவு செய்து, ராமேசுவரம் போய் முழுகி, சாமி கும்பிட்டுவிட்டு வந்திருக்கிறேன். பகவானே! எனக்கு இனிமேலே அந்த மாதிரிப் பாவ புத்தி தோணவேண்டாம்.

வாரியர்: ஆ! . . . ஆஹா! நீங்க திருத்தல யாத்திரை போய்விட்டு வந்திருக்கீங்கன்னு சொல்லுங்க. அஸ்ஸலான க்ஷேத்ராடன மாக்கும்!

பறங்கோடன்: இப்போ இதையும் சொல்லிவைக்கிறேன், கேட்டுக் கொள்ளுங்க. எப்படியும் நாங்க தொப்பி போட்டுக் கொண்டவங்கதான். அபூபக்கருடைய நிலத்துக்குக் கிழக்கே உள்ள பங்கிலே நான் சீரகச் செம்பா விதைச்சிருக்கிறேனே, அதுவும் அவங்களுடைய கூட்டுப் பண்ணையிலே சேர்ந்தாகி விட்டது.

வாரியர்: அது சரி! இப்போதான் விசயம் தெரியவருது. லாப முள்ள திக்கிலேதானே பறங்கோடன் சாய்வாரு!

பறங்கோடன்: வேணுமானுல் நீங்களும் வந்து சேர்ந்துகொள்ளுங்க. அதுக்கும் பக்கத்திலே உள்ள நிலம் உங்களது. வாயிலே வந்தபடி பேசிக்கிட்டிருந்தால் வயத்துக்குக் கிடைத்துவிடாது. மேலும் அவங்க நல்லவங்க; எல்லாருக்கும் லாபம், நன்மை எல்லாம் ஏற்படணும்னு நினைக்கிறவங்க.

வாரியர்: ஆகட்டும். யோசனை செய்துபார்க்கிறேன்.

## காட்சி 3

*[கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த களத்துமேடு. நெல் குவியல்கள் அம்பாரங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆயிஷா காற்றில் நெல் தூற்றுகிருள். பார்வதி பின்பக்கம் நின்று முறத்தால் வீசிக்கொண்டிருக்கிருள்.]*

ஆயிஷா: நீங்க என்ன இப்படித் தொத்தலாய் இருக்கீக? கையிலே வலு இல்லே? இப்படி இருந்தால், எங்க 'காக்கா'வைக் (அண்ணனை) கட்டிக்கிடலாமிங்ற ஆசையை விட்டிட வேண்டியதுதான்.

பார்வதி: (சிரித்துவிட்டு) இங்கே யாரும் உங்க காக்காவையும் கட்டிக்க ஆசைப்படவில்லே, குருவியையும் கட்டிக்க ஆசைப்படவில்லே. கல்யாணம் கட்ட மனிசங்களே கிடைக்காத காலமாகவா போயிடிச்சு?

ஆயிஷா: (வேடிக்கையாக) பின்னே? 'காக்கா'ண்டு சொல்லாமே 'சேட்டன்'ண்டா சொல்லணும்? சேட்டனுவது, ஏட்டனுவது? நாங்க யாரும் சேட்டனேயோ (மூதேவி பிடித்தவன்) மூட்டனேயோ (மூட்டைப் பூச்சி) கட்டிக்கொள்ளத் தயாராயில்லே!

[இருவரும் சிரிக்கிருர்கள்.]

பார்வதி: ஆ! அப்படியானு, உனக்கு ஒருத்தியினுடைய ஏட்டனைக் (அண்ணனை) கட்டிக்கொள்ளணுங்கற எண்ணம் இருக்கு, இல்லையா?

ஆயிஷா: (திரும்பி நின்றுகொண்டு) நீங்க இன்னிக்கு இப்படியெல்லாம் கண்டபடி பேசி, வேலையை மெனக்கிட வைக்கத்தான் வந்திருக்கீங்களா?

பார்வதி: அது போகட்டும், ஆயிஷா! கொஞ்சம் நானுந்தான் தெரிந்துகொள்ளுகிறேனே?

ஆயிஷா: (சிரிப்பை அடக்கிக்கொண்டு) இப்போ, இந்தப் பொண்ணு என்னதான் சொல்லுது?

பார்வதி: நெல்லே வாரி எடு! சல்தியாய் ஆகட்டும். அண்ணன் வந்தால் திட்டு வாங்கிக்கவேண்டியவள் நான்தான். உன்னே ஒண்ணும் சொல்லமாட்டாரு.

[ஓரக்கண்ணுல் ஆயிஷாவைப் பார்க்கிருள். இருவரும் கலகலவென்று சிரிக்கிருர்கள். பிறகு, முன்போல் நெல் தூற்றுகிருர்கள்.]

பார்வதி: அப்போ, உன் கல்யாணம் என்னேக்கு நடக்கப் போகிறது?

ஆயிஷா: 'நிக்காஹ்' (திருமணம்) செய்ய ஆள் வந்து சேருகிறபோது.

பார்வதி: எந்த ஆள் வந்தாலும் சரிதாஞ, ஆயிஷா?

ஆயிஷா: உம். யாராக இருந்தாலும் சரி. அப்பாருடைய தடிக்கம்பு எவர் முதுகிலேயும் தாராளமாய் விழும்.

பார்வதி: என்னிக்கு உன் அண்ணன் ஊருக்குப் போகப்போருரு?

ஆயிஷா: அதிலே உனக்கு என்ன அவ்வளவு அக்கறை, எங்களேக் 'காபிர்'காரங்களாக்கினது போருது. இனி அண்ணனேயும் ஆட்டிவைச்சு வேடிக்கை பார்க்கலாம்னு ஆசையா?

பார்வதி: அந்த அண்ணன் ஊருக்குப் போனுல் இந்தத் தங்கை எங்களுக்குக் கிடைப்பாளே என்றுதான் நினேக்கிறேன். நம்பியாரிடத்திலே அடகு வைத்திருந்த உன் நகையெல்லாம் மீட்டாகிவிட்டதா?

ஆயிஷா: அப்பாரு எங்கே மீட்டுக்கொள்ளப் போகிருரு? அதெல் லாம் அந்த நம்பியாருக்கிண்டு தொலேச்சாயிடிச்சு. அவருக்கும் போக்கருக்கும் அடிதடி நடந்திடிச்சின்னு கேள்விப்பட்டேன். எல்லாம் நம்மக் கேசு பேரிலே ஏற்பட்ட சச்சரவுதானும்.

பார்வதி: ஆமாம்! கேசு நடத்துகிற சுகத்தை அந்த ஆளும் அறிந்துகொள்ளணும் இல்லேயா?

ஆயிஷா: இதெல்லாம் ஒண்ணும் போதாது. அவங்க இரண்டு பேரையும் சைத்தான் பிடிக்கப் போவுது.

பார்வதி: போக்கர் உங்க வீட்டைக்கூடத் திருப்பித் தந்து விட்டாரில்லேயா? அந்த ஆளே ஏதுக்காகச் சைத்தான் பிடிக்கணும்?

ஆயிஷா: அதனாலே எங்களுக்கு என்ன லாபம்? அப்பாரு அந்த வீட்டுப் படி ஏறமாட்டாரே. உங்க அண்ணன்மார்தான் புதிசாய் வீடு கட்டிக்கொண்டிருக்காங்களே.

பார்வதி: எப்படி இருந்தாலும், இனி சங்கடமெல்லாம் தீர்ந்தது என்றுதான் தோணுது.

ஆயிஷா: புதிய வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாலும், நானும் அண்ணனும் உங்ககிட்டே வந்தாகணும்.

பார்வதி: ஏன்? என்ன விசயம்?

ஆயிஷா: (புன்சிரிப்புடன்) உங்களைக் காண்பிக்கத்தான்.

பார்வதி: அப்படிச் சொல்லு! எதையாவது சொல்லி, தம் மனசிலே இருக்கிற விருப்பத்துக்கு ஒரு கோடி காட்டுகிறே யில்லே நீ, ஆயிஷா?

ஆயிஷா: (நடவுப் பெண்கள் உடை மாற்றிக்கொள்ளும் மறைவிடமான 'அணியறை'ப் பக்கம் பார்த்து) அதுக்கில்லே; என் கன்னுக்குட்டி எங்கே போயிறிச்சு?

பார்வதி: நான் போய்ப் பார்த்துவிட்டு வர்றேன். இப்போ காற்று வீசுது; தவறவிடாமே காரியத்தைப் பாரு. 'காற்றுள்ள போதே . . .' (விஷமச் சிரிப்பு).

[பார்வதி முறத்தைக் கீழே வைத்துவிட்டுச் செல்லுகிறாள். ஆயிஷா தனியாகவே நெல் தூற்றிக்கொண்டிருக்கிறாள். பின்பக்கமாக, சுகுமாரன் வந்து முறம் விசுகிறான். ஆயிஷாவுக்கு இது தெரியாது.]

ஆயிஷா: (ஆள் மாறாட்டத்தை அறியாமல்) பாரு! கன்னுக்குட்டி தென்பட்டுதா?

சுகுமாரன்: ஊம்.

ஆயிஷா: சாயந்திரத்துக்கு வர்றியா இல்லையா? அப்பாரும் மத்தவங்களும் எப்போ வரப்போறாங்களோ? இப்போ வந்தாலும் வருவாங்க, இல்லே?

சுகுமாரன்: ஊம்.

ஆயிஷா: உங்கள் அண்ணன் இங்கே ஏதுக்காக வருகிறாரு? அவருக்கு பாட்டு எழுதுகிறதைத் தவிர, சாகுபடி—அறுவடைகளிலே அநுபவம் உண்டோ?

சுகுமாரன்: ஓ! . . . ஊஹூம்.

ஆயிஷா: பின்னே ஏதுக்கு இங்கே அவரு வர்றாரு?

சுகுமாரன்: *(அவள் பேச்சுக்கு ஏற்றவாறு)* கன்னிப் பெண்ணைக் காணனுங்கற ஆசைதான்.

*[ஆயிஷா சட்டென்று திரும்பிப் பார்க்கிருள். முறத்தைத் தாழ்த்தி, நாணத்துடன் ஒதுங்கி நிற்கிருள். பார்வதியைத் தேடுவதுபோல் பார்க்கிருள்.]*

ஆயிஷா: ஆ! நீங்க இரண்டுபேரும் ஒக்குமத்தா இருந்து செய்திருக்கிற வேலையா இது?

சுகுமாரன்: *(சிரித்துக்கொண்டு)* யார் இரண்டு பேரும்? நான் ஒண்டியாத்தானே இருக்கிறேன்.

ஆயிஷா: உங்க தங்கை இங்கே இருந்தாங்களே.

சுகுமாரன்: *(கொஞ்சம் நகர்ந்து நின்று நாலாபக்கமும் பார்த்து)* தங்கையா?

ஆயிஷா: *(அதே குரலில்)* 'தங்கையா?' உங்களுக்குத் தெரியாது, இல்லே?

சுகுமாரன்: நான் களத்துமேட்டுக்கு வந்தேன். வேலே இருந்திச்சு. பொம்புள்ளேயைத் தேடிக்கிட்டு நான் வரவில்லே.

ஆயிஷா: அப்படியானுல் வேலையா செய்துகிட்டிருக்கீக? கண்ட பெண்ணுங்க பின்னுலே நிக்கிறீக!

சுகுமாரன்: இப்போ நீ ஒரு பெண்ணு?

*[ஆயிஷா அடுக்கி வைத்திருக்கும் தாள் கட்டின்மேல் உட்காருகிருள்.]*

சுகுமாரன்: நான் முறமெடுத்து வீசியது வேலே இல்லேயா?

ஆயிஷா: அந்த வேலேக்குத்தான் பார்வதியம்மா இங்கே நின்னுக்கிட்டு இருந்தாங்களே. இப்போ அவங்க எங்கே போயிருக்காக? என்னுலே ஆகாது இந்த வேலேயெல்லாம். முறம் வீச ஆளில்லாமே எப்படி நெல் தூத்தறதாம்? அப்பாரு வரட்டும்!

சுகுமாரன்: நல்ல வம்பு இது! நான் முறம் வீசிக்கொண்டிருந்தேனே. அப்ப, இன்ன வேலேயை இன்ன ஆள்தான் செய்யணும்னு உண்டா?

ஆயிஷா: பழக்கம் உள்ளவங்க செய்யணும். உங்களுக்கு முறம் பிடிக்கவே தெரியல்லியே! பழக்கம் எப்படி வரும்?

சுகுமாரன்: சரி, அப்படியானுல் எனக்குத் தெரிந்த வேலேயாய்ச் செய்கிறேனே. தாள் கட்டுகளே அடுக்கி வைக்கட்டுமா?

*[ஆயிஷா உட்கார்ந்திருக்கும் கட்டுகளை உருவி இழுக்கிறான், அவள் சரிந்து விழப் பார்க்கிறாள்.]*

**ஆயிஷா:** *(எழுந்து சமாளித்து நின்றுகொண்டு)* நீங்க என்ன, இன்னிக்கு என் கைகால்களை முறிக்கலாம்ண்டு வந்திருக்கிகளா?

**சுகுமாரன்:** அப்போ, எழுந்திரு! நான் முறமெடுத்து வீசுகிறேன், நீ நெல்லைத் தூற்று.

**ஆயிஷா:** என்னாலே ஆகாது. நான் முறம் வீசறேன், நீங்க நெல் தூத்துங்க.

**சுகுமாரன்:** எப்படி இருந்தாலும் உனக்கு வேண்டாத குறைதான். சரி, வா.

*[சுகுமாரன் முறத்தில் நெல் அள்ளித் தூற்றுகிறான். ஆயிஷா முறமெடுத்து வீசுகிறாள். நடுவே முறத்தால் அவன் முதுகில் அடிக்கிறாள். சுகுமாரன் திரும்பிப் பார்க்கிறான்.]*

**ஆயிஷா:** அடேடே! நான் காக்கையைப் பார்த்துக்கிட்டிருந்தேன்.

**சுகுமாரன்:** *(ஒரு பிடி நெல்லை வாரி, ஆயிஷாவின் துணி கட்டிய தலையில் எறிகிறான்.)* அப்படியானால் அந்தக் காக்கை இதைத் தின்னட்டும்.

*[ஆயிஷா ஒதுங்கி நிற்கிறாள். பார்வதி வருகிறாள். சுகுமாரன் முறத்தைக் கீழே வைத்துவிட்டு, தாள் கட்டுகளை அடுக்குகிறான். பார்வதி ஆயிஷாவைப் பார்த்து உரக்கச் சிரிக்கிறாள்.]*

**ஆயிஷா:** *(தலைத் துணியை அவிழ்த்து, நெல்மணிகளை உதறிவிட்டு)* என் தலையிலே இன்னும் நெல் ஒட்டிக்கொண்டிருக்குதா, பாருங்க!

**பார்வதி:** *(பார்த்து, நெல் மணிகளைத் தட்டிவிட்டபடியே)* தலையெழுத்தையும் பார்த்துக்கொள்ளட்டுமென்று நீ இனியும் நெல்லை அள்ளிப் போட்டுக்கொள்.

*[பார்வதி முறம் வீசுகிறாள். ஆயிஷா நெல் தூவுகிறாள். சுகுமாரன் கட்டுகளை அடுக்கிவைக்கிறான். அபூபக்கர் வேலு, ஸ்ரீதரன், பாப்பு—நால்வரும் வருகிறார்கள்.]*

**அபூபக்கர்:** இன்னுமா வேலை முடியவில்லை, மகளே? வேலைக்காரங்க போய்விட்டாங்களா?

பார்வதி: அவங்க பொழுதோடேயே போய்விட்டாங்களே. இவ்வளவுதான் பாக்கி. இதுவும் கொஞ்ச நேரத்திலே ஆகிவிடும்.

[வேலு, தூற்றியுள்ள நெல் குவியலைக் கண்டு வியப்புற்று நிற்கிறான்.]

பாப்பு: என்ன வேலு! வாயைப் பிளந்துகிட்டு நிற்கிறியே? வாயாலேயே அளந்துபிடலாம்கற எண்ணமா?

[எல்லாரும் சிரிக்கிறார்கள்.]

வேலு: அதுக்கல்ல, கொளந்தே! நான் யோசிக்கிறது என்னன்னு கேட்டா...

ஸ்ரீதரன்: என்ன வேலு, யோசிக்கிறே?

வேலு: வந்து என்னென்னு கேட்டீங்கள்னா, இவ்வளவு நெல்லையும் தெய்வம் நமக்குத்தானே கொட்டிக் கொடுத்திருக்கு, இல்லையா?

அபூபக்கர்: வேலு ஆச்சரியப்படறதும் சரிதான். இவ்வளவும் இந்த நிலத்திலே விளைஞ்சதுங்கறதை நம்பக்கூட முடியல்லே! வேலு! இது எவ்வளவு இருக்கும்?

வேலு: ஒரு தொள்ளாயிரத்து ஐம்பது—அதாவது ஆயிரத்துக் குள்ளாற இருக்கும்.

சுகுமாரன்: வேலு! கரெக்டா 986 பறை அளந்திருக்கிறேன், இனி, இதோ இருக்கிற கும்பாரத்திலே குறைஞ்சது பதினைந்து பறையாவது இருக்கும்.

ஆயிஷா: அப்புறம், அதோ அந்தக் குப்பலைக் கணக்கிலே சேர்க்க வேண்டாமா?

அபூபக்கர்: கொடுக்கறவன் கொடுத்தால் அளக்க முடியாமேதான் கொடுப்பான். இதிலே வேலு பங்குக்கு எத்தனை பறை சேரும்?

ஸ்ரீதரன்: சரியாய் மூணிலே ஒரு பாகம். நிலத்தின் அளவும் அப்படித்தானே?

வேலு: (சிரித்துக்கொண்டு) போன சாகுபடியிலே எனக்குக் கண்டு முதல் 98 பறை!

அபூபக்கர்: ஹ்ஹூம். நம்பளுக்கு 150 பறைகூடத் தேறல்லே, போனக் கன்னி மாஸ (புரட்டாசி) அறுவடையிலே.

ஸ்ரீதரன்: ஏதோ நல்ல காலம். கடவுள் நம்மைக் காப்பாத்திட்டாரு.

பாப்பு: *அதேதான். நம்பளை நிச்சயம் காப்பாத்துவாரு!*

அபூபக்கர்: வேலுக்குப் போக, பாக்கிப் பங்கிலே குளந்தைங்களா, ஆறும்—நாலுமாய்ப் பிரிச்சுக்குவோம். ஆறு பங்கு உங்களுக்கு; நாலு எங்களுக்கு.

ஸ்ரீதரன்: *அதெப்படி? சரிசமமாய் இருக்கணுங்கறதுதானே நாம் செய்த தீர்மானம்?*

வேலு: அதுதான் மாப்பளே! அப்படித்தானே நிச்சயம் செய்து கொண்டோம்.

அபூபக்கர்: *அது சரியில்லை. நீங்க சின்னப் புள்ளைங்க. பெரியவங்க காதிலே விளுந்தால் என்னைத்தான் ஏசுவாங்க. இல்லையா பாப்பு?*

பாப்பு: *ஆமாம் அப்பா! அவங்கதானே நிலத்துக்குச் சொந்தக் காரருங்க; மேற்கொண்டு உழைத்துப் பாடுபட்டிருக்காங்க.*

ஸ்ரீதரன்: *என்னங்க இது? நாம்தான் மிராசுதார்—குடியானவன் என்கிற ஏற்றத்தாழ்வை நாடு கடத்திவிட்டோமே? இங்கே இப்போது உள்ளவங்க எல்லாரும் மனிதர்கள்—அவ்வளவு தான். விதையும் நாத்தும் உங்களுடையது; சாகுபடி அநுபவமும் உங்களுடையது. அதனாலே தீர்மானித்தபடி சரிசமமான பங்குதான். எனக்குக் கூடுதல் லாபமா? ஊஹூம்! தீர்மானத்தை மீறி நான் நடக்கமாட்டேன். என்ன சுகுமாரா?*

சுகுமாரன்: *நமக்கு ஒரு மணி நெல்கூட அதிகம் வேண்டாம். இவ்வளவுமே இவங்க பாடுபட்டு விளைய வைத்ததுதானே?*

அபூபக்கர்: *அது சரியில்லை, புள்ளைங்களா!*

வேலு: இந்தப் பாருங்க, நீங்க வீணாய் வாக்குவாதம் பண்ணிக் கிட்டு இருக்கவேண்டாம். நீங்க உங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளுங்க, போதும், பாக்கி இருக்கிறது இப்படி இங்கேயே கிடக்கட்டும். சாவகாசமாய் இந்த வேலு வந்து எடுத்துக்கொண்டு போய்ச் சேருவான்.

*[எல்லாரும் சிரிக்கிறார்கள்.]*

ஸ்ரீதரன்: *ஈசுவரா! பெரியவர்கள் விட்டுப் போன நிலம் இது. அவர்கள் வகுத்து வைத்த எல்லை—வரப்புகளையெல்லாம் நாங்கள் வெட்டி விசாலமாக்கிவிட்டோம். அந்தத் தடையான வரப்புகள்தான் வயலுக்கு நீர் பாயாமல் தடுத்து வந்தன. எங்களுக்கு இப்போது உண்மை தெரிந்துவிட்டது.*

பாப்பு: *ஸ்ரீதரன் நாயரே! நீங்கள் மதங்களுக்கு இடையே இருந்த—தடை வரப்புகளையும் அகற்றிவிட்டீர்கள். நன்றே செய்*

தீர்கள். இருந்தாலும் எங்காவது நீர்க்கசிவு ஏற்படலாம். பிளவும் தடையும் தலைதூக்காமல் இருக்கவேண்டுமே.

ஸ்ரீதரன்: பாப்பு! அந்தச் சாதனையில் நாம் முழுவதும் வெற்றி பெறவில்லை. கடவுள் நமக்கு எந்நிலையிலும் துணை புரியட்டும்! இந்தக் கூட்டுறவுச் சாகுபடியைப் போலவே, மதத் துறையிலும் நாம் கூட்டுறவைக் கையாளவேண்டும். ஆனால் அதற்கு இன்னும் சூழ்நிலை சரிப்பட்டு வரவில்லை.

சுகுமாரன்: சாகுபடி செய்கிற விவசாயி துணிந்து இறங்கினால் அதன் சூழ்நிலையும் சரிப்பட்டுப் போகும். அதுவும் ஒரு விளை நிலம் போலத்தானே!

[ஆயிஷா நம்பிக்கையுடன் சுகுமாரனைப் பார்க்கிறாள். சுகுமாரனும் அவளை அவ்விதமே நோக்குகிறான்.]

ஸ்ரீதரன்: அதற்கு விவசாயிகள் மட்டும் போறாது. தெய்வமும் துணை புரியவேணும். அதற்கான பக்குவம் ஏற்படக் கொஞ்சம் காலம் ஆகும்; காத்திருக்கத்தான்வேண்டும். நாம் அவசரப் படக்கூடாது (அபூபக்கரைப் பார்க்கிறான்).

அபூபக்கர்: அதும் சரிதான், புள்ளைங்களா! நாம்ப காத்துத்தான் இருக்கணும்.

ஸ்ரீதரன்: நாம் காத்திருப்போம். பொறுமையாகவும் ஒற்றுமையாகவும் இருந்து காத்திருக்கவேண்டும். இந்தக் கூட்டுப்பண்ணையில் நாம் நிறைய விளைச்சலைக் கண்டமாதிரி, அடுத்த சாகுபடிக் காலத்தில், வளமான ஒரு புதிய தலைமுறையை நாம் உருவாக்குவோம். இது திண்ணம்!

[சுகுமாரனும் ஆயிஷாவும் நெட்டுயிர்ப்பு இடுகிறார்கள். அவர்களை மற்றவர்கள் ஜாடையாகக் கவனிக்கிறார்கள். இளம் அன்பர்கள் நாணித் தலை கவிழ்கிறார்கள்.]

அபூபக்கர்: (அந்த வாலிபனையும் தம் மகளையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, பக்தித் தழுதழுப்பு மேலிட) படைத்த பெருமானே! ஆண்டவனே! இனிமேலே இதற்கு என்ன வழி?

Indian Institute of Advanced Study
117382
14/12/04
SHIMLA

சாகித்திய அக்காதெமி 1954ஆம் ஆண்டு இந்திய அரசால் அமைக்கப்பெற்ற தேசிய இலக்கியக் கழகம். தன்னுரிமை கொண்ட இந்த ஸ்தாபனத்தின் கொள்கைகளை வகுக்கும் பொது சபை, பல இந்திய மொழிகள், ராஜ்யங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களின் பிரதிநிதிகள் கொண்டது. இதன் முதல் தலைவர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு. பின்னர் டாக்டர் S. ராதாகிருஷ்ணன் அவர்களும், டாக்டர் ஜாகீர் ஹுஸேன் அவர்களும் தலைமை வகித்தனர்.

இந்திய மொழிகளில் இலக்கியப் பணிகளை ஆதரவுடன் ஒருங்கிணைப்பது; எந்த ஓர் இந்திய மொழியில் இயற்றப்பட்ட இலக்கியமும் மொழிபெயர்ப்பு வாயிலாக நாட்டின் எல்லா மொழி வாசகருக்கும் எட்டச்செய்வது—இவையே அக்காதெமியின் செயல் திட்டங்கள்.

அக்காதெமியின் வெளியீடுகள் பெரும்பாலும் இந்திய மொழிகளில் உள்ளவையே. அதன் ஆங்கில மொழி வெளியீட்டுத் திட்டம் பொதுவாக இந்திய ஆசிரியர் மற்றும் இலக்கியம்பற்றித் தகவல் தரும் நூல்களை வெளியிடுவதேயாகும்.

Library IIAS, Shimla
T 891.481 22 N 143 K
00117382

SAHITYA AKADEMI
REVISED PRICE Rs. 15-00